




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:233 | 09-03-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

09.03.2026 மாசி 25
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.26

திதி:
இன்று இரவு 11.58 வரை
சஷ்டி பின்பு சப்தமி

நட்சத்திரம்:
இன்று மாலை 4.44 வரை
விசாகம் பின்பு அனுஷம்

யோகம் :
இன்று காலை 8.09 வரை
வ்யாகாதம் பின்பு ஹர்ஷனம்.

கரணம்
இன்று காலை 10.59 வரை
கரசை பின்பு இரவு 11.58
வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று மாலை 4.44 வரை
யோகம் சரியில்லை பின்பு
சித்த யோகம்

சந்திராஷ்டமம் :
இன்று மாலை 4.44 வரை
ரேவதி பின்பு அசுவினி.

நல்ல நேரம்
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
காலை 7.30 – 9.00.

எமகண்டம்
காலை 10.30 – 12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# டி20 உலகக் கோப்பை: 3-வது முறையாக இந்தியா சாம்பியன்!

**அகமதாபாத், மார்ச் 9:**

நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று நடைபெற்ற பரபரப்பான டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், நியூசிலாந்து அணியை வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இதன் மூலம் டி20 உலகக் கோப்பை வரலாற்றில் மூன்று முறை சாம்பியன் பட்டம் வென்ற முதல் அணி என்ற பெருமையையும், சொந்த மண்ணில் கோப்பையை வென்ற முதல் அணி என்ற சாதனையையும் இந்தியா படைத்துள்ளது.

டாஸ் வென்ற நியூசிலாந்து அணியின் கேப்டன் மிட்செல் சாண்ட்னர் முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

அதன்படி களமிறங்கிய இந்திய அணிக்குத் தொடக்க வீரர்களான சஞ்சு சாம்சன் மற்றும் அபிஷேக் சர்மா ஜோடி அதிரடியான தொடக்கத்தைக் கொடுத்தது.

அபிஷேக் சர்மா வெறும் 18 பந்துகளில் அரைசதம் அடித்து சாதனை படைத்தார். மொத்தம் 21 பந்துகளில் 52 ரன்கள் விளாசினார்.

மறுமுனையில் ஆடிய சஞ்சு சாம்சன் 46 பந்துகளில் 89 ரன்கள் குவித்து, டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஒரு வீரர் எடுத்த அதிகபட்ச ரன் என்ற சாதனையைத் தகர்த்தார். இஷான் கிஷன் 54 ரன்களும், சிவம் துபே 8 பந்துகளில் 26 ரன்களும் விளாச, இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 255 ரன்கள் என்ற இலக்கை நிர்ணயித்தது.

256 ரன்கள் என்ற கடினமான இலக்கை நோக்கி ஆடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. அக்சர் படேல் மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சில் அந்த அணியின் முக்கிய விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தன. நியூசிலாந்து தரப்பில் டிம் சீஃபர்ட் அதிகபட்சமாக 52 ரன்கள் எடுத்தார்.

பும்ரா 4 விக்கெட்டுகளையும், அக்சர் படேல் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி நியூசிலாந்தின் வெற்றிக் கனவைத் தகர்த்தனர்.

இறுதியில் நியூசிலாந்து அணி 159 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. கடைசி விக்கெட்டை அபிஷேக் சர்மா வீழ்த்த, இந்திய அணி தனது சாம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

இந்திய கிரிக்கெட்டின் இந்த மகத்தான வெற்றியை நாடு முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடி வருகின்றனர். உலகக் கோப்பை தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய வீரர்களுக்குப் பலரும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.



### முந்தைய டி20 உலகக்கோப்பை சாம்பியன்கள் விவரம்

இதுவரை ஒன்பது டி20 ஆடவர் உலகக் கோப்பைகளில் ஆறு வெற்றியாளர்கள் உள்ளனர். அந்த பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

2007 - இந்தியா
2009 - பாகிஸ்தான்
2010 - இங்கிலாந்து
2012 - வெஸ்ட் இண்டீஸ்
2014 - இலங்கை
2016 - வெஸ்ட் இண்டீஸ்
2021 - ஆஸ்திரேலியா
2022 - இங்கிலாந்து
2024 - இந்தியா



### பிரதமர் மோடி வாழ்த்து

அகமதாபாத்தில் நடந்த டி20 உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இந்திய அணி நியூசிலாந்து அணியை 96 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

இந்நிலையில், டி20 உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் மோடி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், டி20 உலகக் கோப்பை வென்ற இந்திய அணிக்கு வாழ்த்துகள்.

இந்த வெற்றி இந்திய அணியின் அசாத்திய திறன், உறுதி மற்றும் குழுப்பணியை வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு இந்தியரின் மனதில் பெருமையையும், மகிழ்ச்சியையும் இந்த வெற்றி கொடுக்கும் என பதிவிட்டுள்ளார்.



15 ரன்கள் கொடுத்து 4 விக்கெட் வீழ்த்தி வெற்றிக்கு வழிவகுத்த ஜஸ்பிரீத் பும்ராவுக்கு ஆட்ட நாயகன் விருது அளிக்கப்பட்டது.

இதேபோல், சஞ்சு சாம்சன் தான் ஆடிய 5 ஆட்டங்களில் 3 அரை சதங்கள் உள்பட 321 ரன்கள் குவித்தார். இதனால் அவருக்கு தொடர் நாயகன் விருது அளிக்கப்பட்டது.

## அரசியலமைப்பு எங்களுக்குத் தாய்ப் போன்றது: பிரதமர் மோடிக்கு மமதா பதில்!

**மேற்கு வங்கம், மார்ச் 9:**

அரசியலமைப்பு எங்களுக்குத் தாய்ப் போன்றது என பிரதமர் மோடியின் விமர்சனத்திற்கு மமதா பானர்ஜி பதில் தெரிவித்துள்ளார்.



குடியரசுத் தலைவரின் வருகையின்போது, அவரை வரவேற்க மேற்கு வங்க முதல்வரான மமதாபானர்ஜியோ அல்லது அரசு சார்பில் எந்தவொரு அமைச்சரோ செல்லவில்லை என்றும் திரிணமூல் காங்கிரஸ் அரசு மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

முன்னதாக, மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் அரசு குடியரசுத் தலைரை மட்டுமல்ல; நாட்டையும்அரசியலமைப்பையும் அவமதித்துள்ளதாகப் பிரதமர் மோடி குற்றஞ்சாட்டியிருந்தார்.

மேலும், நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தனியார் ஏற்பாட்டாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எதிர்பாராத விதமாக எது நிகழ்ந்தாலும் அது அவர்களுடைய தோல்வி. நாங்கள் குடியரசுத் தலைவருக்கும் அரசியலமைப்புக்கும் முழு மரியாதையைக் கொடுக்கின்றோம்.

ஏனென்றால், அரசியலமைப்பு எங்களுக்குத் தாய்ப் போன்றது. நாங்கள் அதை அவமதிக்கமாட்டோம். எங்கள் மீது எழும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் தேர்தல் நோக்கங்களுக்கானவை." எனத் தெரிவித்தார்.

## சபாநாயகர் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம்:பாராளுமன்றம் கூடுகிறது

**புதுடெல்லி, மார்ச் 9:**

சபாநாயகர் ஓம்பிர்லா மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ள நிலையில் பாராளுமன்றம் இன்று கூடுகிறது.

பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடா கடந்த ஜனவரி 28-ந்தேதி ஜனாதிபதி உரையுடன் தொடங்கியது. கடந்த 13-ந் தேதியுடன் முதல்கட்ட அமாவு முடிவு அடைந்தது. முதல்கட்ட அமர்வின்போது ராகுல் காந்தியை பேச அனுமதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுடன் பாராளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியை தொடங்கின. முன்னாள் ராணுவ தலைமை தளபதி எம்.எம்.நரவணேயின் வெளியிடப்படாத சுயசரிதை நூல் சர்ச்சை, இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் ஆவணங்கள் விவகாரம் எனப் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி, மத்திய அரசுடன் எதிர்க்கட்சிகள் மோதல் போக்கை கடைபிடித்தன.

கடந்த 3-ந்தேதி மக்களவையில் காகிதங்களை கிழித்து அவைத் தலைவா இருக்கையை நோக்கி வீசியதற்காக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 8 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனா. சபாநாயகர் ஓம் பிர்லா முற்றிலும் ஒருதலைபட்சமாக செயல்படுவதாக குற்றம்சாட்டி, அவரைப் பதவி நீக்கம் செய்யக்கோரி தீர்மானம் கொண்டுவர காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தரப்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டது.



இந்த பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்றம் நாளை கூடுகிறது. பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-ம் கட்ட அமர்வு நாளை முதல் ஏப்ரல் 2-ந்தேதி வரை நடக்கிறது. பாராளுமன்ற கூட்டத்தின் முதல் நாளிலேயே மக்களவையில் சபாநாயகர் ஓம்பிர்லா மீதான பதவி நீக்க தீர்மான விவாதம் நடைபெறும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றே தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடைபெறும் என்று தெரிகிறது.

இந்த தீர்மானத்தை காங்கிரஸ் எம்.பி.க்களான முகமது ஜாவத், கே.சுரேஷ், மல்லு ரவி ஆகியோர் முன்மொழிகிறார்கள். இந்த தீர்மானம் மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பின் போது அனைத்து உறுப்பினரும் அவையில் கட்டாயம் இருக்க வேண்டும் என்று பா.ஜ.க., காங்கிரஸ் கட்சிகள் தங்கள் எம்.பி.க்களுக்கு கொறடா மூலம் உத்தரவை பிறப்பித்துள்ளன. அரசமைப்பு சட்டத்தின் 94சி பிரிவின் கீழ் பெரும்பான்மையான வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றி சபாநாயகரை பதவி நீக்கம் செய்ய முடியும். தற்போது பா.ஜ.க. கூட்டணிக்கு 293 எம்.பி.க்கள் உள்ளனர். கடந்த காலங்களில் பாராளுமன்ற மக்களவை சபாநாயகர்களாக இருந்த ஜி.வி. மாவலங்கர் (1954), ஹுக்கம் சிங் (1966), பல்ராம் ஜாக்கர் (1987) ஆகியோர் இதேபோல் நம்பிக்கையில்லா தீர்மானத்தைஎதிர்கொண்டனர். ஆனால் எந்த தீர்மானமும் வெற்றி பெறவில்லை. தற்போது எம்.பி.க்கள் பலத்தின் அடிப்படையில் ஓம்பிர்லாவுக்கு எதிரான தீர்மானமும் தோல்வியை சந்திக்கும்.

இந்த கூட்டத்தொடரில் பல்வேறு பிரச்சனைகளை கிளப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

மேற்கு ஆசியா நிலவரம் குறித்தும், இந்திய பெருங்கடலில் ஈரான் கப்பல் தாக்கப்பட்டது குறித்தும், ரஷிய கச்சா எண்ணெய் விவாதத்தில் அமெரிக்காவின் மிரட்டல் குறித்தும் விவாதம் நடத்தக் கோரி எதிர்க்கட்சியினர் பிரச்சனையை கிளப்புவார்கள். மத்திய அரசு இந்த விவகாரங்கள் குறித்து பாராளுமன்றத்தில் விளக்கம் அளிக்கும் என்று கருதப்படுகிறது. இதனால் பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-வது கட்ட அமர்விலும் கடும் அமளி நிலவலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.








# திருக்குறள் குறள்-553

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்



நாள் தோறும் தன் ஆட்சியில் நன்மை தீமைகளை ஆராய்ந்து முறைசெய்யாத அரசன், நாள் தோறும் (மெல்ல மெல்லத்) தன் நாட்டை இழந்து வருவான்.

## சிந்திக்க ஒரு நொடி



சிந்திக்கும் நேரம்
குறைவாக இருந்தாலும்
நல்லதையே
சிந்தியுங்கள் சந்திக்கும்
நேரம்
குறைவாக இருந்தாலும்
நல்லவர்களையே
சந்தியுங்கள்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## பேராசிரியர் K. அன்பழகன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள்



**திருவண்ணாமலை , மார்ச் 09:**
திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேல் நாச்சிபட்டு ஊராட்சியில் பேராசிரியர் K.அன்பழகன் அவர்களின் 6-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் புதுப்பாளையம் ஒன்றிய கழகச் செயலாளர் சுந்தரபாண்டியன் அவர்கள், ஆறுமுகம் அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## உடல் நலம் விசாரிப்பு



வடசென்னை கிழக்கு ஆர் கே நகர் ஒன்னாவது சர்க்கிள் துணைத் தலைவர் திரு கோட்டி அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின் வீடு திரும்பிய அவர்களை வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் திருமதி மதுரம்மா கனி பாருக்ABஅறிவுறுத்தலின்படி அண்ணன் திரு டிவி துரைராஜ் அவர்கள் வடசென்னை கிழக்கு மாவட்ட முன்னாள் மாவட்ட தலைவர் உடல் நலம் விசாரித்தார் அவர்களுடன் திரு ராஜேஷ் அவர்கள் வழக்கறிஞர் பிரிவு மாநில துணைத்தலைவர் திரு ராமச்சந்திரன் அவர்கள் வட சென்னை கிழக்கு மாவட்ட துணைத்தலைவர் திரு மோகன் குமார் வட்ட தலைவர் உடன் இருந்தனர்

## வேலூர் மாவட்டத்திற்கு துணை ராணுவப்படையினர் குழு வருகை!



**வேலூர்,மார்ச்09:**
வேலூர் மாவட்டத்திற்கு துணை ராணுவ படையினர் நேற்று வருகை புரிந்துள்ளனர். வரும் 2026 ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் வேலூர் மாவட்டத்திற்கு ரயில் மூலம் 84 பேர் கொண்ட துணை ராணுவப்படை குழுவினர் மார்ச் 8ம் தேதி காட்பாடி ரயில் நிலையத்திற்கு வருகை தந்தனர். இவர்கள் தற்போது வேலூர் அரசு கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் தேதி அறிவிப்புக்கு பிறகு அவர்கள் பணியில் ஈடுபடுவார்கள் என அதிகாரிகள் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## காட்பாடி அருகில் உள்ள கரசமங்கலத்தில் எம்ஜிஆர் கோயில் குடமுழுக்கு விழா





**வேலூர், மார்ச் 09:**
வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் கரசமங்கலத்தில் முன்னால் சட்டமன்ற உறுப்பினர் ரகுபதி அவர்களின் மகன் முரளி தனது சொந்த இடத்தில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் கோயில் கட்டி குடமுழுக்கு விழா நேற்று காலை 10.00மணிக்கு கோபுரத்தில் தண்ணீர் ஊற்றப்பட்டது. இந்த விழாவில் சைதை துரைசாமி கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் போஸ் வி ஓ சங்க பொதுச்செயலாளர் வாலாஜா சண்முகம் மண்ணு மூர்த்தி சசிகுமார் உள்ளிட்டVAo பொதுமக்கள் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

## மானாமதுரை எம்ஏகே மகளிர் கலைக்கல்லூரியில் மகளிர் தின விழா



**சிவகங்கை, மார்ச் 09:**
சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள எம்.ஏ.கே. கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் உள்ள கலையரங்கில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது முதல்வர். முனைவர். இரா. நாகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.கல்லூரி தலைவர் ராஜகோபாலன் அய்யா வழிகாட்டுதல் படி நடைபெற்றது. மாணவி.தக்ஸின் சபீஹா வரவேற்புரையாற்றினார் மானாமதுரை அரசு மருத்துவமனை மனநல ஆலோசகர்.திருமதி ஆனந்தம் தன்னுடைய உரையில் மாணவிகள் தற்காப்பு கலைகளை கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். யோகா மற்றும் கராத்தே பயிற்சி பெற வேண்டியது அவசியம் என்று கூறினார். மகளிர் தின சிறப்பு விருந்தினராக மானாமதுரை அரசு மேல்நிலைப்பள்ளி மேனாள் உடற்கல்வி துறை ஆசிரியர் கலைச்செல்வி கலந்து கொண்டு மகளிர் தின சிறப்புரையாற்றினார். அவர் தம் உரையில் மகளிர் தினத்தின் முக்கியத்துவம் பற்றியும், பெற்றோர்களை பேணுதல்., மற்றும் வாழ்க்கையில் உயர்வதற்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமானது என்றும் வலியுறுத்தி பேசினார்.பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் மெடல் அணிவித்து ஊக்கமூட்டினார்.கல்லூரி பேரவை தலைவி,.நூருல் இக்ஷானா நன்றி கூறினார். வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் .வீரலட்சுமி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். நாட்டுப்பண்ணுடன் நிறைவடைந்தது.

## ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆறாம் காலம் யாக சாலை பூஜை, ஏழாம் காலம் யாக சாலை பூஜை



**திருச்சி, மார்ச்09:**
ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மகா கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு ஆறாம் காலம் யாக சாலை பூஜை காலை 8:30 மணிக்கு மங்கள இசை, சர்ப்ப பூஜை (நாகர் ) காலை 9:00 மணிக்கு ஆறுமுகப்பெருமானுக்கு சக்தி ஆயுதம் கொடுத்த அன்னைக்கு ஆறாம் கால யாக சாலை பூஜை, காலை 10:30 மணிக்கு யந்திர ஸ்தாபனம், அஷ்டபந்தனம் மற்றும் ஸ்வர்ணபந்தனம் சாற்றுதல்,காலை 11 :00 மணிக்கு நூதன நாகர் பிரதிஷ்டை, காலை 11:30 மணிக்கு ஹோம திரவ்ய சமர்ப்பணம், பகல் 12:00 மணிக்கு பூர்ணாஹூதி, தீபாராதனை. ஏழாம் காலம் யாக சாலை பூஜை மாலை 5:30 மணிக்கு மங்கள இசை விசேஷ சந்தி, மாலை 6 :00மணிக்கு சப்த கன்னிகளின் ஒருங்கிணைந்த சக்தியாக விளங்கும் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரிக்கு ஏழாம் கால யாக சாலை பூஜை, அம்மனுக்கு 7:00 மணிக்கு ஸ்ரீ லலிதா ஸ்ரீ த்ரிசதி சகஸ்ரநாமம், புராண ஸ்தோத்ரா பாராயணம், இரவு 8:00 மணிக்கு ஹோம திரவ்ய சமர்ப்பணம், இரவு 9:00 மணிக்கு பூர்ணாஹூதி, தீபாராதனை." வைஸ்ய குல குரு"ஸ்ரீ. ஸ்ரீ. பிரக்யானந்தா சரஸ்வதி (பால சுவாமி )சுவாமிஜி அவர்கள் நம் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் சரித்திரத்தை விளக்கமாக சொன்னார்கள். வெகு சிறப்பாக பூஜைகளும், ஹோமங்களும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். அனைவருக்கும் காலை,மதியம், இரவு உணவு வழங்கப்பட்டது. திருச்சி ஸ்ரீகன்யகா பரமேஸ்வரி அம்மன் கோயில் நிர்வாகம், திருச்சி ஆர்ய வைஸ்ய நூட்ட இப்பன்றம் நகரம்வாரு கமிட்டி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு 14 –ஆம் நாள் மண்டல அபிஷேக பூஜை



**தர்மபுரி, மார்ச் 09:**
தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மண்டல பூஜையை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,பன்னீர், இளநீர், தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தாமரை மலர்களால் மாலைகளால் அலங்கரித்து, வண்ணப் பூக்களால் அர்ச்சனைகள் செய்து அனைத்து தெய்வங்களுக்கும் அபிஷேகங்கள், அலங்காரங்கள், தங்க கவசத்துடன் அலங்கரித்து, தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது.

உபயதாரர் : A. சுதிர் &N. R. அனு N. G. சந்தன் & N. R. அபர்ணா.( பாலக்கோடு) அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தங்க கொடிமரத்தில் கருட உருவம் பொறிக்கப்பட்ட கொடி ஏற்றம்





ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. பங்குனி ப்ரும்மோத்ஸவ முதல் திருநாள் காலை த்வஜாரோஹணம் மங்கள இசை ஒலிக்க, அதிர் வேட்டுக்கள் விண்ணை பிளக்க, வேத மந்திரங்கள் முழங்க, தங்க கொடிமரத்தில் கருட உருவம் பொறிக்கப்பட்ட கொடி ஏற்றப்பட்டது. ஸ்ரீ பெருமாள் புறப்பாடு, பட்டுசாத்துதல்.

## திருவெண்காடு தேர் திருவிழாவில் அன்னதானம்



**சீர்காழி , மார்ச் , 09 :**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயில் (புதன் ஸ்தலம்) இந்திர பெருவிழாவின் 9 - வது நாளில் திருத்தேர் திருவிழா நடைப்பெற்றது. தேரோட்ட திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

## செய்யாறில் தி.மு.க., வழக்கறிஞரின் புதிய அலுவலகத்தை தரணிவேந்தன் எம்.பி., - ஜோதி எம்.எல்.ஏ., திறந்து வைப்பு!




**செய்யாறு, மார்ச் 09:**
செய்யாறில் தி.மு.க., வழக்கறிஞரின் புதிய அலுவலகத்தை ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன், செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஜோதி ஆகியோர் திறந்து வைத்து, நிர்வாகிகள் - பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். செய்யாறில் தி.மு.க.,வின் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளரும் - வழக்கறிஞருமான சுந்தர் கருணாநிதி இருந்து வருகிறார். இவர், செய்யாறு திருவத்திபுரம் நகராட்சி சார்பில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில், தனக்கென வழக்கறிஞருக்கான புதிய அலுவலகத்தை தொடங்குவதற்கான பணிகளையும் செய்து முடித்திருந்தார். இதற்கான திறப்பு விழா நேற்று நடந்தது. ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன், செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஜோதி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, புதிய அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். நிர்வாகிகள் - பொதுமக்களுக்கு இனிப்பும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் விஸ்வநாதன், ஒன்றிய செயலாளர்களான என்.சங்கர், ஞானவேல், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே.கார்த்திகேயன், தி.மு.க., நிர்வாகிகளான கவுன்சிலர் க.கோவேந்தன், வினோத்குமார், வந்தவாசி ஏ.பிரபு, ராணி, தெள்ளார் கோபி, டி.வி.ஜி.இளங்கோ, செம்பூர் மஞ்சுநாதன், தெள்ளார் வல்லரசு, வந்தவாசி அரவிந் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதையடுத்து செய்யாறு அண்ணா நகரில் உள்ள ஏகம்பன் நிறுவனத்தையும் தரணிவேந்தன் எம்.பி., ஜோதி எம்.எல்.ஏ., ஆகியோர் திறந்து வைத்தனர்.

## மாசி மக அக்ரஹார மண்டகப்படி சிறப்பு வழிபாடு



**கடலூர், மார்ச் 09:**
கடலூர் மாவட்டம் மேல்புவனகிரி ஈஸ்வரன் கோவில் தெருவில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோயில் மாசி மக அக்ரஹார மண்டகப்படி வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பழனியில் ஸ்ரீ மாரியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு வ.உ.சி.மன்றம் சார்பாக பால்குட ஊர்வலம், அன்னாபிஷேகம் உற்சவசாந்தி விழா நாளை நடக்கிறது



**பழனி மார்ச் 09:**
திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் கோவில் திருவிழாவில் வரும் 10 ந்தேதி நாளை செவ்வாய்க்கிழமை பழனி வ உ சி மன்றம் சார்பில் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மனுக்கு பால்குட ஊர்வலம், பாலாபிஷேகம், அன்னாபிஷேகம், உற்சவ சாந்தி விழா நடைபெற உள்ளது.

காலை 10.00 மணிக்கு பழனி, காந்திரோடு, காந்தி மார்க்கெட் அருகில் உள்ள பாண்டிய வேளாளர் மண்டபத்திலிருந்து பால்குடம் ஊர்வலமாக புறப்பட்டு அருள்மிகு ஸ்ரீமாரியம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகிறது. மாலை 4.00 மணிக்கு அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் கோவிலில், அருள்மிகு ஸ்ரீமாரியம்மனுக்கு, ஸ்ரீசைலபுத்ரி மலைமகள் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது.

இரவு 10.00 மணிக்கு அருள்மிகு ஸ்ரீமாரியம்மனுக்கு உற்சவ சாந்தி நிகழ்ச்சி நடைபெறுகிறது.இவ்விழாவில் கௌரவ தலைவர் சித்த நாதன் சன்ஸ் எஸ் ஜி.சிவனேசன் தலைமையிலும் தெய்வத்திரு அரிமா எஸ். பெருமாள் சன் அரிமா எஸ்.பி அசோக் , பழனி என்.விஜயகுமார் அவர சித்தனாதன் & சன்ஸ் ஆகியோர் முன்னிலையிலும் கொங்கு. ஆர்.மாரிமுத்து , தென்னிந்திய வெள்ளாளர் உறவின் முறை சங்க தலைவர் மதுரை பி.டி.ஆர் தனவேல் பிள்ளை, வெள்ளாளர் முன்னேற்றக் கழகம் மாநில பொதுச் செயலாளர் பந்தல் ராஜா, ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கிறார்கள்.

விழா ஏற்பாடுகளை பழனி வ உ சி மன்றம் மற்றும் விழாக்குழுவினர் செய்து வருகின்றனர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### அது 'வொர்த்' இல்லை - தவெக மகளிர் தின விழாவில் விஜய் பேசியது என்ன?



தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அக்கட்சியின் தலைவர் விஜய் பங்கேற்ற விழா நேற்று மாமல்லபுரத்தில் தனியார் நட்சத்திர ஓட்டலில் நடைபெற்றது. அதில் விஜய் பேசியதாவது:

சமீபமாக நிறைய பிரச்சினைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதற்காக நீங்கள் வருந்துவதைப் பார்க்க முடிகிறது. அதைப் பார்த்து எனக்கு வருத்தமாக இருக்கிறது. அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நாம் எல்லாரும் சேர்ந்து மக்கள் பிரச்னைகளைப் பார்ப்போம். அவ்வளவு எல்லாம் வருத்தப்படாதீர்கள். அது 'வொர்த்' இல்லை. இவ்வாறு அவர் பேசினார்.

### மாம்பழம் சின்னத்தில் போட்டியிட 5 பேருக்கு சீட்: பாஜகவுக்கு ராமதாஸ் கொடுத்திருக்கும் ஆஃபர்

பியூஷ் கோயல் சமீபத்தில் ஸ்ரீகாந்தியுடன் பேசினார். 'ஆயிரம் இருந்தாலும் அன்புமணி மூன்றாவது நபர் இல்லை. நாம் ஒன்றாக இருந்தால்தான் வெற்றி பெற முடியும். கூட்டணிக்கு வந்தால் உங்களுக்குத் தேவையானதைச் செய்யத் தயாராக இருக்கிறோம்' என பியூஷ் கோயல் உத்தரவாதம் அளித்ததாகத் தெரிகிறது. ஆனால், 'என் உயிராக நினைத்த கட்சியை என்னிடமிருந்து அன்புமணி அபகரித்துவிட்டார். அவருக்கு பதிலடி கொடுக்க வேண்டுமென்றால், மாம்பழம் சின்னத்தில் எனது வேட்பாளர்களை நிறுத்த சம்மதிக்க வேண்டும். அதில், ஜி.கே.மணி, ஸ்ரீகாந்தி, அருள் உள்ளிட்ட ஐந்து பேருக்கு நிச்சயம் சீட் வேண்டும்.

இதற்கு சம்மதம் என்றால் மொத்தமாக எத்தனை சீட் வேண்டும் என சொல்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார் ராமதாஸ். தனது இந்த முடிவின் மூலம் மாம்பழம் சின்னத்தை தன்னிடமிருந்து பறித்த அன்புமணிக்கு செக் வைக்கநினைக்கிறார் ராமதாஸ்.

### "எழுதாத பேனாவுக்கு ரூ. 82 கோடியில் சிலை எதற்கு?" - திமுகவுக்கு பழனிசாமி கேள்வி



அதிமுக ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.10 ஆயிரம் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். மத்திய அரசு எங்களுடன்தான் உள்ளது. தேவையான நிதியை கேட்டுப் பெறுவோம். அதிமுக ஆட்சிக்கு வந்ததும்,தைப்பொங்கலுக்கு ரேஷன்கார்டுதாரர்களுக்கு ரூ.1,000, தீபாவளி பண்டிகையின்போது பெண்களுக்கு பட்டுச்சேலை வழங்கப்படும். அதிமுக ஆட்சியின்போது, அனைத்து அரசுத் துறைகளிலும் தேசிய விருது கிடைத்தது.

இப்போதைய திமுக ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் நிரம்பியுள்ளது. அதிமுக ஆட்சிக்கு வந்ததும், ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எழுதாத பேனாவுக்கு கடலில் ரூ.82 கோடிக்கு சிலை வைக்க முயற்சித்து வருகின்றனர். எழுதாத பேனாவுக்கு எதற்கு சிலை? அதேபோல, கார் பந்தயத்துக்கு ரூ.100 கோடிக்கு மேல் செலவு செய்துள்ளனர். இதுபோல மக்கள் வரிப்பணத்தை ஊதாரித்தனமாக இந்த அரசு செலவிட்டுள்ளது. 'உங்க கனவ சொல்லுங்க' என்ற திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார்.

### "இலவசங்களை அறிவிப்பது வளர்ச்சி அல்ல; கவர்ச்சி திட்டம்" - சீமான் கருத்து

புதுச்சேரி நாம் தமிழர் கட்சியின் அரசியல் மாநாடு மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கொடியை ஏற்றி வைத்து பேசியதாவது: இதுவரை புதுச்சேரி, தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கோட்பாடு, நிலைபாட்டில் முற்றிலுமாக எங்கள் கட்சி தத்துவமும், கோட்பாடும் மாறுகிறது. இவர்கள் ஊழல், லஞ்சம். நாங்கள் உண்மை, நேர்மை.

நாங்கள் மக்களின் வாழ்க்கையைப் பற்றி கவலைப்படுவோம். அவர்கள் ஓட்டை பற்றியே கவலைபடுவார்கள், நாங்கள் நாட்டை பற்றி கவலைப்படுவோம்.

எல்லாவற்றுக்கும் இலவசம் அறிவிக்கிறார்கள். இலவசம் என்பது வளர்ச்சித் திட்டம் அல்ல. அது வீழ்ச்சி திட்டம். கவர்ச்சி திட்டம். இலவசம் பெறவேண்டிய ஏழ்மை, வறுமை இல்லாமல் எமது மக்களை உயர்த்த வேண்டும் என்பது எமது கடமை என்றார்.

## அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் த.வெ.க.வை இணைக்க முயற்சி!?



அரசியலில் யாரும் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை என்பது எழுதப்படாத விதி. தேர்தலுக்கு தேர்தல் இது உறுதி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு, கடந்த காலங்களில் நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களே சாட்சி. அதுபோன்ற நிகழ்வு வரும் சட்டசபை தேர்தலிலும் நடைபெறும் என்றே தெரிகிறது.

இதுவரை நடைபெற்ற 16 சட்டசபை தேர்தல் வரலாற்றில் இல்லாத வகையில், இந்த முறை ஆளுங்கட்சியான தி.மு.க. 26 கட்சிகளுடன் மெகா கூட்டணியை அமைத்துக்கொண்டு தேர்தல் களத்தில் இறங்குகிறது. இதுமட்டுமல்லாது, 100-க்கும் மேற்பட்ட இயக்கங்கள் மற்றும் சங்கங்களின் ஆதரவும் தி.மு.க. கூட்டணிக்கு கிடைத்துள்ளது.

இப்படி பலம் பொருந்திய படையை வெல்ல வேண்டும் என்றால், எதிரணியினர் அதற்கு ஏற்ற வகையிலான படை பலத்துடன் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். ஆனால், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க., பா.ம.க., அ.ம.மு.க., த.மா.கா. மற்றும் சில சிறிய கட்சிகளே உள்ளன. இந்த கட்சிகளின் பலம் வலுவான தி.மு.க. கூட்டணியை எதிர்க்க போதாது என்பதை அதிமுக, பா.ஜ.க. தலைவர்கள் உணர்ந்துள்ளனர். அதனால்தான் கூட்டணியை பலப்படுத்தவும் முயற்சி மேற்கொண்டு வந்தனர். ஆனால், அதற்கு வெற்றி கிடைக்கவில்லை.

இந்த முறை, ஆளுங்கட்சி மற்றும் ஆண்ட கட்சிக்கு சவால் அளிக்கும் வகையில் புதிதாக களம்காண உள்ள நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகமும் தேர்தலில் அதிக வாக்குகளை அள்ளும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் முதல் தலைமுறை வாக்காளர்களும், ஆட்சி மாற்றத்தை விரும்பும் வாக்காளர்களும் விஜய் கட்சிக்கு அதிகம் வாக்களிப்பார்கள் என்று கூறப்படுகிறது. இது தேர்தலில் எந்த அளவுக்கு வெற்றியை கொடுக்கும் என்பது பெரிய எதிர்பார்ப்பாக உள்ளது. நடிகர் விஜய்யின் அரசியல் வருகையை கருத்தில் கொண்டே, இந்த முறை ஆளுங்கட்சியான தி.மு.க. தேர்தலை புதிய வியூகங்களுடன் அணுகிவருகிறது. ஒரு பக்கம் வலுவான கூட்டணியை அமைத்தாலும், மறுபக்கம் ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி மக்களுக்கான நலத்திட்டங்களையும் அடுத்தடுத்து அறிவித்து வருகிறது.

அந்த வகையில், நாளை திருச்சியில் நடைபெற உள்ள திமுக மாநாட்டிலும் பெண்களை கவரும் வகையில் முக்கிய அறிவிப்பு இடம்பெறும் என்று கூறப்படுகிறது. இதுபோக, தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் அறிவிப்புகள் சரவெடியாக தெறிக்கவிடப்பட இருக்கிறதாம்.

இதுபோன்ற நிலையில், அ.தி.மு.க. - பா.ஜ.க.வை சேர்ந்த தலைவர்கள், கூட்டணியை பலப்படுத்தி தேர்தல் களத்தில் வெற்றிக்கான வியூகங்களை எப்படி வகுப்பது என்று மறைமுக ஆலோசனையில் ஈடுபட்டு வந்தனர். மறுபக்கம், புலி வாலை பிடித்த கதையாக திரைத்துறையில் இருந்து அரசியல் அவதாரம் எடுத்த விஜய்க்கும் பிரச்சினைக்கு மேல் பிரச்சினை குடும்ப ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வந்து கொண்டே இருக்கின்றன.

அந்த வகையில், நடைபெற உள்ள சட்டசபை தேர்தல் அ.தி.மு.க., பா.ஜ.க., த.வெ.க. ஆகிய 3 கட்சிகளுக்குமே முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைத்தால், அடுத்த 5 ஆண்டுகளில் மேற்கண்ட 3 கட்சிகளின் நிலையும் அதலபாதாளத்திற்கு சென்றுவிடும். அதை அக்கட்சி தலைவர்கள் உணர்ந்துள்ளதால்தான், எப்படியும் இந்த முறை திமுக கூட்டணியை வீழ்த்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

ஆரம்பத்தில் தனது பிரசாரங்களில் தி.மு.க., பா.ஜ.க ஆகிய 2 கட்சிகளையும் த.வெ.க. தலைவர் விஜய் கடுமையாக விமர்சனம் செய்தார். மாநிலம் மற்றும் மத்தியில் ஆளுங்கட்சியாக இவை இருப்பதால் விஜய் இவ்வாறு விமர்சனம் செய்கிறார் என்று கருதிய நேரத்தில், திடீரென எதிர்கட்சியான அ.தி.மு.க.வையும் வம்புக்கு இழுக்கத் தொடங்கினார்.

ஆனால், கடைசியான நடைபெற்ற 2 பிரசார கூட்டங்களில் பாஜகவை பற்றி விமர்சிக்கவில்லை. தி.மு.க. - அ.தி.மு.க. ஆகிய 2 கட்சிகளை மட்டுமே விமர்சனம் செய்தார். அவருடைய இந்த அரசியல் அணுகுமுறையே, ஏதோ நடக்கப்போகிறது என்ற சந்தேகத்தை கிளப்பியது.


இதுபோக, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் இன்னும் கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை தொடங்காமல், கூட்டணி கதவையும் அடைக்காமல் பெரிய கட்சிகள் வரும் என்று காத்திருக்கிறார். ஏற்கனவே, காங்கிரஸ் கட்சி வரும் என்று விஜய் காத்திருந்த நிலையில், கடைசி நேரத்தில் தி.மு.க. தக்கவைத்துக்கொண்டது ஏமாற்றமாக அமைந்தது.

இதேபோல், கடந்த நாடாளுமன்ற தேர்தலில், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியைவிட பா.ஜ.க. அதிக வாக்கு சதவீதத்தை பெற்று அசத்தியது. எனவே, சட்டமன்ற தேர்தலிலும் தனது வாக்கு வங்கியை நிரூபிக்க போராடி வருகிறது. இப்படி, அ.தி.மு.க., பா.ஜ.க., த.வெ.க. ஆகிய 3 கட்சிகளுக்கும் பிரச்சினைகள் இருப்பதால், தி.மு.க.வை வீழ்த்த ஒரே வழி 3 பேரும் ஒன்றிணைவதுதான் என்ற முடிவுக்கு அக்கட்சிகளின் தலைவர்கள் வந்துள்ளார்களாம்.

அந்த வகையில், த.வெ.க.வுடன் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தரப்பில் இருந்து பேச்சு வார்த்தை நடக்கிறதாம். தொகுதி பங்கீடு மற்றும் ஆட்சி அதிகாரம் ஆகியவை குறித்து பேசப்படுகிறதாம். இதுவரை நடைபெற்ற பேச்சு வார்த்தையில் 70 சதவீதம் அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்படும் முன்பு கூட்டணியும் முழு வடிவம் பெற்றுவிடும் என்று கூறப்படுகிறது.

அவ்வாறு, அ.தி.மு.க., பா.ஜ.க., த.வெ.க. கூட்டணி அமைந்தால், தி.மு.க. கூட்டணிக்கு கடும் சவால் அளிக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் உறுதிபடக் கூறுகிறார்கள். எனவே, இந்தத் தேர்தல் எதுமாதிரியும் இல்லாத வகையில் புது மாதிரியாக இருக்கும்

## நாகை தொகுதி யாருக்கு? - திமுக கூட்டணியில் போட்டாபோட்டி




முக்கியத்துவம் வாய்ந்த தொகுதிகளில் ஒன்றான நாகை தொகுதியில் இந்த முறை போட்டியிட திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுவதாக கூறப்படுகிறது.

தற்போது விடுதலை சிறுத்தைகள் வசம் உள்ள இந்தத் தொகுதியை, இந்த முறையும் தங்களது விருப்பப் பட்டியலில் விசிக கேட்டுள்ள நிலையில், தற்போதைய எம்எல்ஏவான ஆளூர் ஷாநவாஸ் மீண்டும் போட்டியிடுவார் என்கிறார்கள்.

ஆனால் கடந்த முறை சுமார் 7 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தான் வெற்றி பெற்றிருந்ததாலும், திமுக மாவட்டச் செயலாளர் கவுதமன் தனக்கு போதிய ஒத்துழைப்பு அளிப்பதில்லை என்பதாலும், வேறு பாதுகாப்பான தொகுதிக்கு மாறலாமா என்று ஷாநவாஸ் யோசிக்கிறாராம். ஆனாலும் விசிகவோ எக்காரணம் கொண்டும் தொகுதியை விட்டுவிடத் தயாராக இல்லை.

இது இப்படியிருக்க இந்த தொகுதியை இந்த முறை தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் கேட்டுள்ளதாம். கம்யூனிஸ்ட் கட்சியினர் கணிசமாக உள்ள இத்தொகுதியில் பலமுறை இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

அதனால் இம்முறை தங்களுக்கு வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அழுத்தம் கொடுக்கிறதாம். அக்கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் முத்தரசன் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்புவதாக கூறப்படுகிறது. அவருக்காக நாகை தொகுதியை அக்கட்சி கேட்டுள்ளது என்கிறார்கள். இதற்கு பதிலாக வேறு தொகுதியை திமுக எடுத்துக் கொள்ளட்டும் என்கிறார்கள்.

இன்னொரு பக்கம் தொடர்ந்து தொகுதியை கூட்டணிக்கே கொடுத்து வருவதால் கட்சிக்காரர்கள் சோர்ந்து இருக்கிறார்கள் என்றும், எனவே, இந்த முறை கூட்டணிக்கு கொடுக்கக்கூடாது, அதிலும் எதிர்முனையில் அதிமுக வேட்பாளர் நிறுத்தப்படுவதால் அதை சமாளிக்க, திமுகவே நேரடியாக போட்டியிட வேண்டும் என்று திமுகவில் குரல்கள் வலுவாக எழுந்துள்ளன.

திமுக மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழக தலைவருமான கவுதமன் உள்ளிட்ட பலர் இங்கு போட்டியிட விரும்புகிறார்கள். இதுதொடர்பாக அமைச்சர் அன்பில் மகேஸ் உள்ளிட்டவர்கள் மூலம் தலைமைக்கு நெருக்கடி கொடுத்து வருகிறார் என்கிறார்கள். இவைதவிர காங்கிரஸ் கட்சியும் நாகை தங்களுக்கு வேண்டும் என கேட்டுள்ளதாம்.

இப்படி திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் நாகையில் போட்டியிட போட்டாபோட்டி போடுகின்றன. ஆனால் கூட்டணி சூழல்கள் இயல்பாக இல்லாத நிலையில், யாருக்கு கொடுத்தாலும் மற்ற கட்சிகளுக்கு வருத்தம் ஏற்படத்தான் செய்யும் என்பது மட்டும் உறுதி.

## எந்தத் தொகுதியில் போட்டி? - உதயநிதி ஸ்டாலின் பதில்



"கடந்த தேர்தலில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டேன். தற்போது திமுக தலைவர் என்ன முடிவு எடுக்கிறாரோ, அந்த தொகுதியில் போட்டியிடுவேன்" என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: "தேர்தலை முன்னிட்டு கட்சி நிர்வாகிகள் சந்திப்பை நடத்தி முடித்துள்ளோம். நாளை திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாநாடு நடைபெற உள்ளது. திமுக தலைவர் அறிவித்த பின்னர் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குவோம். மக்களை தொடர்ந்து சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் முதல்வர் மக்களை சந்தித்து வருகிறார். அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து களத்தில் தான் இருக்கிறோம். 99 சதவீதம் வாக்குறுதிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றி உள்ளார். பள்ளிகளில் காலை உணவு திட்டம் உட்பட தேர்தல் அறிக்கையில் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளோம்.

திமுக ஆட்சி மீண்டும் அமைந்ததும், மகளிர் உரிமைத் தொகையை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி கொடுக்கப்படும் என்று முதல்வர் கூறியுள்ளார். கடந்த தேர்தலில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டேன். தற்போது திமுக தலைவர் என்ன முடிவு எடுக்கிறாரோ அந்த தொகுதியில் போட்டியிடுவேன்" என்றார்.

## மதுரை மத்தியில் பழனிவேல் தியாகராஜனுக்கு போட்டியாக முக்கிய நிர்வாகிகள் விருப்ப மனு!

மதுரை மத்திய தொகுதியில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் 2016 மற்றும் 2021 தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளார். தற்போது 3-வது முறையாக போட்டியிட விண்ணப்பித்துள்ளார்.

அவருடன் முன்னாள் மேயர் குழந்தைவேலு, திமுக கவுன்சிலர்கள் குழு தலைவரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான மா.ஜெயராம், திமுக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, முன்னாள் எம்எல்ஏ வேலுச்சாமி, நிர்வாகிகள் சின்னம்மாள், சவுந்தர், பி.டி. மணிமாறன், சுபாஷ், கவுன்சிலர் நூர்ஜகான் உட்பட 40-க்கும் மேற்பட்டோர் 'சீட்' கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் பழனிவேல் தியாகராஜனுக்கு மீண்டும் 'சீட்' கொடுக்க வேண்டும் என்று மத்திய தொகுதியை சேர்ந்த அவரது ஆதரவு நிர்வாகிகள் 15 பேர் விருப்பமனு கொடுத்துள்ளனர். மதுரை மாவட்டத்தில் திமுக போட்டியிடும் தொகுதிகள் மற்றும் வேட்பாளர்களை முதல்வர் இறுதி செய்து விட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், விருப்ப மனு கண் துடைப்புக்காக பெறப்படுவதாக நிர்வாகிகள் கூறுகின்றனர். இதுகுறித்து திமுக நிர்வாகிகள் கூறுகையில், "மதுரை மாவட்டத்தில் மதுரை மத்தி, வடக்கு, மேற்கு, கிழக்கு, திருமங்கலம், சோழவந்தான், உசிலம்பட்டி ஆகிய தொகுதிகளில் திமுக போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. கூட்டணிக் கட்சிகள் பேச்சுவார்த்தையை பொருத்து, மேலும் ஒரு தொகுதியில் கூடுதலாக போட்டியிடலாம். இந்நிலையில், பழனிவேல் தியாகராஜனுக்கு போட்டியாக முக்கிய நிர்வாகிகள் 15 பேர் வரை மத்திய தொகுதியில் 'சீட்' கேட்டு விருப்ப மனுக்களை வெளிப்படையாகவே கொடுத்துள்ளது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், அமைச்சருக்கே மீண்டும் 'சீட்' கிடைக்க வாய்ப்புள்ளது. மத்திய தொகுதியில் கட்சி நிர்வாகிகளிடையே முட்டல், மோதல் போக்கே உள்ளது. அவர்களை சமாதானம் செய்யாவிடில், தேர்தலில் உள்ளடி வேலை பார்க்க வாய்ப்புள்ளதாக கூறப் படுகிறது.

## சென்னை இந்திய ராணுவ அதிகாரிகள் மையத்தில் பயிற்சி முடித்த ராணுவ அதிகாரிகள் சாகச நிகழ்ச்சி

**சென்னை, மார்ச் 9:**

சென்னை ஆலந்தூரில் உள்ள இந்திய ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் (ஓ.டி.ஏ) 121 மற்றும் 35 ஆகிய பேட்சுகளில் பயிற்சி பெற்ற அதிகாரிகள் நேற்று தங்களின் பயிற்சியை நிறைவு செய்தனர். இவர்கள் ராணுவ அதிகாரிகளாக பணியில் இணைய உள்ளனர்.

இந்த நிலையில், இந்திய ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயிற்சி முடித்த ராணுவ அதிகாரிகள் பல்வேறு சாகச நிகழ்ச்சிகளை நடத்தி காண்பித்தனர்.

தற்காப்பு கலை, குதிரை சவாரி, தீ வளையத்திற்குள் புகுந்து வெளியேறுதல், பதுங்கு குழிக்குள் பதுங்கி தாக்குதல் ஆகியவை குறித்தும் நேரடி சாகசம் நிகழ்த்தி காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அதிகாரிகள் பயிற்சி மையத்தின் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் மைக்கில் பெர்னான்டஸ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். அப்போது, சிறப்பாக செயல்பட்ட அணிகளுக்கு விருதுகள் வழங்கினார்.

## வரட்டுப்பள்ளம் அணையில் தண்ணீர் திறந்துவிட உத்தரவு

**ஈரோடு,மார்ச் 9:**

“ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்தில் இருந்து, புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு 09.03.2026 முதல் 16.06.2026 முடிய 100 நாட்கள் தொடரில் 6 நனைப்புகளாக (75 நாட்கள் தண்ணீர் திறப்பும் 25 நாட்கள் தண்ணீர் நிறுத்தம்) என்ற அடிப்படையில் 85.881 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், ஈரோடு மாவட்டத்திலுள்ள அந்தியூர் வட்டத்திலுள்ள சங்கராபாளையம், எண்ணமங்கலம் மற்றும் அந்தியூர் ”அ” கிராமம் ஆகிய கிராமங்களிலுள்ள 2,924 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் காலிப்பணியிடங்கள்: பெண்கள் விண்ணப்பிக்க அழைப்பு

**கிருஷ்ணகிரி, மார்ச் 9:**

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழ் காலியாக உள்ள இந்தப் பணியிடங்கள் ஒரு ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. இதற்காக பெண் விண்ணப்ப தாரர்களிடமிருந்து விண் ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பாதுகாப்பு அலுவலர் 1 பணியிடம், இளநிலை உதவியாளர் தட்டச்சர் 1 பணியிடம்: வரம்பு 22 முதல் 35. மாத ஊதியம் ரூ.12,000. விண்ணப்பிக்க விரும்புவோர் தேவையான சான்றிதழ்களுடன் மார்ச் 9 மாலை 5 மணிக்குள் அறை எண் 21, மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி என்ற முகவரியில் நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்.

## மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் செப்.17-ம் தேதி கும்பாபிஷேகம்

**சென்னை, மார்ச் 9:**



உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கும்பாபிஷேக விழா, வரும் செப்.17-ம் தேதி கோலாகலமாக நடைபெறும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு தெரிவித்தார்.

சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் நேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கோயில் அறங்காவலர்கள், ஆகம வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசியதாவது: மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கடைசியாக கடந்த 2009-ம் ஆண்டு ஏப்.8-ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது 17 ஆண்டுகளுக்குப் பிறகு, வருகிற செப்.17-ம் தேதி காலை 7.45 மணி முதல் 8.10 மணிக்குள் கும்பாபிஷேக பெருவிழா நடைபெறவுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், கோயிலைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மொத்தம் 186 வகையான திருப்பணிகள், கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதி என மொத்தம் ரூ.32.28 கோடி மதிப் பீட்டில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. கடந்த 2018-ல் ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வீர வசந்தராயர் மண்டபத்தை, அதன் பழமை மாறாமல் மீட்க ரூ.35.30 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த மண்டபத்தின் புனரமைப்புப் பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடைய உள்ளன.

மீனாட்சி அம்மன் கோயிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு திருவிழாக்களும், உற்சவங்களும் நடைபெறுவதால் அவற்றை நிறுத்த இயலாது.

எனவே, திருப்பணிகள் மார்ச் மாதமே முடிவடைந்தாலும், கும்பாபிஷேகத்தை வரும் செப்.17-ம் தேதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் துறை செயலர் க.மணிவாசன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர் மற்றும் அறங்காவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் பங்குனித் திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

**மன்னார்குடி, மார்ச் 9:**

மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயில் பங்குனித் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் 18 நாள்கள் நடைபெறும் பங்குனித் திருவிழாயொட்டி, த்வஜாரோஹனம் என்னும் கொடியேற்றம், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் 18 நாள் திருவிழாவும். அதனை தொடர்ந்து, 12 நாள்கள் விடையாற்றி விழாவும் நடைபெறுவதுடன்.பெருமாள் எழுந்தருளும் வெளிபிரகாரத் தேரோட்டம், கிருஷ்ண தீர்த்த தெப்ப உத்ஸவங்களுடன் பங்குனித் திருவிழா நிறைவு பெறும். நிகழாண்டிற்கான தொடங்க விழா, காலை (ஞாயிற்றுக்கிழமை) 11.30 மணிக்கு காலை, த்வஜாரோஹனம் என்னும் கொடியேற்ற நிகழ்ச்சியில்,பெருமாள் சந்நதிக்கு எதிரே உள்ள பெருமாள் மண்டபத்தில் பெரிய கொடிமரத்தில் ,கருடன் உருவம் பொறித்த கொடியினை வேதமந்திரங்கள் கூறியப்பட்டி பட்டாச்சாரியார்கள் ஏற்றிவைத்தனர். பின்னர், சிறப்பு அலங்காரத்தில் ராஜ கோபால சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

நிகழ்ச்சியில், திராளன பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இத்திருவிழாவினை யொட்டி, ஒவ்வொரு நாளும் உத்ஸவர் ராஜகோபால சுவாமி,கல்யாணம்,கண்ணன்,கிருஷ்ணர்,ராஜ,பட்டாபிராமர்,வேணுகோபாலர்,மாயவநாதன்,வைகுண்டநான் உள்ளிட்ட சிறப்பு அலங்காரத்தில் கோயிலை சுற்றியுள்ள நான்கு வெளிப் பிராகாரங்களின் வழியாக வந்து, பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்,அப்போது சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

இதில் முக்கிய நிகழ்வுகளாக, மார்ச்10 வெள்ளி ஹம்ச வாகனம், 13.கண்டபேரண்ட பக்ஷி, 17. தங்க சூர்யபிரபை, 22 கோரதம், 23. காலை வெண்ணைத்தாழி, இரவு வெட்டுங்குதிரை, 24ஆம் தேதி திருத்தேரோட்டமும் நடைபெறுகிறது. இதனை தொடர்ந்து,12 நாள்கள் நடைபெறும் விடையாற்றி விழா, மார்ச் 26ஆம் தேதி தொடங்கி, ஏப்ரல் 4ஆம் தேதி கிருஷ்ண தீர்த்த தெப்ப உத்ஸவத்துடன் நிறைவு பெறுகிறது.

## திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் கோயில் தேரோட்டம்

**பூம்புகார், மார்ச் 9:**



திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் கோயிலில் இந்திர பெருவிழாவை ஒட்டி தேரோட்டம் நடந்தது.

மயிலாடுதுறை மாவட்டம், திருவெண்காட்டில் தேவார பாடல் பெற்ற பிரம்ம வித்யாம்பிகை சமேத ஸ்வேதாரண்யேஸ்வரர் கோயில் உள்ளது. நவகிரகங்களில் புதன் ஸ்தலமாக திகழும் இக் கோயிலில் இந்திர பெருவிழா கடந்த மாதம் 28ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது 9-வது நாள் திருவிழாவான தேரோட்டம் நேற்று நடைபெற்றது.

தேரோட்டத்தை ஒட்டி சிறப்பு அலங்காரத்தில் விநாயகர் முருகன் மற்றும் சண்டிகேஸ்வரர் உடன் சுவாமி அம்பாள் 3 தேர்களில் எழுந்தருள மகா தீப ஆராதனை நடைபெற்றது.

தொடர்ந்து மூன்று தேரையும் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் மனைவி துர்கா ஸ்டாலின் வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தைத் துவங்கி வைத்தார்.

இதில் பூம்புகார் எம்எல்ஏ நிவேதா எம் முருகன், சீர்காழி எம்எல்ஏ பன்னீர்செல்வம், டாக்டர். ஜெய.ராஜ மூர்த்தி, அறங்காவலர் நியமன குழு தலைவர் சாமிநாதன், அறங்காவலர் குழுத் தலைவர் எம் என் ஆர் ரவி, ஒன்றிய செயலாளர் பஞ்சு. குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் முத்து மகேந்திரன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் கமல ஜோதிதேவேந்திரன், உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## வயதிற்கு ஏற்ப எவ்வளவு தேவை? ICMR வழிகாட்டுதல்!

முதுமையில் குறையும் உணவு... கூடும் ஆபத்து! பொதுவாக இந்திய வீடுகளில் ஒரு வழக்கம் உண்டு. வயது ஏற ஏற, கனமான உணவுகளைத் தவிர்த்துவிட்டு வெறும் கஞ்சி, பருப்பு அல்லது டீ-ரொட்டி என உணவைக் குறைத்துக் கொள்வார்கள். “இனிமேல் நான் என்ன ஜிம்முக்கா போகப்போகிறேன்? எதற்கு இவ்வளவு சாப்பாடு?” என்ற எண்ணமே இதற்கு முதன்மைக் காரணம்.

மனித உடல் வயதாகும்போது, நாம் உண்ணும் புரதத்தைச் சிதைத்து தசைகளாக மாற்றும் திறன் குறைகிறது. அதாவது, 40 வயதில் ஒருவருக்குத் தேவைப்பட்ட புரதத்தை விட, 60 வயதில் அதே உடல் வலுவைப் பராமரிக்க அதிக புரதம் தேவைப்படுகிறது. இதைச் சரியாகச் செய்யாவிட்டால், நடப்பதில் தடுமாற்றம், பலவீனம் மற்றும் தற்சார்பு இழப்பு போன்றவை ஏற்படும்.

தசைகள் படிப்படியாக வலிமை இழந்து தேய்மானம் அடைவதையே ‘சார்கோபீனியா’ என்கிறோம். 2025-ஆம் ஆண்டின் ஆய்வுகளின்படி, இந்தியாவின் கிராமப்புறங்களில் 14.8% முதியவர்களும், நகர்ப்புறங்களில் 7% முதியவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கத்திய நாடுகளை விட இந்தியர்களுக்கு 40 வயதிலேயே தசை இழப்பு தொடங்குகிறது. இதற்குக் காரணம் நம் உணவில் புரதச் சத்து மிகக் குறைவாக இருப்பதே ஆகும். ICMR தரவுகளின்படி, 80% இந்திய வீடுகளில் தேவையான அளவு புரதம் உட்கொள்ளப்படுவதில்லை.

உங்களுக்கு எவ்வளவு புரதம் தேவை? உடல் எடையைப் பொறுத்தே புரதத்தின் அளவு மாறுபடும் என்கிறது ICMR-NIN 2024 வழிகாட்டுதல். ஒரு கிலோ உடல் எடைக்கு 1.0 முதல் 1.2 கிராம் புரதம். (உதாரணமாக 60 கிலோ எடை கொண்டவர் 60-72 கிராம் புரதம் எடுக்க வேண்டும்). அறுவை சிகிச்சை அல்லது நீண்ட கால நோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு 1.2 முதல் 1.5 கிராம் வரை தேவைப்படலாம்.

தரம் முக்கியம்: வெறும் ‘பருப்பு-சாதம்’ போதுமா? நமது பாரம்பர்ய உணவு அதிகப்படியான அரிசி மற்றும் கோதுமையைச் சார்ந்தது. இதில் கிடைக்கும் புரதத்தின் தரம் குறைவு. குறிப்பாக தசைகளை உருவாக்கும் ‘லூசின்’ (LEUCINE) எனும் அமினோ அமிலம் இதில் குறைவாகவே இருக்கும். எனவே, உணவில் கீழ்க்கண்ட மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள்.

தானியம் - பருப்பு விகிதம்: 3:1 என்ற விகிதத்தில் சேர்த்துக் கொள்வது புரதத்தின் தரத்தை உயர்த்தும்.

தரமான புரத ஆதாரங்கள்: தயிர், 50 கிராம் பன்னீர், முட்டை (சிறந்த புரதம்), மீன் அல்லது தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி மற்றும் சோயா, முளைக்கட்டிய பயிர்கள் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும்.

## காய்கறிகளில் நரம்புகளை சிதைக்கும் ஈயம்: ஆய்வில் பகீர் தகவல்!

வீட்டில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் சத்தான சாப்பாடு கொடுக்க வேண்டும் என்பதுதான் நம் ஒவ்வொருவரின் ஆசை. அதற்காகத்தான் தேடித் தேடி காய்கறிகளை வாங்கி வருகிறோம். “காய்கறி சாப்பிட்டாதான் உடம்பு தேறும், கண்ணுக்கு நல்லது, ரத்தம் ஊறும்” என்று சொல்லித்தான் நம் பிள்ளைகளுக்கும் பீட்ரூட்டையும், கீரையையும் ஊட்டி விடுகிறோம்.

ஆனால், நாம் இவ்வளவு அக்கறையோடு வாங்கும் காய்கறிகளில் கண்ணுக்குத் தெரியாத விஷம் கலந்திருக்கிறது என்று தெரிந்தால் எப்படி இருக்கும்? சந்தையில் பளபளவென இருக்கும் கத்தரிக்காயும், பசுமையாக இருக்கும் பீன்ஸும் நம் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் என்றால் அதைவிடப் பெரிய அதிர்ச்சி வேறு ஏதுமில்லை.

காய்கறிகளைக் கழுவிச் சமைத்தால் விஷம் போய்விடும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம், ஆனால் காய்கறியின் உள்ளேயே நச்சுத்தன்மை கலந்திருந்தால் என்ன செய்வது? இப்போது பெங்களூருவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு, நாம் அன்றாடம் சாப்பிடும் காய்கறிகளின் பாதுகாப்பு குறித்துப் பயங்கரமான உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) குழு ஒன்று, பெங்களூரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளூர் சந்தைகளில் இருந்து சுமார் 72 காய்கறி மாதிரிகளைச் சேகரித்து ஆய்வு செய்தது. இந்த ஆய்வு அறிக்கை கடந்த பிப்ரவரி 12 அன்று தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் (NGT) சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆய்வில் மொத்தம் 11 வகையான கன உலோகங்கள், 3 தாதுக்கள் மற்றும் 230 வகையான பூச்சிக்கொல்லி



மருந்துகள் குறித்துச் சோதனை நடத்தப்பட்டது. இதில் அதிர்ச்சியூட்டும் விதமாக, 72 மாதிரிகளில் 19 மாதிரிகளில் ஈயம் (LEAD) அளவு அனுமதிக்கப்பட்ட வரம்பை விட மிக அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

அதிக நச்சுத்தன்மை கொண்ட காய்கறிகள்: இந்த ஆய்வில் நாம் அடிக்கடி பயன்படுத்தும் பல காய்கறிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன,

கத்தரிக்காய்: இதில் தான் மிக அதிகப்படியான ஈயம் கண்டறியப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட அளவு 0.1MG/KG என்றிருக்க, இதில் 1.953 அளவு ஈயம் இருந்தது தெரியவந்துள்ளது. இது பாதுகாப்பான அளவை விட சுமார் 20 மடங்கு அதிகம்.

மற்ற காய்கறிகள்: பீன்ஸ், பீட்ரூட், முட்டைக்கோஸ், குடைமிளகாய் (CAPSICUM), பச்சைமிளகாய்,வெள்ளரிக்காய், புடலங்காய் மற்றும் சௌசௌ.

ஈயம் தவிர, பூச்சிக்கொல்லி மருந்துகளின் தாக்கமும் ஆய்வில் கண்டறியப்பட்டது. 70 மாதிரிகளில் 10 மாதிரிகள் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக பூச்சிக்கொல்லி நச்சுக்களைக் கொண்டிருந்தன.

ஈயம் காய்கறிகளுக்குள் எப்படி நுழைகிறது?

மருத்துவ வல்லுநர்களின் கருத்துப்படி, ஈயம் என்பது காய்கறிகளின் மேல் மட்டும் ஒட்டியிருக்கும் அழுக்கு அல்ல. தொழிற்சாலைக் கழிவுகள் கலந்த நீர் அல்லது ரசாயனங்கள் கலந்த மண் மூலம் செடிகள் வளரும்போது, அதன் வேர்கள் வழியாக ஈயம் உறிஞ்சப்படுகிறது. இது காய்கறியின் திசுக்களுக்குள்ளேயே (TISSUE) சென்று தங்கிவிடுகிறது.

காய்கறிகளை மேலோட்டமாகக் கழுவுவதாலோ அல்லது அதன் தோலைச் சீவுவதாலோ உள்ளே இருக்கும் ஈயத்தை அகற்ற முடியாது. சமைத்த பிறகும் இந்த நச்சுத்தன்மை மாறாமல் அப்படியே இருக்கும் என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

உடல் நலத்திற்கு ஏற்படும் பாதிப்புகள்: ஈயம் மனித உடலுக்கு மிகவும் ஆபத்தானது. குறிப்பாகக் குழந்தைகளுக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது, மூளை வளர்ச்சி: குழந்தைகளின் நரம்பு மண்டலத்தைப் பாதிப்பதோடு, மூளை வளர்ச்சியையும் சிந்திக்கும் திறனையும் குறைக்கிறது.

இதய நோய்கள்: உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தரவுப்படி, 2021-ஆம் ஆண்டில் மட்டும் 15 லட்சத்திற்கும் அதிகமான உயிரிழப்புகளுக்கு ஈய பாதிப்பு காரணமாக இருந்துள்ளது. இதில் பெரும்பாலானவை இதய நோய்களுடன் தொடர்புடையவை.

அறிகுறிகள்: உடலில் ஈயத்தின் அளவு அதிகமாக இருந்தாலும், குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் எந்த அறிகுறியும் தெரியாது. இரத்தப்பரிசோதனை மூலம் மட்டுமே இதைக் கண்டறிய முடியும்.

தீர்வு என்ன? இந்தச் சிக்கல் 2023-லிருந்தே விவாதிக்கப்பட்டு வருகிறது.

பெங்களூரு பகுதியில் விளையும் காய்கறிகளில் கன உலோகங்கள் இருப்பதாக அப்போதே EMPRI நிறுவனம் எச்சரித்திருந்தது. இப்போது அரசு தரப்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒருபுறம் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் நாம் சில முன்னெச்சரிக்கைகளைக் கையாளலாம்.

சரியான உணவுமுறை: உடலில் ஈயத்தின் பாதிப்பைக் குறைக்க இரும்புச்சத்து, கால்சியம் மற்றும் வைட்டமின்-சி நிறைந்த உணவுகளைக் குழந்தைகளுக்கு அதிகம் கொடுக்க வேண்டும். இது நச்சுக்களை எதிர்கொள்ள உதவும்.

கழுவுதல்: நச்சு உள்ளே இருந்தாலும், மேல்புறத்தில் இருக்கும் அழுக்கு மற்றும் பூச்சிக்கொல்லிகளை அகற்றக் காய்கறிகளை நன்கு ஓடும் நீரில் கழுவுவது அவசியம்.

## செலக்ஷன் !




மாறன் நாள் கிழமைகளில் புடவை எடுக்கும்போது தன் மனைவி மதுமி தாவுக்கும் தங்கை தாரிணிக்கும் சேர்ந்தே வாங்கித் தருவான். இரண் டும் வெவ்வேறு நிறங்களில் இருக் கும். ஆனால் மதுமிதா எந்தப் புட வையை விரும்பித் தேர்வு செய்கி றாளோ அதையே தாரிணியும் விரு ம்பிக் கேட்பாள் !

மதுமிதாவுக்குப் பற்றிக்கொண்டு வரும். இப்படி ஏட்டிக்குப் போட்டியாக தாரிணி செயல்படுவது கோபத்தை யும் உண்டாக்கும். ஆனாலும் பல்லை க் கடித்துக்கொண்டு அடங்கிப் போ வாள் மதுமிதா. மாறனோ எதையும் கண்டு கொள்ள மாட்டான். இந்த விஷயத்தில தலையிடுவது வீண் பிரச்னையை உண்டாக்கும் என்கிற எண்ணம் !

கடந்த ஆயுத பூஜை, மற்றும் தீபாவளி அன்றும் இதே கூத்துதான்.திருமணம் ஆகி நான்கு மாதங்களே ஆகியிருந்த தால் பொறுமையைக் கடைபிடித்தாள் மதுமிதா. பாவம் சின்னப்பெணஆசை ப்படுகிறாள். விட்டுப்பிடிக்கலாம் என எண்ணியிருந்தாள். தன் புருஷனிட மும் எந்தப் புகாரும் சொல்ல வில்லை.

பிப்ரவரி 14 காதலர் தினத்தன்று மது மிதாவின் பிறந்தநாள் வந்தது. வழக் கம்போல் மாறன் இரண்டு புடவைகள் வாங்கி வந்தான். இரண்டும் விலை உயர்ந்தது. பார்க்கவும் அமர்க்களமாக இருந்தது !

ஒன்று கிளிப்பச்சை. மற்றொன்று மெ ரூன் கலர் ! மதுமிதாவுக்கு மெரூன் கலர்மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அதை தான் செலக்ட் செய்தால் தாரி ணியும் அந்தப் புடவையையே விரும் பிக் கேட்பாள். அதனால் என்னசெய்ய லாம் என நினைத்த அவள் மனத்தில் ஒரு ஐடியா தோன்றியது. அதன்படி செயல்பட எண்ணம் கொண்டாள்.

கிளிப்பச்சை நிறப் புடவையை தான் தேர்வு செய்தால் தாரிணியும் அதை யேக் கேட்பாள். அதைக் கொடுத்து விட்டு தான் விரும்பும் மெரூன் கலர் புடவை யை எடுத்துக் கொள்ளலாம் என்பதுதான் மதுமிதாவின் ஐடியா !

அதனால் தாரிணியை குறு குறு வென்று பார்த்துக் கொண்டே கிளி ப்பச்சை நிறப் புடவையை தேர்வு செய்வதுபோல் நடித்தாள்.

தாரிணி அண்ணியையும் அவள் தேர்வு செய்த கிளிப் பச்சை நிறப் புடவையையும் சில வினாடிகள் மாறி மாறி பார்த்தாள். பிறகு, ’ அண்ணி பாவம் ! இதுவரை அவங்க ஆசை ப்பட்ட புடவைகளையெல்லாம் நான் தட்டிச்சென்றேன். இந்தத் தடவை அவங்க விரும்பும் கிளிப் பச்சை புடவையை எடுத்துக்கொள்ள ட்டும்’என எண்ணி மெரூன் கலர் புடவையை எடுத்துச் செல்ல

திடுக்கிட்ட மதுமிதா, ’ அடிப்பாவி !’ மனதில் குமைந்தாள் .



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

## "திரும்பி வந்த அன்பு"

வறுமை வீட்டித்குள் நுழையும் போது அது எடுத்துச் செல்லுவது பொருள்களை மட்டும் அல்ல... சில நேரங்களில் அன்பையும் தான். முருகனின் வீட்டில் இருந்த ஒரே செல்வம் அந்த வெள்ளாடு.
அது அந்தக் குடும்பத்தின் ஒரு உறுப்பினர் போல். குழந்தைகள் அதைத் தழுவி விளையாடும்.
அம்மா ராசாத்தியும் அதைக் “பொண்ணு...” என்றுதான் அழைப்பாள்.
ஆனால் பசி உறவுகளை மதிக்காது. ஒரு நாள் முருகன் கையில் கயிறு.கண்களில் அவமானம். "ராசாத்தி... இதை விற்பதைத் வேற வழியில்லை...” என்றான் மெதுவாக.
ஆடு ஒன்றும் புரியாமல் அவனைப் பின் தொடர்ந்தது. போகும் போது அது இரண்டு மூன்று முறை வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்து கொண்டே சென்றது.

அந்த பார்வையில் ஏக்கம்தான் நிறைந்திருந்தது. அன்று முதல் வீட்டு வாசலில் வெறுமை குடியேறியது. ஆட்டுப்பட்டி காலி. அதை விட
எல்லோர் மனசும் காலி.
மூன்று நாட்களுக்குப் பிறகு வாசலருகே ஒரு பழக்கமான குரல்.
“மேய்... மேய்...”
கதவைத் திறந்தார்கள். வாசலில்
அதே ஆடு! கழுத்தில் கயிறில்லை. ஆனால் கண்களில் உற்சாகம். வேகமாய் ஓடி வந்து குழந்தைகளின் கைகளை நக்கியது ஆடு. ராசாத்தி அதைக் கட்டிக் கொண்டு அழுதாள். முருகன் அதிர்ச்சியுடன் நின்றான்.

அப்போது வீட்டின் முன் ஒரு சைக்கிள் நின்றது. ஆட்டை வாங்கிச் சென்ற மனிதர். முருகன் பதறினான்.
"அண்ணே... ஆடு தப்பிச்சு வந்திடுச்சு போலிருக்கு... நான் இப்போதே கொண்டு வந்து விட்டுடறேன்" என்றான்.
“வேண்டாம் முருகா!... மூணு நாளா இதுக்கு என் வீட்டில் சாப்பாடு போட்டோம்... தண்ணீர் வைத்தோம்...இது தொடவேயில்லை! இன்னிக்கு காலைல கயிற்றை அறுத்துக்கிட்டு நேரா இங்க வந்துடுச்சு.”
அவர் ஆட்டைப் பார்த்தார். பிறகு குழந்தைகளைப் பார்த்தார்.
”ஐந்தறிவு ஜீவனுக்கு இருக்கும் அன்பைக் கூட ஆறறிவு மனுஷங்க நாம புரிஞ்சுக்காமப் போயிடறோம் தம்பி... இந்த ஆடு உங்க வீட்டையே தன் வீடா நம்பிட்டிருக்கு... அதனால் இதை நீங்களே வெச்சுக்கங்க! நான் கொடுத்த பணம் பற்றிக் கவலைப்படாதீங்க...மெதுவாக் குடுத்தாப் போதும்.”
முருகனின் கண்களில் கண்ணீர்.
அந்த ஆடு அனிச்சையாக பழைய பட்டிக்குள் சென்று தன் இடத்தில் நின்றது.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.




# திருவிளையாடல் புராணம் 25



சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி.

## பழியஞ்சின படலம்

ராஜசேகரபாண்டியன் மறைவுக்குப் பின் அவரது மகன் குலோத்துங்க பாண்டியன் ஆட்சிப் பொறுப்பேற்று செவ்வனே ஆட்சி நடத்தி வந்தான். இவனது ஆட்சிக்காலத்தில், மதுரையம்பதிக்கு திருப்புத்தூர் என்னும் ஊரைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் தன் மனைவி, குழந்தையுடன் வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் களைப்பு ஏற்படவே, அவர்கள் ஒரு ஆலமரத்தடியில் தங்கினர். அந்தணர் அங்கு தண்ணீர் கிடைக்கிறதா என பார்க்கச் சென்றுவிட்டார். அவரது மனைவி களைப்பு தாங்காமல் அப்படியே கண்ணயர்ந்து விட்டாள். குழந்தை மணலைக் களைந்து விளையாடிக் கொண்டிருந்தது. காற்று ஜிலுஜிலுவென வீசியது. அப்போது, விதி அந்த மரத்தில் இருந்து விளையாடியது. யாரோ ஒரு வேடன், அந்த மரத்தில் தங்கியிருந்த புறாக்களை வேட்டையாட எய்திருந்த அம்பு ஒன்று மரக்கிளையில் சிக்கியிருந்தது. காற்று வேகமாக வீசவே அந்த அம்பு மரத்தில் இருந்து கீழே விழுந்தது. மிக உயரத்தில் இருந்து விழுந்ததால் அது படுத்திருந்த அந்தணரின் மனைவி வயிற்றில் பாய்ந்தது. அவள் அலறித்துடித்தாள். சுற்றிலும் யாருமில்லை. அந்தணரும் வரக்காணோம். ரத்தப்பெருக்கு அதிகமாகவே, அவளது உயிர் பிரிந்து விட்டது. அந்த சமயத்தில், அந்தப் பக்கமாக ஒரு வேடன் வந்தான். அவன் இந்த அம்பை எய்திய வேடன் அல்ல! புதியவன். அவனும் களைப்பால் அந்த மரத்தடிக்கு வந்தான். இறந்து கிடக்கும் அந்தணரின் மனைவியையோ, அவளது குழந்தையையோ அவன் கவனிக்கவில்லை. களைப்பு மிகுதியால் அவன் மரத்தின் மற்றொரு புறத்தில் படுத்து தூங்கி விட்டான். தண்ணீர் கொண்டு வரச்சென்ற அந்தணர் திரும்பினார். தன் மனைவி ரத்த வெள்ளத்தில் கிடப்பது கண்டு துடித்தார்.பக்கத்தில் குழந்தை ஏதுமறியாமல் விளையாடிக் கொண்டிருந்தது. அலறி துடித்த அவர், சுற்றும்முற்றும் பார்த்தார். மரத்தின் மறுபுறத்தில் தூங்கிக் கொண்டிருந்த வேடனைக் கண்டார். உறங்கிக் கொண்டிருந்த வேடனை தட்டி எழுப்பிய அந்தணர், அடப்பாவி! என் மனைவியை அநியாயமாகக் கொன்று விட்டாயே! நாங்கள் உனக்கு என்ன பாவம் செய்தோம்? அவள் உனக்கு என்ன கேடு செய்தாள்? என்று கோபத்துடன் கேட்டார். தூக்கக்கலக்கத்தில் இருந்த வேடன் ஏதும் புரியாமல் விழித்தான்.யார் இவர்? உறங்கிக் கொண்டிருந்த தன்னை எழுப்பி, சம்பந்தமில்லாமல் ஏதோ கேட்கிறாரே! எனக்கருதியவன், அதன்பிறகு தான் அங்கு நடந்த விபரீதத்தைப் புரிந்து கொண்டான். ஐயோ!



நான் இந்தப் பெண்ணைக் கொன்றேனா? ஆண்டவன் சத்தியமாக இல்லை ஐயா! நான் வேடன் தான்! ஆனால், மனிதர்களை நான் வேட்டையாடுவதில்லை. இந்தப் பெண் எப்படி இறந்தாள் என எனக்குத் தெரியாது. இவள் உடம்பில் பதிந்துள்ள அம்பு என்னுடையதல்ல, என்று கதறினான். அந்தணர் விடவில்லை குலோத்துங்க பாண்டியனின் அரண்மனைக்கு வேடனை அழைத்து வந்தான் அந்தணன்.

தனது மனைவியின் உடலை அரண்மனை வாசலில் கிடத்திய அந்தணன், காவலன் மூலம் ராஜாவுக்கு சேதி சொல்லியனுப்பினார். அப்போது அரண்மனையில் இருந்த குலோத்துங்க ராஜா வெளியே வந்தான். அந்தணன் தனது வழக்கை மன்னனிடம் எடுத்துரைத்தார். குலோத்துங்கன் வேடனை பிடித்து கடுமையாக விசாரித்தான். வேடனோ, இந்தக் கொலையை நான் செய்யவே இல்லை ராஜா! என்றான். இருப்பினும், அவன் மீது ராஜாவுக்கு கடும் சந்தேகம் ஏற்பட்டது. வேடனை சிறையில் அடைத்து சித்ரவதை செய்தேனும் உண்மையை வரவழைக்க காவலர்களுக்கு உத்தரவிட்டான். அவர்களும் அவனை எவ்வளவோ சித்ரவதை செய்தும், அவன் தனது நிலையில் உறுதியாக இருந்தான். குலோத்துங்கனுக்கு என்ன செய்வதென தெரியவில்லை. அந்தணரே! உமது மனைவியின் உடலை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள். அதற்குரிய செலவைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஐந்துநாள் கழித்து இங்கு வாருங்கள். உங்களுக்கு சரியான தீர்ப்பு சொல்லப்படும், என்றான். அந்தணரும் கிளம்பினார். மன்னன் குலோத்துங்கன் மீனாட்சியம்மை திருக்கோயிலுக்குச் சென்றான். சுந்தரேஸ்வரரை மனதார வணங்கினான். சொக்கநாதப் பெருமானே! இக்கட்டான இவ்வழக்கில் ஒன்று யார் குற்றவாளி என கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த வழக்கின் தீர்ப்பு ஒருவேளை தவறாகிப் போய்விடுமானால், மதுரையின் மாண்பு பாழாகி விடும். பாண்டியதேசம் நீதி தவறிய நாடு என்று உலகெங்கும் பறைசாற்றப்படும். இந்த நிலையில் இருந்து நீ தான் என்னைக் காத்தருள வேண்டும், என்றான். அப்போது பேரொளி அசரீரி ஒலித்தது. குலோத்துங்கா! கலக்கம் வேண்டாம், இன்னும் சில நாட்களில் செட்டியத்தெருவில் ஒரு திருமணம் நடக்க இருக்கிறது. அந்த மணவிழாவுக்கு நீயும், பாதிக்கப்பட்ட அந்தணனும் மாறுவேடத்தில் சென்று வாருங்கள். உண்மை புரியும், என்றது. சொக்கநாதரே தன்னிடம் நேரில் பேசியதாக மகிழ்ந்த மன்னன், கவலை நீங்கி புறப்பட்டான். செட்டியத்தெருவில் எப்போது திருமணம் நடக்கப்போகிறது என்ற விபரத்தை அமைச்சர் மூலமாகத் தெரிந்து கொண்டான். மணநாளன்று, மன்னனும் அந்தணனும் சென்று மணப்பந்தலில் கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்து கொண்டனர். அப்போது எமகிங்கரர்கள் இருவர் தங்கள்உருவத்தை மறைத்துக் கொண்டு அந்த பந்தலுக்குள் வந்தனர். அவர்கள் மன்னனின் அருகில் அமர்ந்தனர். திடீரென மன்னனுக்கும், அந்தணனுக்கும் அவர்களின் குரல் கேட்டது. ஒரு கிங்கரன் மற்றொருவனிடம், ஏ எமதூதா! இதோ! இந்த மணமேடையில் வீற்றிருக்கும் மணமகனின் உயிரைக் கொண்டு வர வேண்டும் என்பது நமது தலைவர் எமதர்ம ராஜாவின் கட்டளை. இவன் உயிரை எப்படி பறிக்கலாம்? என்று யோசனை கேட்டான். அதற்கு இன்னொருவன், அட போடா! இதென்ன பிரமாதம்! கடந்த வாரம் மரத்தடியில் ஓய்வெடுத்த அந்தணரின் மனைவியின் வயிற்றில் மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த அம்பை விழச்செய்து உயிர் வாங்கினோமே! அதுபோல், இவ்வீட்டின் பின்னால் நிற்கும் மாட்டை அவிழ்த்து விடுவோம், அது நேராக மணமேடைக்கு ஓடி வந்து அவனைக் குத்திக் கொல்லட்டும். நாம் அவனது உயிருடன் திரும்பி விடலாம், என்றான். குலோத்துங்கனும் அந்தணனும் அதிர்ந்து விட்டனர். வேடன் மீது தவறில்லை என்ற உண்மை புரிந்தது.

மன்னனும், அந்தணனும் செய்வதறியாது திகைத்து நின்றனர். இதற்குள் கண்ணுக்குத் தெரியாத எமகிங்கரர்கள் அந்த வீட்டின் பின்னால் சென்றனர். அங்கு கட்டி வைக்கப்பட்டிருந்த காளையின் கயிறு அவிழும்படியாகச் செய்தனர். கட்டறுபட்ட காளை வேகமாக ஓடி வந்தது. மணமேடையை நோக்கிப் பாய்ந்தது. கூட்டத்தினர் சிதறி ஓடினர். மணமேடையில் இருந்த மணமகன் கூட்டத்தின் நடுவே சிக்கிக் கொண்டான். காளை அவனை தன் கொம்புகளால் அவனைக் குத்திச் சாய்த்தது. ரத்த வெள்ளத்தில் சாய்ந்த மணமகன் சற்றுநேரத்தில் இறந்தான். குலோத்துங்கனும், அந்தணனும் அங்கிருந்து வெளியேறினர். அவர்கள் நேராகச் சிறைக்குச் சென்று அப்பாவியான வேடனிடம் மன்னிப்பு கேட்டு அவனுக்கு இழைத்த கொடுமைகளுக்காக வருந்தினர். பின்னர் பாண்டிய குலோத்துங்கன் வேடனுக்கும், அந்தணனுக்கும் வேண்டிய அளவு பொன்னும் பொருளும் கொடுத்து, அந்தணனை மறுமணம் செய்து கொண்டு மகிழ்வுடன் வாழ வலியுறுத்தினார்.

பின்னர் அரண்மனையிலிருந்து நேராகத் திருக்கோயிலுக்குச் சென்ற பாண்டியன் குலோத்துங்கன் சொக்கநாதப் பெருமானைப் பணிந்து வணங்கி, ”எம்பெருமானே அடியேன் பொருட்டே தேவரீர் பழியஞ்சு நாதராய் விளங்கினீர்!" என்று வியந்து போற்றித் துதித்தான்.

இக்கட்டான சூழ்நிலையில் இறைவனின் பாதங்களைப் பற்றினால் அவரே சிக்கலை தீர்த்துவைப்பார் என்பதை இப்படலம் எடுத்துக்காட்டுகிறது.

(தொடரும்)

# பூஜை அறையில் ஏன் தண்ணீர் வைக்கிறார்கள் என்று தெரியுமா?

ஒவ்வொரு நாளும் பூஜைக்கு சுவாமிக்கு நெய்வேத்தியம் படைப்பதுண்டு.

எச்சில் படாத உணவுகள், பழங்கள் ஆகியவற்றை நாம் கடவுளுக்கு வைக்கலாம். நம்முடைய பூஜை அறை மண் பானையிலேயோ அல்லது செம்பு பாத்திரத்திலேயோ தண்ணீரை நிரப்பி வைப்பது மிகவும் நல்ல பலனை கொடுக்கும்.

வழிப்பாட்டின் போது தினமும் தியானத்தில் அமர்ந்து நமக்கு பிடித்த தெய்வத்தின் மூல மந்திரத்தை சொல்ல வேண்டும். அவ்வாறு செய்வதால் நாம் சொல்லும் மந்திரத்தின் (நேர்மறை ஆற்றல்) அதிர்வலைகள் அந்த தண்ணீரில் இறங்கும். இவ்வாறு செய்து அந்த தண்ணீரை அருந்துவதால் நன்மைகள் உண்டாகும்.





பூஜையின் போது தீபாராதனை காட்டி, தெரிந்த தெய்வப் பாடல்களை பாடி வழிபடலாம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இரும்புப் பொருள்களை பூஜைக்குப் பயன்படுத்தக் கூடாது. இரும்பு எமனுக்கு உரியது. இரும்பினால் நேர்மறை சக்திகளை கிரகிக்க முடியாது. வெள்ளி, தாமிரம், ஈயம் பூசிய பித்தளை, மண்ணால் ஆன பூஜைப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு நாள் பூஜையின்போதும் சிறிய பாத்திரத்தில் தண்ணீர் வைத்து பூஜை செய்ய வேண்டும். அடுத்த நாள் அதைக் கூரையில் ஊற்றிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் துர்சக்திகள் நம் வீட்டை அண்டாது.



பூஜையின்போது மணியோசை எழுப்புவதும் கூட துர்சக்திகள் நெருங்காமல் இருப்பதற்குத்தான். மணியின் இனிய ஓசையானது தீய சக்திகளை விரட்டி, தெய்வீக சக்தியை வீட்டில் நிலவச் செய்யும் வல்லமை கொண்டது. பூஜையின் போது ஐம்பூதங்கள் அங்கே ஐக்கியமானால் அவர்களின் சக்தி நமக்கு கிடைக்கும். இதில்...

ஆகாயம் என்பது வெட்ட வெளி. அது பூஜை அறையில் வியாபித்து இருக்கும்.

அடுத்து நிலம். அது நம்மை தாங்கி நிற்கும் தரை.
மூன்றவதாக நெருப்பு, காற்று அது நாம் பூஜை அறையில் ஏற்றும் தீபத்தில் உள்ளது.

ஆனால் தண்ணீர் அங்கு இல்லை. அதற்காக நாம் தண்ணீரையும் அங்கு வைக்கிறோம். பூஜை அறையில் தண்ணீர் வைப்பதன் மூலம் ஐம்பூங்களின் சக்தி நமக்கு கிடைக்கும் என்பதும் ஐதீகம்.

Balachandar

**தினம் ஒரு தலைவர்கள்**

# ஏ.எஸ்.கே. வரலாறு

ஏ. எஸ். கே. (A.S.K.) என்பவர் இந்திய பொதுவுடமை கட்சியின் தலைவர்களில் ஒருவராவார். இவரது இயற்பெயர் ஆவியூர் சீனிவாச அய்யங்கார் கிருஷ்ணமாச்சாரி என்பதாகும். தமிழகப் பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் சிறந்தவராகவும் கருதப்படுகிறார். ஈ.வெ. ரா மற்றும் அம்பேத்கார் மீது இவர் பெரும் மதிப்பை கொண்டிருந்தார். ஆங்கில மொழிக் கவிஞர்., தொழிற்சங்கத் தலைவர். விடுதலைப் போராட்ட வீரர். எழுத்தாளர். இறைமறுப்பாளர். 1969, சூன் 6 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் 692ஆம் பக்கத்தில் அறிவித்து தன்னுடைய பெயரை ஏ. எஸ். கே. என மாற்றிக்கொண்டவர்.



பிறப்பும் குடும்பமும்
ஆவியூர் என்னுமிடத்திலிருந்து இடம்பெயர்ந்து ஐதராபாத் நகரில் வாழ்ந்து வந்த சீனிவாச அய்யங்கார், தங்கம்மாள் இணையருக்கு ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர் ஏ. எஸ். கே. இவருடன் இராசம்மாள், பங்கசம் என்னும் இரு அக்காக்களும் இராமசாமி, துரைசாமி, பார்த்தசாரதி என்னும் மூன்று அண்ணன்களும் அரங்கனாதன் என்னும் தம்பியும் பிறந்தனர். ஏ. எஸ். கே. விற்கு மூன்று வயதாகும்பொழுது அவர்தம் அம்மா தங்கம்மாள் இயற்கை எய்திவிட்டார். எனவே, இவர்கள் அனைவரும் தம் பெரியம்மாவாகிய பொன்னம்மாளிடம் வளர்ந்தனர். ஏ. எஸ். கே.தம் தம்பியான அரங்கநாதன், ரெங்காச்சாரி என்னும் பெயரில் படித்துப் பட்டம்பெற்று, மும்பய்க்குச் சென்றார். இவர்தான் பின்னாளில் பொதுவுடைமைக் கட்சியின் வழக்கறிஞராகத் திகழ்ந்து புகழ்பெற்ற ஏ. எஸ். ஆர். சாரி ஆவார். இவர் தில்ஷாத் சையத் என்னும் மும்பை நகரைச் சேர்ந்த முசுலீம் பெண்ணை மணந்து கொண்டார்.

ஏ. எஸ். கேக்கு அண்ணன்களான துரைசாமி சாதி கடந்த திருமணமும் பார்த்தசாரதி மதம் கடந்த திருமணமும் செய்துகொண்டனர். ஏ. எஸ். கே. திருமணமே செய்துகொள்ளவில்லை.

ஆசிரியர் வேலை
ஏ. எஸ். கே. தன்னுடை பட்டப்படிப்பு முடிந்ததும் ஐதராபாத் நகரிலிருந்த கிறித்துவப்பள்ளி ஒன்றில் அறிவியல் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்பள்ளியில் ஏற்கனவே கிருஷ்ணமாச்சாரி என்னும் ஒருவர் வேலைபார்த்துக் கொண்டிருந்ததால், அப்பள்ளின் தலைவராக இருந்த பாதிரியார், இவரை ஏ. எஸ். கே. அய்யங்கார் என அழைக்கத் தொடங்கினார். இப்பெயரே, தன்னுடைய பெயரை சட்டப்படி மாற்றிக்கொண்ட பின்னரும், ஏ. எஸ். கே.வின் பெயராக நிலைத்துவிட்டது. அப்பள்ளியில் ஏ. எஸ். கே. சில மாதங்களே வேலைபார்த்தார். பின்னர் அங்கிருந்து கிளம்பி சென்னைக்குச் சென்றார்.

அரசியல் வாழ்க்கை
ஏ. எஸ். கே. தாம் மாணவராக இருந்த பொழுதே, மீரத்து பொதுவுடைமையாளர் சதி வழக்கு பற்றிய செய்திகளைப் படித்ததால் பொதுவுடைமைக் கோட்பாட்டின் மீது ஆர்வம் கொண்டார். காரல் மார்ச்சு எழுதிய நூல்களைப் படித்தார். எனவே 1934 ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்த ஏ. எஸ். கே., அப்பொழுது தடைசெய்யப்பட்டிருந்த இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார்.
1935ஆம் ஆண்டில் ம. சிங்காரவேலருடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.
1937 ஆம் ஆண்டில் பெரியார் ஈ. வெ. இரா. வுடம் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.
1937ஆம் ஆண்டில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் எஸ். வி. காட்டே தொழிற்சங்க இயக்கத்திற்கும் பொதுவுடைமைக் கட்சிக்கும் வழிகாட்டுவதற்காக சென்னைக்கு வந்து தங்கியிருந்தபொழுது அவருடன் இணைந்து பணியாற்றினார்.
1937ஆம் ஆண்டில் சென்னை அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக ஏ. எஸ். கே. பதவி வகித்தார்.

விடுதலைப் போராட்ட காலத்திலும் அதற்குப் பின்னருமாக ஏ. எஸ். கே தனது அரசியல் போராட்டங்களால் பதினைந்தரை ஆண்டுகளைச் சிறையில் கழித்திருக்கிறார்.

தேச விடுதலைப் போராட்டங்களிலும் தொழிற்சங்கப் போராட்டங்களிலும் ஈடுபட்ட அவர், சென்னை துறைமுகத் தொழிலாளர்களுக்காக அமைத்துக் கொடுத்த தொழிற்சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலை, பயிற்சிப்பள்ளிகள் ஆகியன அவரது பெயரை இன்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

எழுதிய நூல்கள்
கம்யூனிஸம் என்றால் என்ன?
கம்யூனிஸ்டு தத்துவத்தின் அடிப்படை
கடவுள் கற்பனையே புரட்சிகர மனித வரலாறு
தொழிற் சங்கம்
தங்கம்மா (நெடுங்கதை)
உலக கம்யூனிஸ்டு இயக்க வரலாறு
பகுத்தறிவின் சிகரம் ஈ. வெ. ரா, (பகத் ஹவுஸ் பப்ளிகேஷன்ஸ், 1/73 பிராட்வே, சென்னை; மு. பதிப்பு 1974)
ரஷ்யா
அம்பேத்கார் வாழ்க்கையும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனையும்.

வாழ்க்கை வரலாறு
ஏ. எஸ். கே.வின் வாழ்க்கை வரலாற்றை தொழிற்சங்க மேதை ஏ. எஸ். கே. அய்யங்கார் என்னும் தலைப்பில் முத்து குணசேகரன் எழுதியிருக்கிறார். இந்நூலை சென்னையில் உள்ள சேகர் பதிப்பகம் 2008ஆம் ஆண்டில் வெளியிட்டது.

# ‘உறியடி’ விஜய் குமார் நடித்துள்ள அறிவு படத்தின் #FirstLook போஸ்டர் வெளியீடு!




‘உறியடி’, ‘உறியடி 2’, ‘ஃபைட் கிளப்’ என தொடர்ந்து மூன்று வெற்றி படங்களை அடுத்து விஜய் குமார் தற்போது அறிவு என்ற புதிய படத்தில் நடித்துள்ளார்.

இயக்குநர் சத்யசிவா இயக்கியுள்ள இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மகளிர் தினத்தை ஒட்டி வெளியிடப்பட்டுள்ளது.

பெண் உரிமைகளை மையமாகக் கொண்டு வலுவான சமூகச் செய்தியுடன் இப்படம் உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

நடிகை கல்யாணி ப்ரியதர்ஷன் சமீபத்தில் பகிர்ந்த போட்டோஷூட் க்ளிக்ஸ் அனைத்தும் ரசிகர்களை வெகுவாக ஈர்த்துள்ளன.



## விஜய் - திரிஷா குறித்த நடிகர் விமல் சொன்ன கதை



தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் குறித்து கட்சி தொடங்கியதில் இருந்து பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டது. இதனிடையே கரூர் சம்பவத்தை அடுத்து அவர் மீது குற்றச்சாட்டுகள், வழக்குகள் என நடைபெற்று வருகிறது. இதற்கெல்லாம் அவருக்கு ஆதரவாக பலரும் கருத்து தெரிவித்து வந்தனர்.

இதற்கிடையே, விஜயிடம் இருந்து விவாகரத்து கோரி அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அவரது மனைவி சங்கீதா முன்வைத்தார். இதுதொடர்பாக மறுப்பு எதுவும் தெரிவிக்காத விஜய், சங்கீதா கூறியது உண்மை என்பதை மெய்பிக்கும் வகையில் கல்பாத்தி அகோரம் இல்லத் திருமண விழாவில் ஒரே காரில் திரிஷாவுடன் விஜய் ஒன்றாக வந்தது அமைந்தது. இதுதொடர்பாக விஜய் மீது கடும் விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வருகிறது. முன்னதாக விஜய்க்கு ஆதரவாக குரல் எழுப்பியவர்கள் கூட தற்போது அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், ஒரே காரில் விஜய் – திரிஷா வந்தது குறித்து நடிகர் விமலிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு சட்டென விமல், “அந்தக் காரை இப்போ யாரு வச்சிருக்கா” என்று கூறியதும் அங்கிருந்தவர்கள் சிரிக்க தொடங்கினர்.

இது தொடர்ந்து விஜய் அரசியல் வருகை குறித்த கேள்விக்கு பதில் அளிக்க விருப்பம் இல்லாமல் மழுப்பலான பதில்களை விமல் கொடுத்தார்.

## வாகனத்தை விரட்டும் ரசிகர்களுக்கு அட்வைஸ்!



தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் பிரசாரத்திற்கு செல்லும் போதெல்லாம் அவரது வாகனத்தை ரசிகர்கள் பின்தொடர்ந்து ஆபத்தான முறையில் பயணம் செய்யும் போக்கு அதிகரித்துள்ளது.

அண்மையில் தஞ்சாவூரில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் வாகனத்தைப் பின்தொடர்ந்து சென்று, விபத்தில் சிக்கி திருச்சியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் படுகாயமடைந்தார்

இந்நிலையில் இது தொடர்பாக நடிகர் விமலிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், நடிகரை பிடிக்கும் என்றால் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். உயிரை பணயம் வைத்து வாகனத்தை விரட்டி பின்தொடராதீர்கள் என்று விஜய் வாகனத்தை விரட்டும் ரசிகர்களுக்கு அட்வைஸ் கொடுத்தார்.



நடிகர் சந்தானம் ஜோடியாக வல்லவனுக்கு புல்லும் ஆயுதம், இனிமே இப்படித்தான் போன்ற படங்களில் நடித்து தமிழ் சி சினிமாவில் அறிமுகம் ஆனவர் ஆஷ்னா சவேரி.

அதன் பின் சில வருடங்கள் தமிழில் அவருக்கு அதிக பட வாய்ப்புகள் வந்தது. ஆனால் சமீப காலமாக அவருக்கு ஹீரோயின் வாய்ப்புகள் அதிகம் வரவில்லை.

இந்நிலையில் ஆஷ்னா சவேரி தாராள கிளாமர் உடையில் செம ஹாட் போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். இதோ..

## யார் பிரபலம்?... விஜய்யை மறைமுகமாக தாக்குகிறாரா ?



சென்னையில் நடந்த திருமண வரவேற்பு விழாவில் நடிகர் விஜய்யும், நடிகை திரிஷாவும் ஜோடியாக பங்கேற்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. விஜய்யிடம் இருந்து அவரது மனைவி சங்கீதா விவாகரத்து கோரியுள்ள நிலையில், நடிகையுடன் அவர் ஜோடியாக வலம் வந்தது பல்வேறு விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

இந்த விவகாரத்தில் விஜய்க்கு எதிர்ப்புகளும், ஆதரவும் எழுந்து வரும் நிலையில், கிருத்திகா உதயநிதி வெளியிட்ட ஒரு பதிவு கவனம் ஈர்த்துள்ளது.

தமிழகத்தின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மனைவியும், சினிமா இயக்குனருமான கிருத்திகா உதயநிதி தனது ‘எக்ஸ்’ பக்கத்தில், ‘பிரபலம் என்பது யார்? நீங்களும், உங்கள் மீதான மக்களின் பார்வை மற்றும் புரிதல் தான் உங்களை ஒரு பிரபலமாக்குகிறது. ஆனால் மக்களின் பார்வை தான் நான் என்று நினைத்துக்கொண்டு, உங்கள் சுய அடையாளத்தை நீங்கள் இழக்கும்போது, நீங்கள் கடுமையான பிரச்சனையில் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்’, என்று குறிப்பிட்டுள்ளார்.

இது பிரச்சனையில் மாட்டிக்காதீங்க... என்று நடிகர் விஜய்யை, கிருத்திகா உதயநிதி மறைமுகமாக தாக்கி எச்சரிப்பதாக இருக்கிறது என்று பேசப்படுகிறது.

## விவாகரத்து: சனம் செட்டி விமர்சனம்




“விவாகரத்து வழக்கு தொடர்ந்த நிலையில் நீலாங்கரை வீட்டிற்குள் அனுமதி மறுப்பதால் சென்னையில் வீடின்றி தவிக்கிறேன். விவாகரத்து வழக்கு முடிந்து வேறு வீட்டிற்கு செல்லும் வரை நீலாங்கரை இல்லத்தில் வசிக்க விஜய் அனுமதிக்க வேண்டும். விஜய் வசிக்கும் நீலாங்கரை இல்லத்தில் தனக்கு சரிபாதி உரிமை உள்ளது. நீலாங்கரை வீட்டில் வசிப்பதற்கு அனுமதி கோரினால் வழக்கறிஞர் மூலமாக விஜய் தரப்பு மிரட்டுகின்றனர்.

படத்தில் நடித்து கோடி கோடியாய் சம்பாதிக்கும் விஜய் தனக்கும், பிள்ளைகளுக்கும் நியாயமான ஜீவனாம்சம் வழங்க வேண்டும். விஜய் எனக்கும், என் பிள்ளைகளுக்கும் நியாயமாக சேர வேண்டியதை வழங்க வேண்டும். பலமுறை முயற்சித்தும் பரஸ்பரம் பிரிந்து செல்ல விஜய் மறுப்பு தெரிகிறார் என்று சங்கீதா கூறியுள்ளார்.

சங்கீதா தொடர்ந்த விவாகரத்து வழக்கு குறித்து தவெக மகளிர் தின விழா கொண்டாட்டத்தில் பேசிய விஜய், “சமீபத்தில் ஓடிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு நீங்கள் போராடி, ஹர்ட் (hurt) ஆவதை நான் பார்க்கிறேன். அதை பார்த்து எனக்கு ஹர்ட் ஆகிறது. அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்களும், நானும் மக்களின் பிரச்சினைகளை மட்டும் பார்ப்போம், சரியா. ஹர்ட் ஆகாதீர்கள், இது அந்த அளவிற்கு WORTH இல்லை” என்றார்.

விஜயின் இந்த பேச்சுக்கு தவெக பெண் நிர்வாகிகள் கை தட்டி ஆரவாரம் செய்தனர். இந்நிலையில், விஜயின் இந்த பேச்சை நடிகை சனம் செட்டி விமர்சித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.அந்த பதிவில், என்னது?? WORTH ஏ இல்லியா ??? இதற்கு பெண்கள் கைதட்டி உற்சாகம் அடைகின்றனர்” என்று விரக்தியுடன் தெரிவித்துள்ளார்.

சமீப காலமாக விஜயை ஆதரித்து வீடியோ வெளியிட்டு வந்த சனம் செட்டி, திருமண விழாவில் திரிஷாவுடன் ஒரே காரில் ஒரே நிறத்திலான ஆடைகள் அணிந்து வந்த வீடியோவை பகிர்ந்து எதிர்ப்பு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.








# WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424

# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872
















தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE











## நிலவு...

நிலவே நீ புரியாத புதிராய்
இருந்தபோதே உன்னைப்
பெண்ணென்று சொன்னோம்
ஏன் தெரியுமா...?

முதல் நாள் முகம் மறைத்து
மறுநாள் விழிகாட்டி...
வெளியிலே உலாபோகும்
உன்னைப் பெண் என்று
சொல்லாமல் வேறு
என்னென்று சொல்வது...!

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை

## புரியாத புதிர் !

கடந்த வாரம் வரை கரூர்
தர்பூசணி என்று துண்டு
இருபது ரூபாய் என விற்றுக்
கொண்டிருந்தவர்...
இந்த வாரம் திடீரென
முப்பது ரூபாய் என்கிறார் !
காரணம் கேட்ட போது...
'பார்த்தா படிச்சவர்
மாதிரி இருக்கீங்க,
அமெரிக்காவுக்கும்
ஈரானுக்கும் சண்டை
நடக்கிறது உங்களுக்கு
தெரியாதா !"
என்கிறார் அவர் !



கரூர்
தர்பூசணிக்கும்
ஈரான்
போருக்கும்...
என்ன
சம்பந்தம்
என்று புரியாத
புதிராகவே உள்ளது !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

உழைத்தபின் பலனைக்
கொஞ்சமாய்ப் பெற்றால்,
பஞ்சம் அது..

உழைக்காமலே
அதிகம் பெற்றால்,
அது– லஞ்சம்...!
என்றும் கனவில்
கண்விழித்து நான்
வாழும் நாட்கள் எல்லாம்



நீ இல்லாமல்
நிகழ்வாவ
தில்லை
கனவானாலும்
அது காய
மேயாகும் .....!

**Balachandar**



## சக்தி....

பேராற்றல் கொண்டு
போர்முரசு கொட்டு..

வீணர்கள் முன்னே
கூர்வாளினைத் தீட்டு...

அன்பில் நீ... நந்தவனம்...
அரவணைப்பில் நீ...

பெருஞ் சுவர்...
தாய்மையில் நீ...பேரரசி..

இல்லறம் காத்தலில்...
நீ போர்வாள்..

காதலில் நீ ...
வானவில்..
சுற்றம் பேணுவதில்..நீ
குடும்ப விளக்கு...

பெண்ணே நீ... பேராண்மை...
உன்னாலே உலகம்
சுழல்கிறது...தன்னாலே...

நீ இல்லாமல் போனாலே...
திண்டாடும்... உலகம்

அங்குலம் அங்குலமாய்
உலகை அலங்கரிக்கும்...
மங்கையர் திலகம்

வெற்று அண்டத்தின்...
வண்ணத்துப்பூச்சி...நீ...



பேரன்பே மூலமான...
நல்லாட்சி...நீ...
மங்கையரைப் போற்றி...
மலரச் செய்வோம்...
உலகை...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## போனதெங்கே மனிதநேயம்



ஈரமண்ணாய் மனம்கசிந்து வீட்டுப்பக்கம்
இருப்போரின் துயரினிலும் பங்கு கொண்டு
வேரடியாய் அன்புதனில் கிளையணைத்து
வெறுப்பின்றிக் கூட்டமாக ஒன்றிணைந்து
தூரத்தே அடிபட்டு வீழ்ந்த வர்க்கும்
துடிதுடித்தே ஓடிப்போய் உதவி செய்தும்
பாரத்தைப் பிறருக்காய்ச் சுமந்து நின்ற
பரிவென்னும் மனிதநேயம் போனதெங்கே !

சேற்றினிலே களையெடுக்கும் கரங்களாலே
சேர்ந்தணைத்துக் கபடுகளைக் களைந்தெரிந்து
நாற்றுகளை நட்டுவயல் வளர்த்தல்போல
நகையாலே வஞ்சமின்றி வளர்ந்த நட்பால்
வேற்றுமைகள் இல்லாத குடும்பமாக
வேறுவேறு சாதியரும் நெஞ்சமொன்றி
போற்றுகின்ற சோதரராய்ப் பிணைந்திருந்த
போலியற்ற மனிதநேயம் போனதெங்கே !

காடுகளாய் நம்முன்னோர் வளர்த்து வைத்த
கவின்மிகுந்த மரங்களினை வெட்டி வெட்டி
கோடுகளாய் மண்ணுடலைப் பிளக்க வைத்துக்
கொட்டிவந்த மழைவளத்தை அழித்த தைப்போல்
வாடுகின்ற பயிர்கண்டு வாட்டம் கொண்ட
வள்ளலாரின் மனிதநேயம் அழித்து விட்டோம்
பாடுபட்டு யாதுமஊர் என்ற பண்பைப்
பாதுகாத்துத் தந்ததனைத் தொலைத்து விட்டோம் !

பக்கத்தில் குடியிருப்போர் முகத்தைக்கூட
பார்க்காமல் வாழுகின்ற வகையைக் கற்றோம்
துக்கத்தில் துடிப்போரின் குரலைக் கேட்டும்
துடிக்காமல் இயல்பாக நடக்கக் கற்றோம்
நக்கலாகப் பிறர்துயரில் வாடக் கண்டும்
நகைத்தவரை ஏளனமாய்ப் பழிக்கக் கற்றோம்
வக்கிரமே எண்ணமாகி அடுத்திருப்போர்
வயிறதனில் அடிப்பதையே தொழிலாய்க் கற்றோம் !


பிறர்வாழப் பொறுக்காத மனத்தைப் பெற்றோம்
பிறர்நெஞ்சைப் புண்ணாக்கும் கலையில் தேர்ந்தோம்
பிறர்போற்றப் பொதுநலத்தை மேடை மீது
பிசிரின்றிப் பேசிநிதம் கள்ளராகப்
பிறர்பொருளை அபகரிக்கும் தன்னலத்தால்
பிறர்காலை வெட்டுவதில் வல்ல ரானோம்
சிரம்தாழ்த்தும் பழிதனக்கே நாணிடாமல்
சிறப்பாக நடிக்கின்ற நடிக ரானோம் !

சாதிகளின் பெயராலே சங்கம் வைத்தோம்
சாதிக்காய்த் தலைவரினைத் தேர்ந்தெடுத்தோம்
சாதிக்கும் சக்தியெல்லாம் ஊர்வலத்தில்
சாதனையாய்ப் பகையுணர்ச்சி பெருக்குவித்தோம்
வாதிக்கும் கருத்தெல்லாம் வாயாலன்றி
வாள்தடிகள் சங்கிலியால் மோதிக் கொண்டோம்
போதிக்கும் அன்புவிட்டு மதங்களென்னும்
போதையாலே மதம்பிடித்தே அலையுகின்றோம் !

அறிவியலில் உலகமெல்லாம் அற்புதங்கள்
அரங்கேற்றக் கலவரங்கள் அரங்கமேற்றி
அறிவிலியாய்க் குறுமனத்தில் திகழுகின்றோம்
அணுப்பிளந்து அடுத்தகோளில் அவர்களேற
வெறியாலே உடன்பிறந்தோர் உடல்பிளந்து
வீதியெல்லாம் குருதியாற்றில் ஓடம் விட்டோம்
நெறியெல்லாம் மனிதத்தைச் சாய்ப்பதென்னும்
நேர்த்திகடன் கோயில்முன் செய்யு கின்றோம் !

வானத்தை நாம்வில்லாய் வளைக்க வேண்டா
வாடுவோரின் குரல்கேட்க வளைந்தால் போதும்
தேனெடுத்துப் பசிக்குணவாய்க் கொடுக்கவேண்டா
தேறுதலாய் நம்கரங்கள் கொடுத்தால் போதும்
தானத்தில் சிறந்ததெனும் நிதானத்தில்நாம்
தமரென்றே அனைவரையும் அணைத்தால் போதும்
மானுடந்தான் இங்குவாழும் சமத்துவத்தில்
மணபதையே அமைதிவீசும் நேயத்தாலே !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## பல்மருத்துவர் பணியை வாழ்த்துவோம்!

நேரிசை வெண்பா!

நல்வாழ்வில் பல்வாழ்வு
பாங்காகத்தேவையன்றோ!
பல்மருத்துவம்காணும்
பாங்காகச்..
சொல்லிடும்
நன்மருத்து வர்தம்மை
நன்றாக
வாழ்த்துவோம்
பொன்னாகக்கொள்வோம்
பொலிந்து!

பல்போனால்
சொல்போச்சே
என்பார்கள் பாரினிலே
சொல்லிடும் சொல்லைச்
சுவையாகச்... சொல்லிடுக!



பல்மருத்துவம்காணும்
பாங்காம் மருத்துவரை
நல்முறையில்
வாழ்த்தல் நனி!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.



## இயற்கை

மண்ணின் வாசமாய்
மக்களின் சுவாசமாய்
இடிபாடுகளுக்கு
இடையே பெய்த மழையில்
தென்றலை தாலாட்டி
செல்கிறாள்
இயற்கை அன்னை.

## துளிப்பாக்கள்

உலகம் சுருங்கி விட்டது
மனிதன் கையில்
கைபேசிகள்!

கவிஞன் எழுதுகோல்
செதுக்கும் சொற்கள்
கவிதையாகின்றன!

வெட்டிய மரம்
தரையில் வீழ்ந்தது
மர நிழல்?

குழல் இனிது யாழ் இனிது
என்று கூறுவர்



குயில் சத்தம்
கேளாதவர்!

ஒரு
பூந்தொட்டியில்
மென்மையான
மலர்களில்
வன்மையான
முள் ரோஜா!

**பூ.சுப்ரமணியன்,**
சென்னை

## கனவுகள் நனவு செய்

கனவல்லவோ நனவானது..
நனவல்லவோ..
செயலானது..
செயல்களெல்லாம் உயிர்
தந்தது.. உயிர்களெல்லாம்
கனவு கண்டது.!
தூங்கயிலே வரும் என்பது..
கனவென்பது பொய்யானது..
தூங்காமலே.. செய்வது
தான்.. கனவென்பது.. இது
கலாம் சொன்னது.!

ஏழைகளின்
கனவு யெல்லாம்
கஞ்சியொடு நின்று
போனது.. ஏய்ப்பவரின்
கனவுயெல்லாம்..
வஞ்சகமாய் வளர்ந்து
வந்தது..! கோழைகளின்
கனவுயெல்லாம்..
படுக்கையிலே பிறந்து
போனது..! கொள்கை
யெனும் கனவு ஒன்றே..
உலகத்தையே வெல்ல
வந்தது.!

நாய் நரிகள் கனவு
யெல்லாம் ஓலமிட்டு ஓய்ந்து
போனது.. பறவைகளின்
கனவு யெல்லாம்..
மேகமிடைப் பறந்து
போனது.. மனிதர்களின்
கனவொன்று தான்
விடுதலையில் நனவு
ஆனது.. கனவுகளே..
கனவுகளே.. உன்வரவே..
நல்வரவானது.!

**வே.கல்யாண்குமார்.**



## வாக்குரிமை

வாக்கு என்பது மக்களின்
வலிமை. வாழ்க்கைத்
தரத்தை மாற்றும் ஓர்
இயந்திரம். சரியான
தலைவரைத் தேர்ந்தெடுத்து
நாட்டின் வளர்ச்சியை
முன்னேற்ற நல்வழி
காண்போம். பணம் வாங்கி
வாக்களிக்காமல் யார்
நல்லவர் என்று
தேர்ந்தெடுத்து
வாக்களிப்போம்.
உண்மையாக சேவை
செய்யும் வேட்பாளரைத்
தேர்ந்தெடுப்போம்.
நாடு நலம் பெற நல்லாட்சி
அமைய நாம் வாக்கு
பயன்படட்டும். வாக்கு
என்பது மக்களின்
கைவிரலில். நாட்டை
மாற்றும் மகத்தான சக்தி
அதற்குண்டு. நேர்மையான
தலைவரைத் தேர்வுசெய்து
நாட்டின் வளர்ச்சியை
முன்னிலைப் படுத்துவோம்.
பணம், பரிசு பார்த்து
வாக்களிக்காமல்
உண்மை, உழைப்பு
அடிப்படையில்
தேர்ந்தெடுப்போம்.
ஒவ்வொரு வாக்கும்
நாட்டின் விதியை
நிர்ணயம் செய்வதைக்
கருத்திற்கொள்வோம்.
அதன் மூலம் வளரும்



பொருளாதார
வளர்ச்சியைச்
சிந்தித்து
வாக்களிப்போம்.
சிறந்த
இந்தியாவை
உருவாக்குவோம்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.



## இயற்கை

### பூமி

இது அண்டத்தில் சுழலும்
அதிசய பிண்டம்.!
நிலம் நீர் நெருப்பு காற்றால்
உருவான பந்து. !
உயிர்கள் கருவாகி உருவாகி
உலவிமறையும் உலகம்.!

### கடல்

இது பூமியின் முக்கால் உடல்!
நீளகடலுக்கு நீலநிறமே
நிரந்தரஆடை!லட்சம்
உயிர்கள் அச்சமின்றிவாழும்
காற்றேகாணாதனிஉலகம்.!
ஓசோன்படலத்தில்
ஓட்டைபோடாத ஆக்ஜீசன்
அண்டம்.!
சுழலும் பூமி பந்தில்
சொட்டுநீரும் சிந்தாத
பாதரசவடிவம்.!
அலை கையால் கரை
மகளை தொடதுடிக்கும்
துணிச்சல்காரன்.!
வலைவீசி வலைவீசி கோடி
மீன்கள் கொட்டிபிடித்தாலும்
சுரந்துவரும்
அச்சயப்பாத்திரம்.!
பொறுமையின் பொருளாய் நீ
இருந்தாலும்...?
சுள் என்று கோபப்பட்டால்....
சுனாமியாய் மாறி
கண்டம் தீவு எல்லாம்
கண்டதுண்டம்ஆக்கிடுவாய்.!
இயற்கை அன்னையின்
இரண்டாம் பிள்ளை இந்த
உலகில் ஈடுஇணை
உனக்கில்லை.!

### நெருப்பு

புள்ளியாய் உருவாகி பெரும்
புயலாய் உருமாறும்
புரியாத புதிரானவன்.!
நன்மைதீமை, ஜாதிமதம்,
நல்லவர்கெட்டவர் என்று
பேதம் பார்க்காதவன்!
தீபமாய் எரிகையில்
அடக்கத்தின் பொருளாவாய்!
அத்துமீறி எழுந்துவிட்டால்
காட்டுத் தீயாவாய்.!

### காற்று


இது உயிர்களின் உறைவிடம்!
இது உலகில்
இல்லையென்றால் அண்டமும்
முண்டமே.! மண்ணில்
தோன்றிய ஜுவராசிகளின்
உயிர்நாடி.!
உணர்வை மட்டும்
உணரசெய்யும் கண்களால்
காணமுடியாதமாயக்கண்ணாடி.!
இயற்கை தாயின் நான்காம்
பிள்ளை இதயதுடிப்பாய்
இருக்கும்பிள்ளை.!

### ஆகாயம்

இது அன்னாந்து பார்த்தால்
கண்கள் அளவிடமுடியாத
அதிசயம்.!
பூமி போல் கோடி கோள்கள்
சுற்றித்திரியும் சுதந்திர கூடம்.!
பகலில் நீலம், வெள்ளை,
வண்ணஆடை அணிந்து
வெளிச்சத்தையும்!
இரவில் கருப்பாடை அணிந்து
இருட்டையும் காட்டிடும்
கலைச்கூடம்.!
வெப்பம் காற்று மழை குளிர்
என்று பருவநிலைகளை
சுழற்றிக்காட்டும் காலசக்கரம்.!
இன்பம் துன்பம் இரண்டும்
ஒன்று இயற்கைக்குள்ளே
எல்லாம் உண்டு.

**கவிஞர் பொன். பனகல்**
**பொன்னையா.**

# நூல் விமர்சனம்




நூலின் பெயர்:
மாணவர்களுக்கான
புதுமொழிக் கதைகள்
ஆசிரியர்: செண்பகவடிவு
விலை: ₹120
வெளியீடு: பேஜஸ்
பப்ளிகேஷன்ஸ்
தொடர்புக்கு: 9176804412

சொல் தீண்டிப் பழக வேண்டிய வயதில் மாணவர்கள் எல்லோரும் செல் தீண்டிப் பழகிவிட்டனர்.

ஆன்லைன் , வாட்ஸ் அப் பல்கலைக்கழகங்கள், ஒருபோதும் நேரடி வகுப்புகளுக்கு ஈடாகாது என சுஜாதேசிகன் கூட கல்கி இதழில் கடைசிபக்க கட்டுரை எழுதினார்.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவை நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற கவிஞர் புலமைப்பித்தன் பாடல் கூட நல்லது வீட்டிலிருந்து தொடங்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

நம் பதின்ம வயதில் இருந்த நீதிபோதனைக் கதைகள் இப்போது இல்லாததும் மாணவர்கள் கெட்டுப் போகக் காரணம். இது போன்ற கதைகளை பாடத்திட்டத்தில் ஒரு துணைப் பாடமாகவே சேர்க்கலாம்.

9 கதைகள் இந்நூலில் எளிய நடையில்..... நட்பு எனும் சிறுகதை திருக்குறள் சொன்ன நட்பை விளக்கும் வகையில்:

அருண் பார்த்திபன் இருவரும் இணைபிரியா நண்பர்கள். அதே பள்ளியில் பயிலும் மூர்க்கமான மாணவன் ருத்ரன் , யார் எதை சொன்னாலும் நம்பும் அருண் மனதை கலைத்து, வீட்டிலிருந்து அருகிலுள்ள தோப்புக்கு அழைத்துச் செல்கிறான். மாமரங்களை காட்டி கல்லெறிந்து சில மாங்காய்கள் விழ, அருண் தோப்புக்காரன் பார்த்தால் என்னாவது? என பயம் கொள்கிறான், அதெல்லாம் ஒண்ணும் ஆகாது எனச் சொல்லும் ருத்ரன், தோப்புக்காரனைப் பார்த்ததும் அருணை விட்டுவிட்டு ஓடுகிறான். யாரடா மாங்கா திருடித் திங்கிறது? என தோப்புக்காரன் அருணைப்பிடித்து அதட்ட, அவன் ருத்ரன் தன்னை விட்டு ஓடியதை சொல்ல, அவன் ₹10 கொடுத்தால்தான் விடுவேன் , இனி இந்தப்பக்கமே வரக்கூடாது என மிரட்ட, இவன் கையில் பணமின்றி தவிக்க , அந்த வழி வந்த பார்த்திபன் நோட்டு வாங்க வைத்திருந்த ₹10 ஐ கொடுத்து காப்பாற்றுகிறான். உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு நண்பர் ராசி அழகப்பன் அவர்களின் மனைவியும் பள்ளி ஆசிரியையுமான திருமதி. செண்பக வடிவு இக்கதைகளை எழுதியுள்ளார்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**




## பெண்கள் !

அன்னையாக சகோதரியாக மனைவியாக மகளாக
அன்புத்தோழியாக வாழ்வில் அங்கம் தங்கப்பெண்கள் !

பிறப்பு முதல் இறப்பு வரை ஆண்களுக்கு
பெண்களின் பங்களிப்பு சொல்லில் அடங்காது !

தன்னலமின்றி குடும்ப நலம் பேணும் பெண்கள்
தன்னம்பிக்கையோடு சாதிக்க உதவிடும் பெண்கள் !

வெற்றி பெற்ற ஒவ்வொரு ஆணிற்குப் பின்னும்
விவேகமான பெண் இருப்பது முக்கால உண்மை !

நல்லவனாக்கி நல்லோர் மதித்திட வைப்போர்
நல்வழி நடத்திடும் வழிகாட்டிகள் பெண்கள் !

மனம் போன போக்கில் போன ஆண்களை
மனமாற்றம் செய்து மடைமாற்றுவோர் பெண்கள் !

புயலையும் பூவாக்கும் பேராற்றல் பெற்றோர் பெண்கள்
புதுமை விரும்பி புதுமை புகுத்தும் புரட்சிப் பெண்கள் !

வெள்ளத்தையும் வடிகாலாக்கும் வித்தைக் கற்றோர்
விவேகத்தை கற்பிக்கும் ஆசான்கள் பெண்கள் !

ஆண்களின் மேன்மைக்கு மென்மைக்கு காரணம் பெண்கள்
அடியாளையும் அடியாராக்கும் ஆற்றல் பெண்கள் !

ஆணாதிக்கச் சிந்தனை அறவே அகற்றிடுவோம்
அறிவுச்சுடர் பெரியார் சொல்படி மதித்திடுவோம் !

மனித குலத்தை உயர்த்த வந்த விடியல்கள்
மனிதர்களை மாண்பாக்கி உயர்த்துவோர் பெண்கள் !

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை தகர்ப்போம்
மாதரை மண்ணின் மாணிக்கங்களாக மதிப்போம் !

பெண்கள் இல்லாத உலகம் இருட்டாகும்
பெண்களே இந்த உலகின் ஒளியாகும் !

## வேண்டாம் பெண்சிசுக்கொலை !

காட்டுமிராண்டி காலத்தில் கூட சிசுக்கொலை இல்லை !
கணினியுகத்தில் சிசுக்கொலை நடப்பது மனிதநேயம் இல்லை !

கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும் உங்களால் !
கொன்ற உயிரைத் திரும்பத் தர முடியுமா ?

கருவிலேயே பெண் என்று தெரிந்திட்டால் உடன் !
கருவிலேயே கதைமுடிக்கும் மடமைக்கு முடிவு கட்டுக !

பிறந்த குழந்தை பெண் என்றால் இரக்கமின்றி !
பச்சிளம் குழந்தை வாயில் நெல்லிட்டு கொல்லுதல் முறையோ ?

கருத்தம்மா திரைப்படத்தில் இயக்குனர் இமயம் !
கருத்துச் சொன்னதை எளிதில் மறந்திடலாமோ ?

மருத்துவர்களாக மாவட்ட ஆட்சியர்களாக வேண்டியவர்களை !
மகள்களை குழந்தையிலேயே கொல்லுதல் சரியோ ?

பெண் பிறந்தால் பேதலிக்க வேண்டாம் என்றும் !
பெண் ஆற்றலின் அற்புதம் ! அறிவின் பெட்டகம் !

பெற்றோரை உயிருள்ளவரை நினைப்பவள் பெண் !
பெற்றோரிடம் பாசம் நேசம் காட்டுபவள் பெண் !

மணமானதும் பெற்றோரை மறப்பவன் ஆண் !
மரணம் வரையிலும் மறக்காதவள் பெண் !

உலக அளவில் சாதனைகள் புரிபவள் பெண் !
உலகப்புகழ்ப்பெற்ற அன்னை தெரசா அற்புதப்பெண் !

விண்ணிற்கு விரைந்த கல்பனா சாவ்லா பெண் !
வியத்தகு சாதனைகள் நிகழ்த்துபவள் பெண் !

ஆணை விட எதிலும் குறைந்தவள் அல்ல பெண் !
ஆணை விட ஆற்றலில் சிறந்தவள் பெண் !

சிந்தித்து செயல்படுவதில் சிகரமானவள் பெண் !
சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்புத் தருபவள் பெண் !

மகன் உலகிற்கு வரக் காரணமானவள் பெண் !
மகிழ்ச்சியை நீர் வீழ்ச்சியாக நல்குபவள் பெண் !

மகளாக மட்டும் பெண் வேண்டாமென்பது முறையோ ?
மகனாகவே அனைவரும் பெற்றால் மருமகள் கிடைக்குமா ?

பெற்று வளர்த்தவர்களுக்குத் தெரியும் மகளின் பாசம் !
பெற்று வளர்க்காதவர்களுக்குத் தெரியாது மகளின் பாசம் !

பெண் குழந்தையை எவரும் வெறுக்காதீர்கள் !
பெண் குழந்தையை அன்போடு ஏற்றுக் கொள்ளுங்கள் !

பெண் பிறந்தால் துன்பம் என்பது மூட நம்பிக்கை !
பெண் பிறந்தால் இன்பம் என்பது நமது நம்பிக்கை !

இழந்த உயிர்கள் போதும் இனி ஒரு உயிரையும் !
இழக்காமல் பெண் குழந்தைகளைப் பேணிக்காப்போம்.

கவிஞர் இரா .இரவி !




## புதிய விடியல்

பெண்ணே நீ யார்?
ஒரு பெற்றோரின் மகள்
பிறகு........

மணமாகும் முன்??
நீ இன்னொரு வீட்டில்
வாழப் பிறந்தவள்

மணமான பின் ??
சூழ்நிலை உணர்ந்து
வாழத் தெரியணும்

முகம் மாற்றம்
முகவரி மாற்றம்

கனவுகள் மறந்து
கண்ணீர் கரைந்தோட
உரிமையற்ற உறவுகளுடன்
உணர்வற்ற மனநிலையில்

எழுத்தில் வீரம்
பேச்சில் முழக்கம்

பெண்ணே நீ????

பிறந்த இடம் சொந்தமில்லை
வாழ்கின்ற இடம் நமதில்லை
பதட்டமும் பயமும்
துணையாக வாழ்ந்த காலம்
நகர்ந்து..........

இன்று.......

எழுத்தில் பேச்சில்
தோற்றத்தில் சுதந்திரமாக
சரிநிகர் சமமாக வீறுநடை
போடும் பெண்ணே நீ...



புதிதாய்
பிறக்கும்
பிரபஞ்சத்தின்
பஞ்சபூத சக்தி
வடிவமாய்
பிணைக்கப்பட்ட
சிறகுகளை
உடைத்து பறக்கும்
புதிய விடியல் நீயே!!

நா.பத்மாவதி
கொரட்டூர்



## இளஞ்சாவூர் முத்துமாரியம்மன்

நலம்சேர்த் திருமெய்ய
எல்லையிலே
குடிகொண்டாள்..
நானென்ற நினைவறுத்து
நருமணம் சூழ்ப் பூச்சொரிய
மணம்கொண்டாள்..
கலம்சேர் வயல்வெளியில்
செங்கா ஊரணியின் கரை
கண்டாள்.. கயல்போல்
துள்ளும் மீன்விழி யிரண்டும்
கொண்டாள்..
உளம்சேர திருப்பொங்கல்
நாளில் எங்கள் உயிர்குடத்தே
வாளாகி முனைநின்றாள்..
ஊர்மக்கள் உளம்சேர்ந்தே
இளஞ்சாவூர் மாரியம்மன்
என்ற பெயர் கொண்டு
எழுந்தருளினாளே.!

அக்காள் எழுவருண்டே
அவர்களுக்குள்
இவளொருவள்.. அன்னை
சமயபுரத்தாள் அருளாகும்
இவள்நுதலே.. நார்தான்மலை
யருளும் நற்காளி ரூபமிவள்..
திருவப்பூர் பூமாலை
நடுவுதித்து மாலையாக்கி
கொன்னையூர் தாயாகி
கொடும் வெயில்
தனைத் தாங்கி.. இங்கே
இளஞ்சாவூரில்.. வெட்கை
தணித்தே. வேட்கையினை
இவளறிந்தே.. அக்கரையாய்
அன்பர்களை தாயாய்
அரவணைத்தாள்.!
அன்னையுனை
சரணடைந்தேன்..
இளஞ்சைமுத்து மாரியம்மா..!
துணை.

வே.கல்யாண்குமார்.



எண்ண அலைகளில்
வண்ண நிறத்தினில்
காட்டும் பெண்மை....களிப்பு

காதல் மனத்தினில்
கண்ணன் நினைவினில்
செய்கை கனவில்........மிதப்பு

உழைக்கும் உழைப்பினில்
உத்தமி வாழ்க்கையில்
சுமக்கும் நிலைகளே.....
மதிப்பு

காதல் மனங்களில்
மயங்கும் விழிகளில்
நிற்கும் அழகில்....தவிப்பு

பச்சை நிறத்தினில்
இயற்கை வளத்தினில்
காண்பது மகளிர்...உணர்வு

ஆடிக் களிப்பினில்
ஆனந்தம் மிகையினில்
தன்னை மறத்தல் .....இருப்பு

இயற்கை பொழுதினில்
ஏங்கிய இதயத்தினை
அவனிடம் தருவதில்...துடிப்பு

ஓங்கிய முத்திரையில்
உடலும் அசைந்ததில்
உள்ளம் சொல்வது...உயிர்ப்பு

பூமியில் தேடுவதில்
கவனம் வைப்பதில்
கடந்தது வாழ்வில்..கசப்பு

ஆகட்டும் பார்க்கலாம்
ஆணவம் இல்லையென்று
இயம்புது பெண்மை......
செழிப்பு...

Bhanumati Nachiyar




## பெண் என்னும் பேரொளி

பெண்ணே...

நீ பிறந்தது
உயிர் தருவதற்காக
மட்டும் அல்ல...

நிமிர்ந்து நின்று
உறுதியாய் எழுவதற்காக...

அமைதியை ஆசானாக்கிய
காலங்கள் கடந்து
எங்கும் எதிலும்
உன் குரல் ஒலிக்க...

வீட்டைத் தாண்டி
வானத்தை நோக்கி நட,
உன் கனவுகள்
யாருக்கும் சொந்தமல்ல.

வறுமை மிரட்டினாலும்
வழி தவறாதே,
துணிவே துணையாக
ஓடிக் கொண்டே இரு.

பாசம் உன் இயல்பு,
பொறுமை உன் பலம்,
ஆனால்... அநியாயம்
கண்டால் பாறையை
உடைக்கும் புயல் நீ.

பெண்ணை அவமதிக்கும்
பாலியல் வன்முறைகளுக்கு
பயந்து மௌனமாகாதே,
எதிர்த்து நிமிர்ந்து நில்.

உன் குரல் எழுந்தால்
அநியாயம் நடுங்கும்,
உன் துணிவு தெரிந்தால்
தீமை பின்வாங்கும்.

பேச்சில் புரட்சி...
செயலில் எழுச்சி...
சமத்துவம் மலர்ந்து...

பெண் என்னும்
பேரொளியாக விடியலின்
கதிர்கள் பரப்பி புதிய
உலகம் பிறக்கும் நாளை...

நா.பத்மாவதி
கொரட்டூர்




## மகளிர் நாள்



கண்களெனப் பேசுகின்ற பெண்கள் தம்மைக்
கண்ணாகப் பேணுதற்கே மகளிர் நாளாம்
பெண்களினை மதிப்புடனே போற்றி நல்ல
பெருமையினைச் சேர்ப்பதற்கே மகளிர் நாளாம்
மண்தன்னைத் தாயாக வணங்கல் போல
மகளிரினை வணங்குதற்கே மகளிர் நாளாம்
உண்மையான சமத்துவத்தை உரிமை தன்னை
உவந்தளிக்க வந்ததுதான் மகளிர் நாளாம்!

உயர்கல்வி பெண்களெல்லாம் பெறுவ தற்கே
உறுதியினை ஏற்பதற்கே மகளிர் நாளாம்
முயற்சிசெய்து முன்னேறும் பெண்க ளுக்கு
முன்நின்று உதவுதற்கே மகளிர் நாளாம்
தயக்கமின்றித் துறையனைத்தும் ஆட்சி செய்ய
தடைகளினைத் தகர்ப்பதற்கே மகளிர் நாளாம்
மயக்கத்தை மலைப்புதனை அகற்றி எங்கும்
மகளிரினை உயர்த்துதற்கே மகளிர் நாளாம் !

நுகர்பொருளாய்ப் பெண்களினை நினைக்கும் கீழ்மை
நினைவுகளை நீக்குதற்கே மகளிர் நாளாம்
மகளாக தாயாக தமக்கையாக
மனத்தினிலே நினைப்பதற்கே மகளிர் நாளாம்
தகவாகப் பெண்களுக்குத் துணையாய் நின்று
தலைநிமிரச் செய்வதற்கே மகளிர் நாளாம்
மகத்தான சாதனைகள் புரிவதற்கே
மனமுவந்து வாழ்த்துதற்கே மகளிர் நாளாம் !

பாவலர் கருமலைத்தமிழாழன்

## எழுச்சி பெறு தோழா!

இளைஞனே!
ஆற்றலின் அடையாளமாய்
அவதரித்து விட்டு
வெற்றியின்
விலாசத்தைத்தேடிக்
கொண்டிருக்கிறாய்!

வேலைவாய்ப்பு
அலுவலகங்களில்
தன்னம்பிக்கையை
பதிவுசெய்து விட்டு
வசந்தகாலத்தின்
வரவுகளுக்காக
நிகழ்காலத்தை
இலையுதிர் காலமாய்
மாற்றி விட்டாய்!

வெற்றிமுத்தெடுக்க
சாதனைக்கடலில்
குதித்துவிட்டு
எதிர்நீச்சல் அடிக்க
முடியாமல் சோதனைப்
புயலைக்கண்டு
வேதனைப்பட்டுக்
கொண்டிருக்கிறாய்!

இலட்சியத்தின்
பாதைகளில்
வேகத்தைச்செலுத்தி
விவேகத்தை மறந்து
ஏமாற்றத்தின் ஏணிப்படிகளில்
ஏறிக்கொண்டிருக்கிறாய்!

எத்தனையோ
விக்கெட்டுகளை
வாழ்க்கையில்
இழந்து விட்டோம்
ஆனாலும் கிரிக்கெட்
ஸ்கோர்களையும்
ரன்களைப்பற்றியுமே
நமது கவலை!

இரசிகர் மன்றங்களின்
கட்அவுட்டுகளை
அலங்கரிப்பதை விட
இளைஞர்களே!
மக்கள்நற்பணி
மன்றங்களின் தூண்களாய்
நிமிர்ந்து நில்லுங்கள்!



அப்போது வானம்
உங்களுக்கு
குடைப்பிடிக்கும்
பூமி
உங்களுக்குப்பூத்தூவும்!

கவிஞர்
த.அனந்தராமன்
துறையூர்

1. வயதிற்கு பருவம் ஒரு
வாடகை வீடு உயிருக்கு
உடல் ஒரு வாடகை வீடு
பிறவிக்கு வாழ்க்கை ஒரு
வாடகை வீடு
எல்லா உயிர்களுக்கும்
உலகம் ஒரு வாடகை வீடு

2. கை எல்லாம் சேறு
உலகமெல்லாம் சோறு
மண்ணோடு பேசும்
ஒரே மனிதன் விவசாயி

3. மனைவியிடம் பொய்
சொல்வது உடல் நலத்திற்கு
தீங்கானது மற்றும்
உயிரைகொல்லும்
ஆபத்தான செயல்


4. கொடுக்கிறது பழைய
சோறு ஆனால் வைக்கிற
பெயர் மட்டும் டைகர்

5. வாழ்க்கை என்பது
ஜெய்ப்பதற்கோ



அல்லது
தோற்பதற்கோ
அல்ல
அது வாழ்வதற்கு
மட்டுமே

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



நிலவே நிலவே
நில்லாமல் ஓடி
நட்சத்திரங்களை அள்ளி வா
மயிலே மயிலே
மகிழ்ச்சியாய் ஆடி
மழையை கொண்டு வா
குயிலே குயிலே
கும்மாளமாய் கூவி
குளக்கரையில்
குளித்து வா
சேவலே சேவலே
சேட்டை ஏதும்
செய்யாமல்
விடிகாலை சூரியனை
எழுப்பி வா
காகமே காகமே
இரவினில் கரையாமல்
அமைதி காத்து வா
நாயே நாயே
நன்றியோடு நடை போட்டு
வீதியெங்கும் பாதுகாத்து வா
பூனையே பூனையே
பால் திருடி உண்ணாமல்
நேர்மையாக வாழ்ந்து வா
எறும்பே எறும்பே
மழைக்காலம் வரும் முன்
சிறப்பாக சேமித்து வா
மனிதா மனிதா
அன்பு தான் உன் வளம்
அறிவு தான் உன் பலம்
ஆகச் சிறந்தவனே



அகிலம் காக்க
மகிழ்ச்சி பூக்க
இயற்கையோடு
இயற்கையாய்
இன்பமாய் இணைந்து
வாழ பழகு!

லி.நௌஷாத் கான்

## எழுத்தாளன்...

தன்
முதுகை பார்க்காத
முகங்களே...முன்னுரையா...
முடிவுரையா... எதை எழுதப்
போகிறீர்கள்...

உங்கள் மகரந்தங்களை
மண்ணில்
தொலைத்துவிட்டு எந்தச்
சிகரத்தை நோக்கி
சிறகடிக்கிறீர்கள்...

உங்கள் எழுத்துகள் இந்த
தேசத்தலையெழுத்தை
திருத்தியெழுத புதியதாய்ப்



பிறப்பெடுக்கும்
ஆய்த
எழுத்தா...?
இல்லை
அகிம்சை
எழுத்தா...?

சிராய்ப்புகளுக்கு
சிகிச்சையளிப்பதாய்
முதுகெலும்பையே முறித்து
விடாதீர்கள்...!

மீனாட்சி பாண்டியன்
திருவண்ணாமலை

ஒவ்வொரு இரவும்
என்னை அழைக்கிறாய்..
எந்த நட்சத்திரத்தை
எந்தப் பக்கம் வைக்கலாம்



என்று.. இடம்
மாற்றிக்
கொண்டே
இருப்பதில்
உனக்கும்
அலுக்கவில்லை..
எனக்கும்
அலுக்கவில்லை.
வானமும் ரசிக்கிறது !

ரிஷபன்

கவியென்றால் ககனமே
கைகூப்பும் கருத்தாழ
மிக்கதுவா கவிதை..

திருஎன்று தெருவோரம்
போனவர்க்கும் மரியாதை
செய்வதுவா கவிதை.

கண்கட்டு
வித்தையைப்போல்
வாழ்க்கையிதை
பண்கொண்டு பேசுவதா
கவிதை.

உணர்ச்சிகளை ஒரு
வரியில் ஓசையாக்கி
உதிர்த்துவிட்டுப்
போவதுவா கவிதை...

உள்ளத்தில் ஜப் ஒரு
ஓவியமாய் ஒளிந்திருக்கும்



கள்ளமில்லா
உணர்வுகளே
கவிதை...!
நடைமுறை
உண்மைகளை
நாட்டவர்க்கு
நறுக்கு
என்று உணர்த்துவதே
கவிதை...!

எஸ். சந்திரசேகரன்
அமுதா செஞ்சி கோட்டை

## குரல்

என் மனசுக்குள் ஒரு
மனசு இருக்கிறது



அது என்
மனசுக்கு
சொல்கிறது,
மருகாதே
என்று.

கே. பி.
ஜனார்த்தனன்

## தமிழ்

தமிழ் நம் தாயின் இனிய
மொழி. தாளம் கொண்ட
மழைக்கு ஈடானது.
ஆயிரம் ஆண்டுகளுக்கு
மேல் நிலைத்து நிற்கும்
வாழ்ந்த பெருமை வாய்ந்தது.
அறிவின் செல்வம் தமிழ்
தரும் நன்மை. சங்கம் காலம்
சொல்லும் வரலாறு.
சொல்லில் மலரும் அழகான
சாரம் தமிழ். உலகம் முழுதும்
ஒலிக்கும் மொழி
உணர்வை நெஞ்சில்
விதைக்கும் விதை.
தமிழ் நம் உயிரின் துடிப்பு.



என்றும்
நிலைத்து
நிற்கும்
செம்மொழி
தமிழ்.

உ.மு.ந.ராசன்
கலாமணி
கோயம்புத்தூர்.





# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்ப்ர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**
























# ST COURIER

The People's Choice
ISO 9001:2008 Certifed

**DOMESTIC- INTERNATIONAL**

Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.


**Cell: 9176130601**



Get Free Jobs Alert on Your
**WhatsApp**
Register Yourself on our
**8122664699**
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs

















FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337/7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ-பேப்பர்.காம்


முனீஸ்வர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF
SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்

## கலைவாணர் N.S.கிருஷ்ணன் "மை"

ஒரு சமயம் கலைவாணர் N.S.கிருஷ்ணன், எழுத்தாளர்கள் மாநாடு ஒன்றில் பேசினார்.
“தற்போதைய எழுத்தாளர்கள் பேனாவை எப்படிப்பட்ட மையை தொட்டு எழுதுகிறார்கள் தெரியுமா?
சிலர் *தற்பெரு“மை“*யில் தொட்டு எழுதுகிறார்கள்.
சிலரோ *பொறா“மை“*யில் தொட்டு எழுதுகிறார்கள்.
வேறு சிலரோ *பழ“மை“*யில் தொட்டு எழுதுகிறார்கள்.
பரவாயில்லை.
இவற்றையெல்லாம் *அரு“மை“*யான



எழுத்துக்கள் என்று சொல்லாவிட்டாலும் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம்.
“ஆனால் எழுத்தாளர்கள் தொடவே கூடாத சில “மை“கள் உள்ளன.
இவை என்ன தெரியுமா?
கய“மை“,
பொய்“மை“,
மட“மை“,
வேற்று“மை“
ஆகியவைதாம்.
கூட்டத்தில் கைதட்டல் எழுந்தது.
“எழுத்தாளர்கள் தொட்டு எழுதவேண்டிய “மைகள்“ என்னென்ன தெரியுமா?
நன்“மை“ தரக்கூடிய
நேர்“மை“,
புது“மை“,
செம்“மை“,
உண்“மை“.
இவற்றின் மூலம் இவர்கள் நீக்க வேண்டியது எவைத் தெரியுமா?
வறு“மை“,
ஏழ்“மை“,
கல்லா“மை“,
அறியா“மை“
ஆகியவையே.
இந்த நோக்கத்தையே எழுத்தாளர்கள் தங்கள் கட“மை“ யாகவும், உரி“மை“ யாகவும் கொண்டு சமூகத்திற்குப் பெரு“மை“ சேர்க்க வேண்டும்“ என்று பேசி முடித்தார்.
கூட்டத்தில் உற்சாக ஒலி விண்ணைப் பிளந்தன.
படித்ததில் பிடித்ததைப் பகிர்ந்தேன்.
இந்த அரு மை யான நல்ல மை விசயத்தை உங்கள் நட்பு வட்டாரத்திற்கு பரப்பலாமே !!

## சிரிச்சுட்டு படுங்க நிம்மதியா தூக்கம் வரும்

மெதுவா படிச்சுட்டு சிரிச்சுட்டு படுங்க நிம்மதியா தூக்கம் வரும் !!

தத்துவம் படிங்க கெட்டியா புடிங்க...

1. உலகத்திலேயே சிறந்த ஜோடி செருப்புதான்... ஒன்றை பிரிந்தால் மற்றொன்று வாழவே வாழாது..!

2. எல்லா பெண்களையும் விசிலடித்து திரும்பி பார்க்க வைத்தாலும் செருப்படி வாங்காத ஒரே ஜீவன் குக்கர் தான்..!

3. மாமா பொண்ணும், உப்புமாவும் ஒன்னு! வேற எதுவுமே கிடைக்காத பட்சத்துல நம்மளோட தலையில கட்டப்படும்!

4. நிம்மதியாக இருக்கும் வயதில் மனைவியைத் தேடுவதும், மனைவி வந்தப்பின் நிம்மதியைத் தேடுவதுமே.. ஆண்களின் வாழ்க்கை தேடல்..!

5. இந்த உலகத்தில் என்னையும் ஒரு மனிதனாக மதித்து பொன்னாடை போர்த்தும் ஒரே நபர்.. சலூன் கடைக்காரர் மட்டுமே..!
"நீங்க வெட்டுங்க பாஸ்..".. !!
.

6. ஒரு புடவை வாங்க முன்னூறு புடவைகளைப் புரட்டிப் பார்த்த மனைவியிடம் எரிச்சலுடன் கணவன் சொன்னான்:

"ஆதிகாலத்தில் ஏவாள் வெறும் இலையை மட்டுமே உடுத்தி இருந்தாள். இது போன்ற தொல்லைகள் நல்ல வேளை ஆதாமுக்கு இல்லை."

இதற்கு மனைவி சொன்ன பதில்:

"அதுக்கு அவன் எத்தனை மரம் ஏறி இறங்கினானோ?"

7. தொலைபேசியில் ஒரு பதற்றமான குரல்..
"டேய் மச்சான்... எங்கடா இருக்க?"

"வீட்லதான்டா இருக்கேன்..."

"அப்பாடா... இப்பதான்டா நிம்மதியா இருக்கு...!!"

"ஏன்டா? என்ன விஷயம்??"

"அதில்லடா.....

காலையில பேப்பரை பார்த்தேன். அதுல, உங்க தெருவுல வெட்டியா சுத்திகிட்டிருந்த நாய்களை எல்லாம் கார்பரேசன்காரங்க புடிச்சுட்டு போனதா செய்தி போட்டிருந்துச்சு. அதான்... எங்க நீ மாட்டிகிட்டியோன்னு பயந்தே போயிட்டேன்....."

8. அம்மா: என்னடி உன் புருஷன் தினமும் இப்படி குடிச்சுட்டு வராரே நல்லாவா இருக்கு.?

மகள் : தெரியலை அம்மா நான் இன்னும் டேஸ்ட் பண்ணி பார்க்கலை!



9. நீ என் தங்கக் குட்டியாம்... தாத்தா சொல்றதைக் கேப்பியாம்...
நான் உன் புத்தகப் பையைத் தூக்கிட்டு வருவேனாம்.... பாப்பா நடந்து வருவியாம்.

வேண்டாம் தாத்தா... என் பையைத் தூக்கி நீ கஷ்டப்பட வேணாம். நானே என் பையைத் தூக்கிக்கிறேன். நீ என்னைத் தூக்கிக்கிட்டு வந்தாப் போதும்...

10. “ஏன் ஸ்கூட்டரை திருடினே...?”

“டிராபிக் போலீஸ்காரர்தாங்க சீக்கிரம் வண்டிய எடு, வண்டிய எடுன்னு அவசரப்படுத்தினாரு எசமான்..!”

11. பகல்ல உங்களுக்குக் கண் தெரியாதா டாக்டர்....?”

“தெரியுமே...ஏன் கேட்கறீங்க..... ?”

“இல்ல...பார்வை நேரம் மாலை ஆறிலிருந்து எட்டுவரைன்னு போர்டு வெச்சிருக்கீங்களே... அதான் கேட்டேன்.!”

12. முதலாளி: டேய் முனியா, நான் கொஞ்சம் வீட்டுக்குப்போய் ஓய்வு எடுத்துக்கிட்டு வர்றேன்... நீ கடையைப் பார்த்துக்க...

முனியன்: உங்களுக்கு எதுக்கு சிரமம் முதலாளி? நானே போய் ஓய்வை எடுத்துக்கிட்டு வந்துடறேனே!

13. டீச்சர் கேட்டார்...

பார்வதி ஏன் சிவபெருமானை மணந்தார் ?

குறும்புக்கார மாணவனின் பதில்...

எப்பவும் தலையில் சந்திரன் இருப்பதால் வெளிச்சமாக இருக்கும்... EB பில் வராது..!!

ஜடாமுடியிலிருந்து கங்கை நதி கொட்டுவதால் மோட்டார் போட்டு டேங்க்கில் தண்ணீர் ஏற்ற வேண்டாம்..!

சிவன் பச்சை காய்கறி சாப்பிடுவதால் சமைத்து கொட்ட வேண்டாம்..!

சிவனுக்கு அம்மா அப்பா இல்லாததால் மாமியார் தொல்லை இல்லை...

மாணவனின் பதிலை கேட்டு மயங்கி விழுந்த டீச்சர் எழுந்திருக்கவேயில்லை.

14. ஜட்ஜ் : நீங்க ரொம்ப வேகமா வண்டி ஓட்டியதா போலீஸ் சொல்லுறாங்க? நீங்க இல்லேன்னு சொல்லுறேங்க! இதுக்கு ஆதாரம் ஏதாவது உண்டா?


ஐயா நான் என் பொண்டாட்டிய கூட்டிட்டு வர மாமனாரு வீட்டுக்கு போய்கிட்டு இருந்தேன்யா!

நீங்களே சொல்லுங்கய்யா எவனாவது பொண்டாட்டிய வீட்டுக்கு கூட்டிட்டு வர வேகமா போவானா... ?

ஜட்ஜ் : கேஸ் டிஸ்மிஸ்ட்...!

முதல்ல அவரை விடுதலை செய்ங்க...!

படித்ததில் ரசித்தது...









## விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |



## ஜோக்ஸ்

குருவே! நாணயத்தை சுண்டி விடறேன். பூ விழுந்தா நீங்க நினைச்சது நடக்கும்.
ஓ! தல விழுந்தா?
அப்டி நடக்க வாய்ப்பே இல்ல தலை ரசிகன்கிட்டேயே தலை விழுவார்ங்கறியா?
===================
டாக்டர், கர்ப்பிணிப்பெண் காலைல எந்திரிச்சதும் யார் முகத்துல விழிக்கறாங்களோ அவன் சாயல்ல பேபி பிறக்குமா?
அப்டி பார்த்தா பால்காரன் சாயல்ல தான் எல்லா குழந்தையும் இருக்கும்
=============




மிஸ்! உங்க கல்யாண ஆல்பத்துல 1000 க்கும் மேல செல்ஃபி ஃபோட்டோஸ் இருக்கே?
அவ்ங்க எல்லாம் என் முன்னாள் பாய் ஃபிரண்ட்ஸ்,
=================
அத்தான்! 9000 ரூபா குடுங்க. ஹேர் ஸ்ட்ரெய்ட்டனிங் பண்ணனும்.
போன மாசம் தானே கர்லிங் ஹேர் க்கு 15,000 வாங்குனே?பேசாம 2 சவுரி வாங்கிக்க
===================
டாக்டர் !டென்சன் ஆகாம இருக்கனும்னா என்ன பண்ணணும்?
9 வது சன் பிறந்ததும் கு க பண்ணிடனும்

=============
பார்டர்ல ஏதாவது பிரச்சனைன்னா உதவி செய்வீங்களா?
அந்த 100 சேலையை பிரிக்கக்கூட மாட்டோம். பார்டர் எப்டி இருந்தா என்ன?
===================
சாமியார்க்கு ஆங்கிலத்தில் என்ன?
GOD WHO
==============
மாப்ளை! அத்தையும் ,2 பொண்ணுங்களும் பஸ் ஸ்டாப் ல நிக்கறாங்க்ளாம். நீங்க பிக்கப் பண்ணி கூட்டிட்டு வர்றீங்களா?
ம்.கூட்டிட்டு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்
=============
டியர், எங்க வீட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு , வெளீல எல்லாம் அனுப்ப மாட்டாங்க
அப்டியா? எங்க வீட்ல விடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வந்துடவா?
================
சமையல் குறிப்பாளினி சமந்தா = பலாப்பழத்தை காயா இருக்கும்போதே எடுத்து......
ஏம்மா சுத்தி வளைக்கறீங்க?
பலாக்காய்னு சொன்னா புரியாதா?
===============
எதுக்கு சார் அடிக்கடி “ 1000 RT " னு ட்வீட்டறீங்க?
1000 RT ட்வீட் நிறைய போட்டிருக்கேன், இதெல்லாம் நமக்கு சர்வசாதாரணம்னு சொல்ல
===============
முதல்வர் ,மக்கள் முதல்வர் என்ன வித்யாசம்?
முதல்வர் னா டம்மியா இருக்கனும். மக்கள் முதல்வர்னா ஜெயிலுக்குப்போய்ட்டு வந்த மம்மியா இருக்கனும்
===================
குருவே!
ஐம்புலன்களையும் அடக்க என்ன வழி?
சொல்றேன்.
குருதட்சணையா ஸ்ரீ திவ்யா ,தீப்தி பிட்டை வாட்சப்பில் அனுப்பு!
===================
இதோ அதோ னு பாக்கப் போக படம் வர்றத்துக்குள்ள பலபேர் செத்திடுவாங்க போல?
படம் வந்ததும் நீங்க!



# பன்முகம்



## சத்துக்கள் நிறைந்த தேங்காய் பால் சாதம்

தேங்காய்ப்பால் என்பது இயற்கையிலேயே எண்ணற்ற சத்துக்களை உள்ளடக்கியது.

பசும்பால் ஒவ்வாமை உள்ள குழந்தைகளுக்கு தேங்காய்ப்பால் என்பது சிறந்த மாற்றாக இருக்கும்.

நம் பாரம்பரிய உணவுகளில் புளியோதரை, லெமன்சாதம், தயிர்சாதம் போலவே தேங்காய் சாதமும் முக்கிய இடம் பிடிக்கிறது. உணவுக்கு சுவை மட்டுமின்றி, உடலுக்கு ஆரோக்கியம் சேர்க்கும் வகையில் தேங்காய் சாதம் செய்து அசத்த முடியும். இதனால் சத்துக்கள் முழுவதுமாக நமக்கு கிடைக்கும்.

குழம்பு மற்றும் பொரியல் வைக்கும் பொழுது காய்கறிகளில் உள்ள சத்துக்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு கிடைக்கும். ஆனால் நாம் தயிர் சாதம், லெமன் சாதம் போன்ற சாத வகைகள் செய்து கொடுக்கும் பொழுது அதில் சுவை மட்டுமே அதிகமாக இருக்குமே தவிர குழந்தைகளுக்கு தேவையான சத்துக்கள் குறைவாகவே கிடைக்கும்.

ஆனால் குழந்தைகள் அதைக் கேட்டு அடம்பிடிக்கும் பொழுது, அதனை எப்படி ஆரோக்கியமாக குழந்தைகளுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்பதை தான் நாம் பார்க்க வேண்டும். அப்படி ஒரு ஹெல்தியான ரெசிபி தான் இந்த தேங்காய் பால் சாதம்.

தேங்காய்ப்பால் என்பது இயற்கையிலேயே எண்ணற்ற சத்துக்களை உள்ளடக்கியது. அதனுடன் ஆரோக்கியமான காய்கறிகள் மற்றும் மசாலா பொருட்களை சேர்ந்து கொடுக்கும்பொழுது ஆரோக்கியமான மதிய உணவு அல்லது காலை உணவாக இந்த தேங்காய் பால் சாதம் இருக்கும்.

தேங்காய் பால் சாதத்தில் வைட்டமின்கள் மற்றும் மினரல்ஸ் நிறைந்துள்ளன. குறிப்பாக சொல்லப் போனால் வைட்டமின் சி, போலேட், இரும்பு சத்து, பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் மாங்கனிஸ் ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன.

தேங்காய் பாலில் எம்.சி.டி. எனப்படும் நல்ல கொழுப்புகள் நிறைந்துள்ளன. இந்த கொழுப்பானது உடனடியாக கரைந்து உடலுக்கு தேவையான எனர்ஜியை கொடுக்க வல்லது. குறிப்பாக மூளை வளர்ச்சிக்கு இந்த கொழுப்பு மிகவும் அவசியமாகும்.

பசும்பால் ஒவ்வாமை உள்ள குழந்தைகளுக்கு தேங்காய்ப்பால் என்பது சிறந்த மாற்றாக இருக்கும். பசும்பாலில் உள்ள சத்துக்களை போலவே இதிலும் சத்துக்கள் அதிகம் என்பதால் பசும்பாலுக்கு பதிலாக இதனை குழந்தைகள் எடுத்துக் கொள்ளலாம்.

இதில் இயற்கையிலேயே நிறைந்திருக்கும் லாரிக் அமிலம் எனப்படும் அமிலம் நோய் எதிர்ப்பு பண்புகளை கொண்டதாகும். எனவே உடலில் ஏற்படும் காயங்களை இயற்கையாகவே ஆற்றும் தன்மை தேங்காய் பாலுக்கு உண்டு.

மேலும் இதில் கால்சியம் மற்றும் வைட்டமின் டி அதிகமாக உள்ளதால், எலும்புகளின் வளர்ச்சிக்கு தேவையான சத்துக்களை கொடுக்கின்றது.

இயற்கையிலேயே காணப்படும் ஆன்ட்டி ஆக்ஸிடென்ட்களான வைட்டமின் சி, வைட்டமின் ஈ மற்றும் செலினியம் நிறைந்துள்ளன. இவை உடலில் செல்கள் சிதை உடையாமல் பாதுகாக்கின்றன.

தேங்காய் பாலில் நீர் சத்துக்கள் அதிகம் என்பதால் உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக் கொள்கின்றது.



## AI-ஆல் இந்த வேலைகளுக்கு ஆபத்து இல்லை - ஆய்வு செய்து பட்டியலிட்ட Anthropic

கம்ப்யூட்டர் புரோகிராமிங் 75% பணிகள் ஏஐ உதவியுடன் செய்யப்படுகின்றன.

செயற்கை நுண்ணறிவு எழுச்சியால் உலகம் முழுவதிலும் தொழில்நுட்ப நிறுவனங்களில் லே ஆப் எனப்படும் பணிநீக்கங்கள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன.

மனித வேலைகளை மனிதர்களை விட ஏஐ வேகமாக செய்வதாலும் மனிதர்கள் ஏஐ க்கு தகவமைத்துகொள்ளாதபட்சத்திலும் வரும் காலங்களில் வேலையிழப்புகள் அதிகம் இன்னும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.


இந்நிலையில் முன்னணி ஏஐ நிறுவனங்களில் ஒன்றான அந்திரோபிக் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

அந்நிறுவனத்தின் Claude ஏஐ உட்பட ஏஐ கருவிகளை உண்மையில் எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இதன் மூலம் ஏஐ எந்த வேலைகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது என்ற தரவுகளை சேகரித்ததன் மூலம் எந்த வேலைகளுக்கு ஏஐ ஆல் ஆபத்து இருக்காது என தெரியவந்துள்ளது.

இதில் சுமார் 22 வேலைகள் ஏஐ ஆல் பாதிக்கப்படாது என்று ஆந்திரோபிக் பட்டியலிட்டுள்ளது.

அதன்படி விவசாயம், மீன்பிடித்தல், வனத்துறை, கட்டுமானப் பணிகள், அகழ்வாராய்ச்சி, இயந்திரங்களை நிறுவுதல், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல், உணவு தயாரித்தல், பரிமாறுதல், கட்டிட பராமரிப்பு, துப்புரவு




வேலைகள், போக்குவரத்து, லாஜிஸ்டிக்ஸ் ஆகியவற்றில் ஏஐ தலையீடு இருக்காது.

மேலும், முடிதிருத்துதல், முதியோர் பராமரிப்பு போன்ற தனிநபர் பராமரிப்பு மற்றும் சேவை, தொழிற்சாலை இயந்திரங்களை இயக்குவது உள்ளிட்ட உற்பத்தித் துறை வேலைகள், செவிலியர் உள்ளிட்ட சுகாதாரத் துறை பணிகள், வணிக மற்றும் நிதிச் செயல்பாடுகள் ஆகியவற்றை ஏஐ-ஆல் செய்ய முடியாது.

அதேபோல், ஆய்வுப் பணிகள், தீயணைப்பு, காவல், ராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு சேவைகள், சமூக சேவை, விற்பனை மற்றும் அது சார்ந்த பணிகள், கற்பித்தல், கலை, பொழுதுபோக்கு, ஊடகங்கள் ஆகியவற்றில் நேரடி மனித திறன் சார்ந்த பணிகள் பாதிக்கப்படாது.


இந்த வேலைகள் பெரும்பாலும் உடல் உழைப்பு, மனிதர்களுடனான நேரடித் தொடர்பு மற்றும் இயந்திரங்களால் செய்ய முடியாத நுணுக்கமான வேலைகளை அடிப்படையாகக் கொண்டவை.

சிக்கலான நேரங்களில் மனிதர்கள் எடுக்கும் முடிவுகளை இயந்திரங்களால் எடுக்க முடிவதில்லை, எனவே நிபுணத்துவம் வாய்ந்த சிறப்புத் தேர்ச்சி தேவைப்படும் வேலைகளுக்கு ஏஐ ஒத்துவராது.

**ஆபத்தில் உள்ள துறைகள்:**

கம்ப்யூட்டர் புரோகிராமிங் 75% பணிகள் ஏஐ உதவியுடன் செய்யப்படுகின்றன. கேள்விகளுக்குப் பதிலளிக்கும் கஸ்டமர் சர்வீஸ் சேவைகள், தானியங்கி மென்பொருட்கள், சாட்பாட்ஸ் மூலம் செய்யப்படுகின்றன.

டேட்டா என்ட்ரி எனப்படும் தரவு உள்ளீடு வேலைகள் ஏஐ ஆல் 67% மேற்கொள்ளப்படுகின்றன. கணினி துறையில் 94% வேலைகளை ஏஐ ஆல் செய்ய முடியும்.



சுருக்கமாகச் சொன்னால், கம்ப்யூட்டர் திரைக்கு வெளியே நடக்கும் வேலைகள் இப்போதைக்கு ஏஐ ஆல் பறிக்கப்பட வாய்ப்பில்லை என்கிறது ஆந்த்ரோபிக்.

## மணத்தக்காளி கீரையின் மகத்துவங்கள்

கீரையில் ஆன்டி-ஆக்சிடன்ட்கள், கால்சியம், பாஸ்பரஸ் போன்ற தாதுக்கள் அதிகம் கிடைக்கின்றன.

ஆரோக்கியமான வாழ்வை தரக்கூடிய இந்த நாட்டுக்கீரையை வாரம் இருமுறை உணவில் சேர்த்து கொள்வது நலம் பயக்கும்.

தெருக்களில் எளிதாக கிடைக்கும் மணத்தக்காளி கீரை ஒரு மிகச்சிறந்த இயற்கை மருந்தாகும். சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் 'காட்டுக்கீரை' என்று அழைக்கப்படும் இது, செரிமான மண்டலத்தைச் சீரமைப்பதில் முதன்மை வகிக்கிறது. இந்த கீரையில் ஆன்டி-ஆக்சிடன்ட்கள், வைட்டமின்கள் ஏ,சி, இ மற்றும் இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் போன்ற தாதுக்கள் அதிகம் கிடைக்கின்றன.

இது நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுவதோடு, கல்லீரல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது. சத்துக்கள் நிறைந்த இந்த கீரையைச் சிறுபருப்பு அல்லது பயத்தம்பருப்புடன் சேர்த்து மசியலாக சமைத்து உண்பது உடலுக்கு குளிர்ச்சியையும் வலுவையும் தரும். தாதுக்கள் பற்றாக்குறையை நீக்கி ஆரோக்கியமான வாழ்வை தரக்கூடிய இந்த நாட்டுக்கீரையை வாரம் இருமுறை உணவில் சேர்த்து கொள்வது நலம் பயக்கும்.

மணத்தக்காளி கீரையின் தனித்துவம், அது பெண்களின் கருப்பையை வலுப்படுத்துகிறது என்று சித்த மருத்துவம் கூறுகிறது. 100 கிராம் மணத்தக்காளி கீரையில், நீர்ச்சத்து 82 சதவீதம், புரதம் 5.9 கிராம், கொழுப்பு, ரிபோப்ளாவின் 59 மி.கி. நியாசின் 0.9 மி.கி. நிறைந்துள்ளன. நாட்டுக்கீரைகள் மிகப்பெரிய அளவில் மனிதனுக்கு ஏற்படும் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் பற்றாக்குறையை போக்கி நோய்களையும் வரவிடாமல் தடுக்கின்றன.



## இந்தியா வந்தது 1.4 கோடி ரூபாய் பென்ஸ் V-Class



மெர்சிடிஸ் பென்ஸ் இந்தியா நிறுவனம் முற்றிலும் புதிய V-Class மாடலை இந்திய சந்தையில் அறிமுகம் செய்தது. இதன் மூலம் ஆடம்பர எம்.பி.வி. மாடல் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு பிறகு இந்திய சந்தையில் மீண்டும் ரீ-என்ட்ரி கொடுத்துள்ளது. முற்றிலும் புதிய V-Class மாடலின் ஆரம்ப விலை ரூ. 1.4 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த மாடல் டொயோட்டா வெல்ஃபயர் மற்றும் லெக்சஸ் LM மாடல்களுக்கு போட்டியாக அமைகிறது.

புதிய V-Class மாடல் நான்கு மற்றும் ஆறு இருக்கைகள் என இருவித இருக்கை தேர்வுகளுடன் கிடைக்கிறது. இந்த மாடல் பின்புற இருக்கைகள் அதிக சவுகரியத்தை வழங்குவதை நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில், இந்த காரில் உள்ள லவுஞ்ச் இருக்கைகளில் ரிக்லைன், மசாஜ், வென்டிலேஷன் மற்றும் ஹீட்டிங் வசதிகளுடன் வருகிறது.

ஆறு இருக்கைகள் கொண்ட மாடலில் மூன்றாம் வரிசை இருக்கைகளிலும் வென்டிலேஷன் வசதி வழங்கப்படுகிறது. இவைதவிர இந்த காரில் 3-ஜோன் கிளைமேட் கண்ட்ரோல், பர்மெஸ்டர் சவுண்ட் சிஸ்டம், 64-நிறங்கள் கொண்ட ஆம்பியன்ட் லைட்டிங், 2 இன்டீரியர் தீம்கள் மற்றும் இரட்டை 12.3 இன்ச் ஸ்கிரீன்கள் வழங்கப்படுகின்றன.

பாதுகாப்பிற்கு முற்றிலும் புதிய V-Class மாடலில் ஏழு ஏர்பேக், 360-டிகிரி கேமரா, லெவல் 2 ADAS சூட் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த எம்.பி.வி. மாடல் அளவில் 5.3 மீட்டர்கள் நீளமும், 3.4 மீட்டரில் வீல்பேஸ் கொண்டிருக்கிறது. இத்துடன் 18-இன்ச் டூயல்-டோன் அலாய் வீல்கள், எல்.இ.டி. ஹெட்லேம்ப்கள், இன்டகிரேட் செய்யப்பட்ட டி.ஆர்.எல்.-கள், பவர்டு ஸ்லைடிங் கதவுகள் மற்றும் ஸ்ப்லிட் டெயில் கேட் வழங்கப்பட்டுள்ளது.

மெர்சிடிஸ் பென்ஸ் V-Class மாடல் ராக் க்ரிஸ்டல் வைட், அப்சிடியன் பிளாக், சோடலைட் புளூ, ஆல்பைன் கிரே மற்றும் ஹை-டெக் சில்வர் நிறங்களில் கிடைக்கிறது. புதிய V-Class மாடல் பெட்ரோல் மற்றும் டீசல் பவர் டிரெய்ன் ஆப்ஷன்களில் கிடைக்கிறது. இதில் உள்ள V300 பெட்ரோல் யூனிட் 248 ஹெச்.பி. பவர், V300d டீசல் யூனிட் 233 ஹெச்.பி. பவர் வெளிப்படுத்துகிறது. இரு என்ஜின்களுடன் 9-ஸ்பீடு ஆட்டோமேடிக் டிரான்ஸ்மிஷன் உடன் வழங்கப்படுகிறது.






## ஹம்ச வாகனம்



புஷ்கர் ஸ்ரீராம வைகுணநாத் சன்னதி பிரமோற்சவம் நாள் 2 ஹம்ச வாகனம் புரபாடு.



தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள காங்கிரஸ் கட்சி தயார் நிலையில் இருப்பதாக அக்கட்சியின் மேலிட பொறுப்பாளர் முகுல் வாஸ்னிக் தெரிவித்துள்ளார்.



**திருவண்ணாமலை, மார்ச் 09:**

அருள்மிகு அண்ணா மலையார் ஆலயத்தில் அமைந்திருக்கும் பராசக்தி அம்மன் வண்ண மலர் மாலை களால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களால் அலங்கரித்து சிறப்பு அலங்காரத்தில் பராசக்தி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்



ராமேஸ்வரம் அடுத்த மண்டபம் முகாமில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகமானது விமரிசையாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு புனித நீர் தெளித்து சுவாமி தரிசனம் செய்து சென்றனர்.

# ஹூண்டாய் மோட்டார் இந்தியா அறக்கட்டளை சார்பில் தண்டலம் கிராமத்து குளம் ரூ. 1.75 கோடியில் சீரமைப்பு !

**காஞ்சிபுரம், மார்ச் 09:**

காஞ்சிபுரம் அடுத்த தண்டலம் கிராமத்து குளத்தை ஹூண்டாய் மோட்டார் அறக்கட்டளை சார்பில் ரூ. ஒரு கோடியே 73 லட்சம் மதிப்பீட்டில் சீரமைத்து, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்க வளாகத்தில் ஹூண்டாய் மோட்டார் அறக்கட்டளை சார்பில் பல்வேறு கிராமங்களை தத்தெடுத்து அடிப்படை வசதிகளை செய்து வழங்கி வருகிறது. கடந்த கொரோனா காலத்திலும் ரூ. கோடிக் கணக்கான மதிப்பீட்டில் உணவுப் பொருட்களை கிராமமாக வழங்கியது. அப்பொழுது நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைந்தனர்.



தற்பொழுது ஸ்ரீபெரும்புதூர் அடுத்த குன்றத்தூர் எல்லையில் உள்ள தண்டலம் கிராமத்துக்கு பெரிய குளத்தை சீரமைத்து அழகு படுத்தி உள்ளது. இந்த குளத்து கரையில், நடைபாதை பயிற்சி களமும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1000க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளன.

இது தவிர குளத்தை சுற்றுச்சுவருடன் எல்.இ.டி., மின் விளக்குகளும் அமைக்கப்பட்டு இரவு நேரங்களில் திருவிழாவில் ஜொலிக்கின்றன.

அழகு மிகுந்த இந்த குளத்தை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மூத்த மாவட்ட அதிகாரிகள், பஞ்சாயத்து தலைவர்கள், கிராமமக்கள் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

இதையடுத்து தண்டலம் ஊராட்சி நிர்வாகத்திடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது. முன்னதாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன் சிறப்புரை யாற்றினார்.

# வந்தவாசி கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோவில் மஹா கும்பாபிஷேகம்..!

**வந்தவாசி, மார்ச் 09:**

வந்தவாசியில் பழமை வாய்ந்த கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அருள்மிகு சீதா சமேத ஸ்ரீகோதண்டராமர் மற்றும் கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.கடந்த மூன்று கால பூஜைகளாக சங்கல்பம், ஆசார்யவரணம், அங்குரார் பணம், மஹ சாந்தி ஹோமம், சாற்றுமுறை உள்ளிட்டவைகள் நடைபெற்றது. மேலும் நடைபெற்ற யாகசாலை பூஜையில் புனித நீர் வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பிறகு வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.




இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனை வருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப் பட்டது. முன்னதாக மூல மூர்த்தி களுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு மாலை சீதா ராமர் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## "கிரஸ்ட் பவுண்டேசன்" வழங்கிய "சிங்கப் பெண் விருது 2026"



மதுரை யாதவா கல்லூரியில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் "கிரஸ்ட் பவுண்டேசன் 2026" விருது திருவிடைமருதூரைச் சேர்ந்த திருமதி. மணிவாசகப் பிரியா அவர்களுக்கு 35 ஆண்டுகால இலக்கியப் பணியைப் பாராட்டி "சிங்கப் பெண்" விருது வழங்கப்பட்டது. செய்தி. குடந்தை பரிபூரணன்.



நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் வட்டத்தில் மாற்றுச் சமூக பெண்களை திருமணம் செய்துகொண்ட ஒரே காரணத்திற்காக சில குடும்பங்களை கோயில் திருவிழாவில் கலந்துகொள்ள விடாமல் ஒதுக்கிவைத்ததாக கூறப்படும் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## புறநகர் ரயில் சேவைகளில் தற்காலிக மாற்றங்கள்



ரயில்வே பாதை பராமரிப்பு மற்றும் பொறியியல் பணிகள் காரணமாக சென்னையைச் சுற்றியுள்ள சில புறநகர் ரயில் சேவைகளில் தற்காலிக மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்ட தகவலின்படி, குறிப்பிட்ட நாட்களில் சில மின்சார மற்றும் மெமு ரயில்கள் முழுமையாக அல்லது பகுதி ரத்து செய்யப்படுகின்றன.

## அரசு ஈ-ரிக்ஷா சேவை



அழகிய கடற்கரை, பழமையான கோவில்கள் மற்றும் கலாச்சார சிறப்புகள் காரணமாக சுற்றுலா பயணிகளை பெரிதும் ஈர்க்கும் புதுச்சேரியில், சுற்றுலா பயணிகளுக்கான பாதுகாப்பான மற்றும் வசதியான புதிய போக்குவரத்து சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.புதுச்சேரி அரசு, பெண்கள் ஓட்டுநர்களால் மட்டுமே இயக்கப்படும் அரசு ஈ-ரிக்ஷா சேவையை தொடங்கியுள்ளது. இந்த சேவையின் மூலம் சுற்றுலா பயணிகள் நகரின் முக்கிய சுற்றுலா தளங்களுக்கு பாதுகாப்பாகவும் எளிதாகவும் பயணம் செய்ய முடியும்.

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை



தமிழ்நாடு, புதுச்சேரியில் நேற்று வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அதிக வெப்பநிலையால் வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தங்கம் தள்ளுபடி விலையில் விற்பனை




துபாய் தங்கச் சந்தையில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழல் காரணமாக, அங்கு தங்கம் தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மார்ச் 12-ம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



மதுரை மாநகராட்சியில் நடைபெற்றுள்ள ஊழல் முறைகேடுகள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளைக் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) சார்பில் வரும் மார்ச் 12-ம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

## புதிய இணையவழி சேவைகள் அறிமுகம்




தமிழகத்தில் நிலம் சொத்து தொடர்பான தகவல்களை பொதுமக்கள் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் புதிய இணையவழி சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் செயல்படும் நிலவரித் திட்டத் துறை இந்த டிஜிட்டல் வசதிகளை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் நில உரிமையாளர்கள் தங்கள் நிலம் தொடர்பான ஆவணங்களை ஒரே தளத்தில் தெளிவாகவும் விரைவாகவும் பெறும் வாய்ப்பு கிடைக்கும்.




2021ஆம் ஆண்டு சிறுகனூர் மாநாட்டில் ஏழு விதமான சூளுரைகளை வெளியிட்ட நிலையில், தேர்தலில் வென்று மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக ஆட்சியில் அமர்ந்தார். அதேபோன்று, தற்போதும் புதிய அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




### எருக்கஞ்சேரியில் புரட்சித்தலைவி அம்மாவின் 78-வது பிறந்தநாள் விழா:
# 500 பேருக்கு அசைவ அன்னதானம் வழங்கினார் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ்!

**சென்னை, மார்ச்.09:**

மறைந்த தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78-வது பிறந்தநாளை முன்னிட்டு, பெரம்பூர் மேற்கு பகுதிக்கு உட்பட்ட எருக்கஞ்சேரி மனவழகர் தெரு பகுதியில் அதிமுக சார்பில் 35-வது மேற்கு வட்ட கழக செயலாளர் பா.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. பெரம்பூர் மேற்கு பகுதி கழக செயலாளர் எம்.என்.பாஸ்கரன் மற்றும் இளைஞரணி மாவட்ட செயலாளர் டேனியல் சச்சின் மணி ஆகியோர் முன்னிலையும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பாக செயலாளர் டி.எஸ்.இளங்கோவன் செய்திருந்தார்.

இதில் சிறப்பு அழைப் பாளராக வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் கலந்து கொண்டு, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த புரட்சித் தலைவி அம்மாவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, கழகத்தின் சார்பில் அப்பகுதியைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அசைவ உணவுகளை அன்னதானமாக அவர் வழங்கினார்.



இந்நிகழ்வில் பகுதி செயலாளர் இ.லட்சுமிநாராயணன், கழக எம்ஜிஆர் மன்ற மாநில இணை செயலாளர் நேதாஜி கணேசன், சிறுபான்மை பிரிவு மாநில துணைச் செயலாளர் எம்.ஏ.சேவியர், மாவட்ட பொருளாளர் ஏ.கணேசன், வட்ட கழக செயலாளர்கள் இ. ஜோசப்வின்சென்ட், ஏ.ஆனந்த், ஜம்புலிபாலாஜி, சி.விவேக், மற்றும் எஸ். கருணா, கே.எஸ்.ஆனந்த் ஆக்கம்.அகஸ்டின், கோபி, டி.கே. மூர்த்தி, ஜி.அரசு,எம்.பி.பாபு, ஜெயக்குமார், இனியன், அஜய்சிங், யு.கரண்குமார், விக்கி, சியான் எஸ்.ஸ்ரீதரன், எம்.சுகுமாரன், ஆட்டோ சதீஷ், ஏ.கிருஷ்ணமூர்த்தி, பிடிசி.ராஜா, சுதாகர், ராஜா, விஜயகுமார், ஏ.சுப்பிரமணிசிவா, சுரேஷ், இ.காயத்ரி, எஸ்.ஸ்ரீதேவி, ஆர்.சித்ரா, ஆர்.துரைராஜ், மற்றும் மகளிர் அணியினர் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

## விஜய்க்கு அழைப்பு



திமுகவை எதிர்க்கும் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்; குறிப்பாக தவெக தலைவர் விஜய் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய வேண்டும் என்று பாஜக மாநில செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத், அழைப்பு விடுத்துள்ளார்.

## நிபுணர்கள் குழு



ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டு ஒரு வாரத்திற்கு மேலாகியுள்ள நிலையில், அவருக்கான வாரிசைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைக் கொண்ட 'நிபுணர்கள் குழு' (Assembly of Experts) தற்போது ஒருமித்த கருத்தை எட்டியுள்ளது.

# சுற்றுலா: ஊட்டியில் பார்க்க வேண்டிய சிறந்த நீர்வீழ்ச்சிகள்



ஊட்டி தமிழ்நாட்டின் புகழ்பெற்ற மலைவாசஸ்தலமாகும், மேலும் அதன் அழகிய அழகிற்காக சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமானது. இந்த இடம் இயற்கை மற்றும் சாகசப் பிரியர்களுக்கு ஏற்றது. ஊட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள அழகான நீர்வீழ்ச்சிகளின் பட்டியல்

உங்கள் விடுமுறையில் நீங்கள் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய ஊட்டிக்கு அருகிலுள்ள 8 சிறந்த நீர்வீழ்ச்சிகள் இங்கே:

1. கொலகம்பை நீர்வீழ்ச்சி, ஹுலிகல்

நீலகிரி மலையில் அமைந்துள்ள ஊட்டியில் உள்ள கொலகம்பை நீர்வீழ்ச்சி உள்ளூர்வாசிகளிடையே பிரபலமான வார இறுதி இடமாகும். இருப்பினும், சாகசப் பிரியர்கள் இந்த இடத்தை சரியான இடமாகக் காணலாம், ஏனெனில் அவர்கள் இந்த பகுதியில் மலையேற்றம், மலையேற்றம், பாறை ஏறுதல், மலையேற்றம் போன்றவற்றில் ஈடுபடலாம்.

இவை தவிர, ட்ரூக் கோட்டை, அவலாஞ்சி ஏரி, தொட்டபெட்டா போன்ற அருகிலுள்ள இடங்களைப் பார்வையிடவும் மக்கள் மகிழ்ச்சியடையலாம்.

கூடுதல் தகவல்கள்:

நீர்வீழ்ச்சியின் உயரம்: 400 அடி

நுழைவு கட்டணம்: நுழைவு கட்டணம் இல்லை.

நேரம்: காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை

2. கல்ஹட்டி நீர்வீழ்ச்சி, மஞ்செத்தேவரு

ஊட்டிக்கு அருகிலுள்ள கல்ஹட்டி நீர்வீழ்ச்சி பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் தாயகமாகும். எனவே, இந்த இடம் இயற்கை மற்றும் வனவிலங்கு பிரியர்களுக்கு வழங்க நிறைய உள்ளது. இந்த தளத்தின் கவர்ச்சிகரமான வசீகரம் உங்களை சிலிர்ப்பையும் மயக்கத்தையும் நிரப்பும்.

மேலும், இந்த பகுதியில் நீங்கள் நீர் ராஃப்டிங், மலையேற்றம், பாறை ஏறுதல் போன்ற சாகச நடவடிக்கைகளில் ஈடுபடலாம். கூடுதலாக, இந்த இடம் குடும்ப சுற்றுலாவிற்கும், தனிமையில் நேரத்தை செலவிடுவதற்கும் ஏற்றது.

கூடுதல் தகவல்கள்:

நீர்வீழ்ச்சியின் உயரம்: 400 அடி

நுழைவு கட்டணம்: நுழைவு கட்டணம் இல்லை.

நேரம்: காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

3. கேத்தரின் நீர்வீழ்ச்சி, தமிழ்நாடு

ஊட்டிக்கு அருகிலுள்ள மிக அழகான நீர்வீழ்ச்சிகளில் ஒன்றாக கேத்தரின் நீர்வீழ்ச்சி கருதப்படுகிறது. இந்த நீர்வீழ்ச்சி இந்தியாவின் மிகவும் பிரபலமான நீர்வீழ்ச்சிகளின் பட்டியலிலும் வருகிறது. இந்த அருவியைச் சுற்றியுள்ள அழகிய இயற்கை அழகு இந்தியா முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

இது தவிர, கேத்தரின் நீர்வீழ்ச்சிக்கு அருகில் பல பிரபலமான சுற்றுலா இடங்கள் உள்ளன, அவற்றை மக்கள் ஒரு முழுமையான நாள் பயணத்தில் சுற்றிப் பார்க்கலாம்.

கூடுதல் தகவல்கள்:

நீர்வீழ்ச்சியின் உயரம்: 250 அடி

நுழைவு கட்டணம்: நுழைவு கட்டணம் இல்லை.

நேரம்: காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

4. பைக்காரா நீர்வீழ்ச்சி, பைக்காரா

இது உங்கள் ஊட்டி பயணத்தில் கட்டாயம் சேர்க்க வேண்டிய ஒன்று. ஊட்டிக்கு அருகிலுள்ள பைகாரா நீர்வீழ்ச்சி ஒரு பாரம்பரிய தளமாகவும் பிரபலமானது. இந்த நீர்வீழ்ச்சியைச் சுற்றியுள்ள வசீகரிக்கும் இயற்கை இயற்கை மற்றும் புகைப்பட ஆர்வலர்களை ஈர்க்கிறது. இதன் உயரம் காரணமாக, ஆண்டு முழுவதும் வானிலை அமைதியாகவும், இதமாகவும் இருக்கும். ஒட்டுமொத்தமாக, குடும்ப சுற்றுலா, இயற்கையை ஆராய்தல் மற்றும் சாகச நடவடிக்கைகளை அனுபவிப்பதற்கு இது ஒரு சிறந்த இடமாகும்.

கூடுதல் தகவல்கள்:

நீர்வீழ்ச்சியின் உயரம்: 180 அடி

நுழைவு கட்டணம்: ஒரு நபருக்கு ₹60

நேரம்: காலை 8:30 மணி முதல் மாலை 5 மணி வரை

எப்படி அடைவது: ஊட்டியிலிருந்து டாக்ஸி அல்லது டாக்ஸி மூலம்

5. சட்டங்கள் வீழ்ச்சி, குன்னூர்

லாஸ் ஃபால், ஊட்டியின் மிகவும் பிரபலமான நீர்வீழ்ச்சிகளில் ஒன்றாகும், மேலும் குன்னூரில் உள்ள ஒரு அற்புதமான வார இறுதி நுழைவாயிலாகும். இந்த நீர்வீழ்ச்சி பிரதான சாலைக்கு அருகில் அமைந்துள்ளது, எனவே மக்கள் எளிதாக அங்கு செல்ல முடியும். பருவமழை மற்றும் பருவமழைக்குப் பிந்தைய காலங்களில், இந்த பகுதி அழகிய அழகால் நிரம்பியுள்ளது.

நீங்கள் ஒரு அமைதியான 1 நாள் பயணத்திற்கு செல்ல விரும்பினால், நிச்சயமாக லாஸ் நீர்வீழ்ச்சியைப் பார்வையிடலாம்.

கூடுதல் தகவல்கள்:

நீர்வீழ்ச்சியின் உயரம்: 180 அடி

நுழைவு கட்டணம்: நுழைவு கட்டணம் இல்லை.

நேரம்: நாள் முழுவதும்

6. கட்டாரி நீர்வீழ்ச்சி, அடிகரட்டி

நீலகிரியின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான கட்டாரி நீர்வீழ்ச்சி ஊட்டியில் ஒரு முக்கிய இடமாகும். இந்த பகுதி அதன் அழகிய நிலப்பரப்புக்கு பிரபலமானது. இது தவிர, இந்த நீர்வீழ்ச்சி பொருளாதாரத்திற்கும் பங்களிக்கிறது. இந்தியாவின் முதல் நீர்மின்சார அமைப்பான கட்டாரி நீர்மின் திட்டம் இந்த நீர்வீழ்ச்சியில் தொடங்கியது. இங்குள்ள மிகப்பெரிய அணைகளை மக்கள் ரசிக்கிறார்கள்.

கூடுதல் தகவல்கள்:

நீர்வீழ்ச்சியின் உயரம்: 180 அடி

நுழைவு கட்டணம்: நுழைவு கட்டணம் இல்லை.


நேரம்: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

எப்படி அடைவது: ஊட்டியிலிருந்து டாக்ஸி அல்லது டாக்ஸி மூலம்

பார்வையிட சிறந்த நேரம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை

# வேலைவாய்ப்பு கார்னர்

## நெய்வேலி நிலக்கரி கழகத்தில் துணை மருத்துவ பணிகள்



1. பார்மசிஸ்ட்- குரூப் பி: 15 இடங்கள் (பொது-8, பொருளாதார பிற்பட்டோர்-1, ஓபிசி-4, எஸ்சி-2). சம்பளம்: ரூ.22,000- ரூ.90,000. வயது: 30க்குள். தகுதி: பார்மசி பிரிவில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சியுடன் பார்மசி கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும்.

2. ஆப்தலமிக் டெக்னீசியன்: 2 இடங்கள். சம்பளம்: ரூ.23,000- ரூ.95,000. வயது: 30க்குள். தகுதி: ஆப்டோமெட்ரியில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. தியேட்டர் அசிஸ்டென்ட்: 2 இடங்கள் (பொது). சம்பளம்: ரூ.20,000- ரூ.81,000. வயது: 30க்குள். தகுதி: ஆபரேஷன் தியேட்டர் மற்றும் அனஸ்தீஸியா டெக்னாலஜி பிரிவில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

4. ஆடியாலஜிஸ்ட் மற்றும் ஸ்பீச் தெரபிஸ்ட்: 1 இடம் (பொது). சம்பளம்: ரூ.24,000- ரூ.1,00,000. வயது: 30க்குள். தகுதி: ஆடியாலஜி மற்றும் ஸ்பீச் லாங்குவேஜ் பேதாலஜி பிரிவில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

5. டென்டல் மெக்கானிக்: 1 இடம். சம்பளம்: ரூ.22,000- ரூ.90,000. வயது: 30க்குள். தகுதி: டென்டல் லேப் டெக்னாலஜியில் டிப்ளமோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கட்டணம்: பொது/ பொருளாதார பிற்பட்டோர்/ஒபிசியினருக்கு ரூ.486/-. எஸ்சி/எஸ்டி/மாற்றுத்திறனாளிகள்/முன்னாள் ராணுவத்தினருக்கு ரூ.236/-. இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.

www.nlcindia.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 10.03.2026.

## தூய்மைப் பணியாளர்களைப் பாதுகாக்க ‘ஜில்’ மோர் வழங்கும் திட்டம்: மேயர் பிரியா துவக்கினார்

**சென்னை, மார்ச் 9:**

மேயரின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, கோடைக்காலங்களில் வெயிலின் தாக்கத்திலிருந்து பணியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர களப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டத்தை மேயர் ஆர்.பிரியா ரிப்பன் கட்டட வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

இதன் தொடக்கமாக, சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், மயானபூமி பணியாளர்கள், பொது கழிவறை மற்றும் மலேரியா பணியாளர்கள் என 100 தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கப்பட்டது. இத்திட்டம் அனைத்து மண்டலங்களிலும் பணிபுரியும் 29,461 மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 9ந் தேதி அன்று முதல் ஆவின் மோர் வழங்கப்படவுள்ளது.

கோடைக் காலங்களான மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரை ஆவின் நிறுவனத்திடம் இருந்து குளிர்ச்சியான 200 மீ. லிட்டர் மோர் ரூ.8 விலைக்கு கொள்முதல் செய்து, சென்னை மாநகராட்சியின் கீழ் பணிபுரியும் நிரந்தர, சுயஉதவிக் குழு, NMR மற்றும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், மலேரியா பணியாளர்கள் மற்றும் களப் பணியில் ஈடுபடும் சாலைப் பணியாளர்கள் என மொத்தம் 29,461 பணியாளர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆவின் நிறுவனத்திற்கு ரூ.8-க்கு குளிர்ச்சியான 200 மில்லி லிட்டர் மோரை (பாக்கெட்டில்) மண்டலங்களில் அடையாளம் காட்டப்பட்ட 30 இடங்களில் விநியோகம் செய்ய ஆவின் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு தோராயமாக ரூ.2.83 கோடி செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம், வேலூர், கடலூர் மற்றும் கோவை ஆகிய இடங்களில் அரசு தானியங்கி பணிமனைகள்

**சென்னை, மார்ச் 9:**

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சென்னை மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரகத்தில் காஞ்சிபுரம், வேலூர், கடலூர் மற்றும் கோவை ஆகிய இடங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல், கோவை, திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய பணிமனைகளில் நவீன ரக வாகனங்களை பழுது நீக்கம் செய்திட மின்னணு பழுது கண்டறியும் கருவிகள் பயன்பாட்டிற்காக கொண்டு வருதல் ஆகிய திட்டங்கள் தொடங்கி வைக்கப்படுவதுடன் 2 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



முதலமைச்சர் வழிகாட்டுதல் களின்படி அமைச்சர் 2024-25ஆம் ஆண்டிற்கான சட்டப் பேரவை போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை எண்.48-ல் அறிவித்தபடி காஞ்சிபுரம், வேலூர், கடலூர் மற்றும் கோவை ஆகிய இடங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் திட்டத்திற்கு ரூ.40 லட்சம் செலவில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணைகள் வெளியிடப்பட்டன.

அதனடிப்படையில் காஞ்சிபுரம், வேலூர், கடலூர் மற்றும் கோவை ஆகிய இடங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளவற்றை அமைச்சர் சிவசங்கர் சென்னை தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்.

மேலும் 2025-26ம் ஆண்டிற்கான சட்டப் பேரவை போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை எண்.48-ன் மூலம் ரூ.30 லட்சத்து 165 - செலவில் அரசு தானியங்கி பணிமனை கோவை, திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகியவற்றில் நவீன ரக வாகனங்களை பழுது நீக்கம் செய்திட மின்னணு பழுது கண்டறியும் கருவிகள் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளவற்றை அமைச்சர் துவக்கி வைத்தார்.

## எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலைய வாகன நிறுத்துமிடம் 9ந் தேதி முதல் மூடல்

**சென்னை, மார்ச் 9:**

தென்னக ரெயில்வேயால் எழும்பூர் ரெயில் நிலையப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளின் காரணமாக, எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்தின் வாகன நிறுத்துமிடம் 9ந் தேதி முதல் மறு அறிவிப்பு வரும் வரை முழுமையாக நிறுத்தப்படுகிறது. எனவே, பயணிகள் அருகிலுள்ள மற்ற மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள வாகன நிறுத்துமிடங்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள எழும்பூர் மெட்ரோவின் நுழைவு வாயில்கள் பி1 மற்றும் பி2 மட்டுமே பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்திருக்கும். கட்டுமானப் பகுதியில் உள்ள மற்ற அனைத்து நுழைவு வாயில்களும் மூடப்படும். எனவே, பயணிகள் தங்களின் நுழைவு மற்றும் வெளியேற்றத்திற்கு நுழைவு வாயில் பி1 மற்றும் பி2 (பூந்தமல்லி நெடுஞ்சாலைப் பக்கம்) ஆகியவற்றை மட்டும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பயணிகளின் பாதுகாப்பு மற்றும் கட்டுமானப் பணிகளின் சீரான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இந்தத் தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயணிகளுக்கு வழிகாட்ட போதுமான தகவல் பலகைகளும், மெட்ரோ இரயில் நிலைய பணியாளர்களும் பணியில் இருப்பார்கள்.

இதனால் பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்திற்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வருந்துகிறது மற்றும் பயணிகளின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறது என்று மெட்ரோ நிர்வாகம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## தி.மு.க. அரசைக் கண்டித்து 13ந் தேதி ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி

**சென்னை, மார்ச் 9:**

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி அம்மா ஆகிய நம் இருபெரும் தலைவர்களுடைய ஆட்சிக் காலங்களின்போதும்; எனது தலைமையிலான கழக ஆட்சியின்போதும், தொழிலாளர்கள் நலனை கருத்தில்கொண்டு, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, தொழிலாளர்கள் பாராட்டும் நல்லரசுகளாக இருந்து வந்ததை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை அளித்து ஆட்சியில் அமர்ந்த திமுக அரசு, மக்கள் நலனில் சிறிதும் அக்கறை இல்லாமலும், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளைக் கூட நிறைவேற்றித் தராமலும், குடும்ப நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருவது மிகுந்த வேதனைக்குரிய விஷயமாகும்.

அந்த வகையில் திமுக அரசு, தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி வரும் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்த பணப் பலன்கள், விடுப்பு ஒப்படைப்பு உள்ளிட்ட நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தராமல் காலம் தாழ்த்தி வரும் திமுக அரசைக் கண்டித்தும்;

தொழிலாளர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அண்ணா தி.மு.க. அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் சார்பில் 13ந் தேதி -- வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணியளவில், சென்னை, பல்லவன் இல்லம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டி. ஜெயக்குமார் தலைமையிலும், கழக அண்ணா தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர் ஆர். கமலக்கண்ணன், தலைவர் தாடி ம.ராசு, பொருளாளர் எம்.அப்துல் அமீது ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், அண்ணா தொழிற்சங்கப் பேரவையின் மாநில நிர்வாகிகள், போக்குவரத்துப் பிரிவு நிர்வாகிகள், தமிழ்நாடு முழுவதும் உள்ள போக்குவரத்துக் கழக அண்ணா தொழிற்சங்களைச் சேர்ந்த நிர்வாகிகளும், தொழிலாளர்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆர்ப்பாட்டத்தில், தொழிலாளப் பெருமக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## கோயில்களில் பணிபுரியும் தினக்கூலி, தொகுப்பூதிய பணியாளர்களை நிரந்தரம் செய்யக் கோரிக்கை

**சென்னை, மார்ச் 9:**

தமிழ்நாடு கோயில் தொழிலாளர்கள் யூனியன் மாநில கௌரவத் தலைவர் அ.முத்துசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

“கோயில்களின் பணபுரிந்து வரும் தினக்கூலி, தொகுப்பூதிய பணியாளர்கள் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் பணி செய்திருந்தால் பணி வரன் முறை ( பணி நிரந்தரம்) செய்யப்படுவார்கள் என்ற தகுதியின் அடிப்படையில் இதற்கு முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் பணியில் சேர்ந்திருந்தாலும், 5 ஆண்டுகள் பணி செய்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் 31.07.2021 வரை பணியில் சேர்ந்த சுமார் 1300 தினக்கூலி, தொகுப்பூதிய பணியாளர்களுக்கு இந்த ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு பணி வரன் முறை (பணி நிரந்தரம்) செய்யப்பட்டு திராவிட மாடல் அரசால் ஒளி ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. தினக்கூலி, தொகுப்பூதிய பணியாளர்கள் தாங்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவோம் என்ற நம்பிக்கையில் திருமணம் செய்து கொண்டு, குழந்தையுடனும், வயதான பெற்றோர்களுடனும், மாத தொகுப்பூதியமாக குறைந்த பட்சமாக ரூ.6000 லிருந்து ரூ.7000 பெற்றுக் கொண்டு கால நேரம் பார்க்காமல், குறைந்த பட்சம் 12 மணி நேரத்திலிருந்து 14 மணி நேரம் பணியாற்றி வருகின்றனர். அவர்களை உடனடியாக பணி நிரந்தரம் செய்ய வேண்டும்”.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

# சுகாதாரத் துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 41,000 பேருக்கு மே முதல் சம்பள உயர்வு

**சென்னை, மார்ச் 9:**

சுகாதாரத் துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 41 ஆயிரம் பேருக்கு மே மாதம் முதல் சம்பளம் உயர்த்தி வழங்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



சென்னை அண்ணா சாலையில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட் டரங்கில் நேற்று நடந்த நிகழ்வில், 115 மருத்துவ அலுவலர்கள், 83 கண் மருத்துவ உதவியாளர்கள், 75 ஆய்வக நுட்புநர்களுக்கு பணி நியமன ஆணைகளை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். 2024-25ம் ஆண்டில் குடும்ப நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கி கவுரவித்தார்.

பின்னர், அவர் பேசியதாவது: மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டதில் 250 பேர் தேர்வாகியுள்ளனர். அவர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மார்ச் 11ம் தேதி வழங்க உள்ளார்.

தமிழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் சித்தா, ஆயுஷ் மருத்துவர்கள், தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள், தாய் சேய் நல அலுவலர், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், இயன்முறை சிகிச்சையாளர்கள், ஆய்வக நுட்புநர்கள், பல் நோக்கு சுகாதாரப் பணியாளர் கள் என 41 ஆயிரம் பேரின் சம்பளம் வரும் மே மாதம் முதல் உயர்த்தி வழங்கப்பட உள்ளது. இதனால், அரசுக்கு ரூ.169 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். கடந்த 2023- 24ம் நிதி ஆண்டில் இருந்து 2.650 ஆஷா பணியாளர்கள் ஊக்கத் தொகை பெற்று பணியாற்றி வந்தனர். ரூ.1,500- ரூ.2,000 என்று இருந்த ஊக்கத் தொகை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.5,950 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.7,000 வரை கூடுதலாக வழங்கப்பட உள் ளது. இதன்மூலம் அரசுக்கு ரூ.3.21 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் சுகாதாரத் துறை செயலர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மா.மகேஸ்வரி, தேசிய - நலவாழ்வுக் குழும இயக்குநர் அருண் தம்புராஜ், பொது சுகாதா ரம், நோய்த் தடுப்பு மருந்து துறை இயக்குநர் சோம சுந்தரம், மருத்துவம், ஊரக நலப் பணிகள் இயக்குநர் சித்ரா, குடும்ப நலத்துறை இயக்குநர் சத்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# க்ரைம் கார்னர்

## விழுப்புரம் பட்டறை உரிமையாளரிடம் ரூ.5 கோடி தங்கத்தை கொள்ளை: 4 பேர் கைது

**விழுப்புரம், மார்ச் 9:**

விழுப்புரம் விராட்டிக்குப்பம் பாதை பகுதியை சேர்ந்தவர் ராஜமாணிக்கம் (வயது 48). இவர் விழுப்புரத்தில் நகை பட்டறை வைத்துள்ளார். இவருக்கு கீழ் சுமார் 20 நகை தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர் அவ்வப்போது சென்னை சவுக்கார்பேட்டை பகுதியில் உள்ள நகைக்கடை வியாபாரிகளிடம் தங்கக்கட்டிகளை மொத்தமாக வாங்கிக்கொண்டு விழுப்புரம் வந்து அதனை கம்மல், ஜிமிக்கி, மோதிரம் உள்ளிட்டவைகளாக செய்து கொடுக்கும் தொழில் செய்து வருகிறார். இவ்வாறாக 4 கிலோ 106 கிராம் எடையுள்ள நகைகளை சென்னையில் உள்ள நகைக் கடை வியாபாரிகளிடம் கொடுப்பதற்காக கடந்த 3-ந்தேதி காலை ராஜமாணிக்கம், ஒரு லேப்டாப் பேக்கில் நகைகளை வைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் விழுப்புரம் ரெயில் நிலையத்திற்கு புறப்பட்டார். அந்த நகைகளுடன் ரூ.5 லட்சத்து 50 ஆயிரம் ரொக்கத்தையும் அவர் எடுத்துச்சென்றார். அப்போது முகமூடி அணிந்து வந்த 5 பேர்கொண்ட கும்பல் திடீரென ராஜமாணிக்கத்தை வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டி நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்து சென்றனர். கொள்ளைபோன நகைகளின் மதிப்பு சுமார் ரூ.5 கோடியாகும். புகாரின் பேரில் 8 தனிப்படை அமைத்து போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். கொள்ளையர்கள் 5 பேரும் புதுச்சேரியை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்பதை போலீசார் உறுதிப்படுத்தினர். அம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட தனிப்படை போலீசார், 4 பேரை மடக்கி பிடித்தனர். பின்னர் அவர்களை விழுப்புரத்திற்கு அழைத்து வந்து அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் 4 பேரும் புதுச்சேரி நைனாமண்டபம் பகுதியை சேர்ந்த ஆறுமுகம் மகன் ஆனந்தன் (24). முத்தையால்பேட்டையை சேர்ந்த முருகன் மகன் கந்தசாமி என்கிற ஹரி (24). அரியாங்குப்பத்தை சேர்ந்த செல்வராஜ் மகன் சுப்பிரமணி (24). அய்யனார் மகன் சுரேந்தர் (24) என்பது தெரிந்தது. இவர்கள் உள்பட 5 பேர் சேர்ந்து ராஜமாணிக்கத்திடம் நகை. பணத்தை கொள்ளையடித்ததை ஒப்புக்கொண்டனர். இதையடுத்து ஆனந்தன், கந்தசாமி, சுப்பிரமணி, சுரேந்தர் ஆகிய 4 பேரை போலீசார் கைது செய்து அவர்களிடமிருந்த 4 கிலோ எடை கொண்ட தங்க நகைகள் மற்றும் ரூ.3 லட்சம் ரொக்கம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்கள் 4 பேரையும், போலீசார் விழுப்புரம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## 9 வயது சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த சிறுவர்கள்

**லக்னோ, மார்ச் 9:**

உத்தரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டம் சிகந்தரா கிராமத்தை சேர்ந்த 9 வயது சிறுமி அங்குள்ள பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில், சிறுமி வெள்ளிக்கிழமை மதியம் 3 மணியளவில் கிராமத்திற்கு அருகே உள்ள வயல்வெளிக்கு கால்நடைக்கு புல் அறுக்க தனியாக சென்றுள்ளார். அப்போது சிறுமியை இடைமறித்த அதே கிராமத்தை சேர்ந்த 10 மற்றும் 12 வயதுடைய 2 சிறுவர்கள் பழங்கள் தருவதாக கூறி சிறுமியை அருகே உள்ள கோதுமை வயல் அழைத்து சென்றுள்ளனர். அங்கு வைத்து சிறுமியை 2 சிறுவர்களும் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இதையடுத்து, சிறுவர்களிடமிருந்து வீட்டிற்கு தப்பி வந்த சிறுமி தனக்கு நடந்த சம்பவம் குறித்து தாயாரிடம் கூறினார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாயார் புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், சிறுவர்களும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஹோலி கொண்டாட்டத்தில் இளைஞர் கொலை

புதுடெல்லி: டெல்லி உத்தம் நகர் பகுதியில் கடந்த 4-ம் தேதி ஹோலி கொண்டாட்டாட்டத்தின் போது ஒரு சிறுமி வண்ணப் பொடிகள் தூவி உள்ளார். அது முஸ்லிம் பெண் மீது விழுந்ததால் முஸ்லிம் பெண் குடும்பத்தாருக்கும், சிறுமியின் குடும்பத்தாருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த தருண்குமார் (26) என்பவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். இதையடுத்து தருண்குமார் குடும்பத்தார் போராட்டம் நடத்தினர். போலீஸார் தலையிட்டு அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

# விளையாட்டு செய்திகள்

## இங்கிலாந்து உள்ளிட்ட 3 அணிகள் தாயகம் செல்ல ஐசிசி சிறப்பு ஏற்பாடு

**புதுடெல்லி, மார்ச் 9:**

வாடகை விமானம் மூலம் இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய கிரிக்கெட் அணிகள் தங்களது சொந்த நாடுகளுக்குச் செல்லவுள்ளன.


டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது. அரை இறுதிச் சுற்று முடிந்த நிலையில் இன்று இறுதிப் போட்டி அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது. போட்டியிலிருந்து வெளியேறிய தென் ஆப் பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், இங்கிலாந்து ஆகிய அணிகள், ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் போர் காரணமாக இந்தியாவிலேயே தங்கியுள்ளன. அந்த நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து விமானங்கள் இயக்கப்படாத நிலையில் அணி வீரர்கள் ஓட்டலில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் இந்த அணிகள் வாடகை விமானங்கள் மூலம் சொந்த நாடுகளுக்குச் செல்ல ஐசிசி சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. தென் ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் கொல்கத்தாவிலிருந்து வாடகை விமானம் மூலம் செல்லவுள்ளன. முதலில் ஜோஹன்னஸ்பர்க் செல்லும் விமானம் அங்கு தென் ஆப்பிரிக்க வீரர்களை இறக்கி விடவுள்ளது. பின்னர் அந்த விமானம் மேற்கு இந்தியத் தீவு வீரர்களுடன் ஆன்டிகுவாவுக்குச் செல்லவுள்ளது.

அதேநேரத்தில் மும்பையிலிருந்து இங்கிலாந்து அணி வாடகை விமானம் நேற்று மாலை புறப்பட்டுச் சென்றதாக ஐசிசி வட்டாரங்கள் தெரிவித்தன.

## மாநில அளவிலான வாலிபால் போட்டி: சிவந்தி கிளப் அணி வெற்றி

**சென்னை, மார்ச் 9:**



நெல்லை பிரண்ட்ஸ் கிளப்சார்பில் பி.ஜான் மற்றும் ஏ.கே.சித்திரைபாண்டியன் நினைவு மாநில அளவிலான வாலிபால் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் நேற்று தொடங்கியது. இந்த தொடரில் ஆடவர் பிரிவில் 8 அணிகளும், மகளிர் பிரிவில் 5 அணிகளும் பங்கேற்றுள்ளன. தொடக்க நாளான நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் நெல்லை பிரண்ட்ஸ் கிளப்பின் தலைவர் டபிள்யூ.ஐ.தேவாரம், வருமானவரித்துறை ஆணையர் எஸ்.ஏ.கருப்பசாமி, எஸ்டிஏடி பொதுமேலாளர் எல்.சுஜாதா, தமிழ்நாடு வாலிபால் சங்கத்தின் பொதுச் செயலாளர் மார்ட்டின் சுதாகர் மற்றும் நெல்லை பிரண்ட்ஸ் கிளப்பின் நிர்வாகிகள் பி.ஜெகதீசன், ஏ.தினகர், சி.கேசவன், பரிமேலழகன், பாக்யராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆடவர் பிரிவில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சென்னை நியூ கல்லூரி 25-19, 25-19 என்ற நேர் செட் கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியை தோற்கடித்தது. மகளிர் பிரிவில் டாக்டர் சிவந்தி கிளப் 25-15, 25-11 என்ற செட் கணக்கில் தமிழக காவல்துறை அணியை வென்றது. எஸ்டிஏடி அணி 25-14, 25-18 என்ற கணக்கில் எஸ்ஆர்எம் ஸ்பைக்கர்ஸ் அணியை வீழ்த்தியது.

## ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் 156 பேருக்கு ராணுவப் பயிற்சி நிறைவு

**சென்னை, மார்ச் 9:**

பரங்கிமலையில் ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு ராணுவப் பணியில் சேரும் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி மையத்தில் இந்திய நாட்டைச் சேர்ந்த இளம் அதிகாரிகள் மட்டுமின்றி நட்பு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த மையத்தில், 11 மாத பயிற்சி பெற்ற 121 ஆண், 35 பெண் ஆகிய 156 பேருக்கு பயிற்சி நிறைவு விழா. அணி வகுப்பு விழா நேற்று ஓடிஏ வளாகத்தில் பரமேஸ்வர் திடலில் நடந்தது.

இந்த நிகழ்ச்சிகளில் மேற்கு கட்டளைப் பிரிவின் தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் குமார் கட்டி யார், ராணுவ பயிற்சி மையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் மைக்கேல் ஏ.ஜே பெர்னாண்டஸ் பங்கேற்று பயிற்சி நிறைவு செய்த ராணுவ அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் சிறப்பு அணி வகுப்பு நடத்திய அணிகளுக்கு தங்கம். வெண்கல பதக்கம், சிறப்பு வாள் போன்றவற்றை வழங்கினர். இதையடுத்து பயிற்சி முடித்த அதிகாரிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் ராணுவ அதிகாரிகள். அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

## கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ்மாக் பணியாளர்கள் மீண்டும் காத்திருப்பு போராட்டம்

**சென்னை, மார்ச் 9:**



டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்த அறிவிப்புகள் தெளிவாக இல்லாததாக கண்டனம் தெரிவித்து, நேற்று முதல் மீண்டும் காத்திருப்பு போராட்டம் தொடங்கியுள்ளனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு கடந்த பிப்.1ம் தேதி முதல் 19ம் தேதி வரை தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்தியது. போராட்டக் குழுவினருடன் அமைச்சர் முத்துசாமி பேச்சுவார்த்தை நடத்தி, கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி அளித்ததை தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த 4ம் தேதி அவர்களது கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு சில அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. ஆனால், இந்த அறிவிப்புகள் தெளி வாக இல்லை என்று கண்டனம் தெரிவித்து, எழும்பூர் டாஸ்மாக் மேலாண் இயக்குநர் அலுவலகம் அருகே டாஸ்மாக் பணியாளர்கள் நேற்று முதல் மீண்டும் காத்திருப்பு போராட்டம் தொடங்கியுள்ளனர்.

## தூத்துக்குடியில் 800 கிலோ வெடி பொருட்கள் பறிமுதல்: போலீஸ் விசாரணை

**திருநெல்வேலி, மார்ச் 9:**



தூத்துக்குடி மாவட்டம், பசுவந்தனை காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று லக்கமாள் தேவி பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அப்பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் ஆஸ்பெட்டாஸ் செட் அமைத்து அதில் சட்டவிரோதமாக பட்டாசு தயாரிக்கப் பயன்படும் கரிமருந்துகள் மற்றும் பட்டாசு தயார் செய்யும் பொருட்கள் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து மேற்சொன்ன காவல்துறையினர் உடனே அந்த அறையில் இருந்த சுமார் 300 கிலோ கரி மருந்து, 200 கிலோ கரித்தூள், 300 கிலோ திரியுடன் கூடிய மருந்து குப்பி ஆகியவற்றை கைப்பற்றி வழக்குப்பதிவு செய்து இதில் தொடர்புடையவர்கள் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் அனுமதியின்றி சட்டவிரோதமாக பட்டாசு தயாரிக்க பயன்படுத்தப்படும் வெடி மருந்துகள், பட்டாசுகள் ஆகியவற்றை பதுக்கி வைத்திருந்தாலோ, பட்டாசு தயாரிப்பில் ஈடுபட்டாலோ அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தூத்துக்குடி மாவட்ட காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் முறையான அனுமதியுடன் செயல்படும் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “மகளிர் உரிமைத் தொகையை ரூ.2,000 ஆக உயர்த்தி வாக்குறுதி அளித்தது அதிமுக தான்” - பழனிசாமி

**சேலம், மார்ச் 9:**



சேலத்தில் அதிமுக சார்பில் நடைபெற்ற மகளிர் தின விழாவில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கலந்து கொண்டு கேக் வெட்டினார். பின்னர் கேக்கை மகளிர் அணியினருக்கு வழங்கி மகளிர் தின வாழ்த்து தெரிவித்துக் கொண்டார். இதில் சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன், ஏற்காடு எம் எல் ஏ சித்ரா, அதிமுக மகளிர் அணியினர் திரளாக கலந்து கொண்டனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறியது: “மகளிர் உரிமைத் தொகை ரூ 2,000 ஆக உயர்த்தி வாக்குறுதியில் நான் அறிவித்திருந்தேன். இதைத் தான் ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

இலவசம் கூடாது என்ற விஜய் தற்போது இலவசங்களை அறிவித்திருப்பது குறித்து அவரிடம் தான் கேட்க வேண்டும். ஒவ்வொரு கட்சியும் தேர்தல் நேரத்தில் வாக்குறுதி தரும். எங்களது கட்சியும் தேர்தல் வாக்குறுதியை அளித்துள்ளது. அதிமுக தேர்தல் அறிக்கையில் என்னென்ன செய்தோம் எனத் தெளிவாக ட்விட்டரில் விளக்கி உள்ளோம். அதன்படி, அதிமுக ஆட்சி அமைந்ததும் நாங்கள் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

‘அம்மா இருசக்கர வாகனம்’ தரப்படும் என அறிவித்து இருக்கிறோம்.

5 லட்சம் மகளிருக்கு ரூ. 25 ஆயிரம் மானியத்தில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளோம். அவற்றை செய்வோம்” என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

## வணிகச் செய்திகள்

## வங்கி ஏடிஎம் கார்டில் பணமெடுக்க புதிய கட்டுப்பாடு!

**சென்னை, மார்ச் 9:**

தங்கள் வங்கியின் ஏடிஎம் கார்டு மூலம், ஒரு நாளைக்கு ஏடிஎம் மையத்தில் பணமெடுக்கும் அளவில் பஞ்சாப் தேசிய வங்கி புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்த புதிய கட்டுப்பாடுகள் வரும் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பஞ்சாப் தேசிய வங்கி வெளியிட்டிருக்கும் அறிக்கையில், வங்கி தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கியிருக்கும் ஏடிஎம் கார்டுகளின் வகைகளுக்கு ஏற்ப, நாள் ஒன்றுக்கு பணமெடுப்பதில் புதிய கட்டுப்பாடுகளை உருவாக்கியருக்கிறது. இதன் மூலம், வாடிக்கையாளரின் பணப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும், டிஜிட்டல் பணப்பரிமாற்ற வசதிகளை மேம்படுத்த உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, பஞ்சாப் தேசிய வங்கியின் ரூபே என்சிஎம்சி பிளாட்டினம் உள்ளிட்ட வகை ஏடிஎம் கார்டுகளை வைத்திருப்பவர்கள் இதுவரை ஒரு நாளைக்கு ரூ.1 லட்சம் வரை ஏடிஎம் மூலம் பணமெடுக்கலாம் என்று வரைமுறை, இனி ரூ.50 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அது போல, ரூபேயின் சில டெபிட் கார்டுகள், நியோ, எக்ஸெல், விசா சிக்னேச்சர், மாஸ்டர்கார்டு வணிக கார்டுகள் போன்றவற்றின் மூலம் இதுவரை நாள் ஒன்றுக்கு ரூ.1.50 லட்சம் வரை பணமெடுக்கலாம் என்ற உச்ச அளவு, தற்போது ரூ.75 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்ஐஆர் நடைமுறை மிக வெளிப்படையானது: தலைமைத் தேர்தல் ஆணையர் பேட்டி




**புதுடெல்லி, மார்ச் 9:**

140 உறுப்பினர்களைக் கொண்ட கேரள சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி, முன்னேற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்ட தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், கொச்சியில் செய்தியாளர்களுக்கு சனிக்கிழமை அளித்த பேட்டியில் கூறியதாவது:

நாட்டின் பிற பகுதிகளுக்கும், உலகுக்கும் ஜனநாயக செயல்முறைகளைக் கற்பித்த மாநிலம் கேரளம். கேரளம் கடந்த 1960-களில் முதலாவதாக தேர்தல் நடத்தை விதிமுறைகளை உருவாக்கியது. பின்னர், அரசியல் கட்சிகளுடன் ஆலோசித்து, அந்த விதிமுறைகளையே ஏற்றுக் கொண்டது தேர்தல் ஆணையம். தேர்தல் நிர்வாகத்திலும் முன்னோடி மாநிலம் கேரளம். கடந்த 1982-இல் பரவூர் பேரவைத் தொகுதியில் பரீட்சார்த்த அடிப்படையில் முதல் முறையாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

தற்போதைய தேர்தலில் 2.69 கோடி வாக்காளர்களுக்காக மாநிலம் முழுவதும் 30,471 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. 100 சதவீத வெப் கேமரா கண்காணிப்பு உறுதி செய்யப்படும். 397 வாக்குச்சாவடிகள் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும். வாக்குப் பதிவு மையங்களின் வாயில் வரையே கைப்பேசிகள் அனுமதிக்கப்படும். கேரளத்தில் முதல் முறையாக வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படம் இடம்பெற வுள்ளது.

தவறில்லாத வாக்காளர் பட்டியலே ஜனநாயகத்தின் அடிப்படையாகும்.

தகுதியுள்ள நபர் விடுபடவோ, தகுதியில்லாத நபர் சேர்க்கப்படவோ கூடாது என்ற தெளிவான நோக்கம் கொண்ட எஸ்ஐஆர் நடைமுறை மிகவும் வெளிப்படையானது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 326-இன்கீழ் தகுதியுள்ள வாக்காளர்களை மட்டுமே இது உறுதி செய்யும் என்றார்.

## ஒரே மாதத்தில் ரயில்வேயின் சரக்கு பிரிவு வருவாய் ரூ.14,572 கோடி

**புதுடெல்லி, மார்ச் 9:**

தெற்கு ரயில்வே பயனாளர் ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜாபர்அலி கூறியதாவது: இந்திய ரயில்வே துறையானது பயணிகள் கட்டண உயர்வின்றி சரக்குகள் உள்ளிட்டவை மூலம் தனது வருவாயைப் பெருக்கும் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறது. அதன்படி, சரக்குகள் கையாளுதல் பிரிவில் பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நிலக்கரி, இரும்பு, உரங்கள், சிமென்ட், உணவு தானியங்கள் மற்றும் கொள்கலன்கள், வாகனங்களை அதிகளவில் கையாண்டுள்ளது.

நிகழ் ஆண்டில் கடந்த பிப்ரவரியில் மட்டும் தேசிய அளவில் இந்திய ரயில்வே 137.72 மில்லியன் டன் சரக்குகளை எடுத்துச் சென்றுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 3.96 சதவீதம் கூடுதலாக சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

அதன்படி, பிப்ரவரியில் மட்டும் சரக்குகள் கையாளப்பட்டதன் மூலம் ரூ.14,572 கோடி வருவாய் இந்திய ரயில்வே துறைக்கு கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 2.97 சதவீதம் கூடுதலாகும். சரக்குகள் கையாளுதலை இன்னும் கூடுதலாக்க சரக்கு ரயில்களுக்கு தனிப்பாதைகள் அமைத்தல், சரக்குப் பெட்டிகளைக் கூடுதலாக்குதல் உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்த ரயில்வே துறை திட்டமிட்டுள்ளது என்றார்.

## அருணாச்சல பிரதேசத்தில் அடுத்தடுத்து 3 முறை நிலநடுக்கம் - மக்கள் பீதி




**புதுடெல்லி, மார்ச் 9:**

அருணாச்சல பிரதேசம் மேற்கு காமெங் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நள்ளிரவு 11.55 மணியளவில் ரிக்டர் அளவில் 3.1 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து, அருணாச்சல பிரதேசத்தின் மேற்கு காமெங் பகுதியிலும் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் நேற்று அதிகாலை 1.10 மணிக்கு ரிக்டர் 2.7 அளவில் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், அருணாச்சல பிரதேசத்தின் பிச்சோம் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இன்று காலை 5.48 மணியளவில் ரிக்டர் அளவில் 2.8 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளது, அருணாச்சல பிரதேசத்தில் அடுத்தடுத்து மூன்று முறை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை. முன்னதாக, ராஜஸ்தானில் ரிக்டர் 3.5 அளவில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தெலுங்கானா: முதல்-மந்திரி முன் 130 மாவோயிஸ்டுகள் சரண்



**ஐதராபாத், மார்ச் 9:**

தெலுங்கானாவில் ஐதராபாத் நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் 130 மாவோயிஸ்டுகள் தங்களிடமுள்ள ஆயுதங்களை அரசிடம் ஒப்படைத்து விட்டு, முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டியின் முன் சரணடைந்தனர்.

அவர்களில் மாநில கமிட்டி உறுப்பினர்கள் 3 பேர், மண்டல கமிட்டி உறுப்பினர் ஒருவர், பிரதேச கமிட்டி உறுப்பினர்கள் 10 பேர், பகுதி கமிட்டி உறுப்பினர்கள் 46 பேர் மற்றும் பிற உறுப்பினர்கள் 70 பேர் என மொத்தம் 130 பேர் 124 வகையான நவீன ரக ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தனர்.

இதன்பின்னர் அவர்களிடையே முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி பேசும்போது, மத்திய கமிட்டி உறுப்பினர் கணபதி உள்ளிட்ட மாவோயிஸ்டு தலைவர்கள் இயல்பு வாழ்க்கையில் இணைந்து மாநில மறுகட்டமைப்பில் பங்கு பெற வேண்டும் என கேட்டு கொண்டார். ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவது என முடிவு செய்து, சரணடைந்த மாவோயிஸ்டுகளை பாராட்டிய அவர், பேச்சுவார்த்தையே ஒரே தீர்வு என வலியுறுத்தியதுடன், சிக்கல்களுக்கு ஜனநாயக நடைமுறையின் அடிப்படையிலேயே தீர்வு காண முடியும் என கூறினார்.

# கேரளா: வெளிநாட்டு கப்பல் மீது மீன்பிடி படகு மோதி விபத்து; 2 மீனவர்கள் மாயம்



**திருவனந்தபுரம், மார்ச் 9:**

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் சக்திகுளங்கரை பகுதியில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு மீனவர்கள் மீன்பிடிக்க படகில் புறப்பட்டுள்ளனர். படகில் 11 மீனவர்கள் பயணித்தனர்.

இந்நிலையில், கேரளாவில் இருந்து 120 நாட்டிகல் மைல் தொலைவில் நேற்று இரவு மீன்பிடி படகு சென்றுகொண்டிருந்தது. அப்போது நடுக்கடலில் சென்றுகொண்டிருந்த வெளிநாட்டு கப்பல் மீது மீன்பிடி படகு மோதியது.

இந்த விபத்தில் படகு உடனடியாக கடலில் மூழ்கியது. படகில் இருந்த மீனவர்கள் 11 பேரும் கடலில் தத்தளித்தனர்.

இதையடுத்து, மோதிய வெளிநாட்டு கப்பலில் பயணித்த மாலுமிகள் கடலில் தத்தளித்த மீனவர்களில் 9 பேரை மீட்டனர். ஆனாலும், கடலில் மூழ்கிய 2 மீனவர்கள் மாயமாகினர். இந்த சம்பவம் குறித்து இந்திய கடற்படையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 9 மீனவர்களையும் கொச்சி துறைமுகத்திற்கு அழைத்துவர கடற்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும், கடலில் மூழ்கி மாயமான எஞ்சிய 2 மீனவர்களை தேடும் பணி நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான மீன்பிடி படகில் இருந்த மீனவர்கள் அனைவரும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்தவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

# எரிபொருள் இறக்குமதிக்கு வேறு நாடுகளை தேடும் இந்தியா.. வினியோகம் செய்ய சம்மதம் தெரிவித்த நாடுகள்



**புதுடெல்லி, மார்ச் 9:**

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர் சூழலால், முக்கிய கடல் வழித்தடமான ஹோர்முஸ் ஜலசந்தியில் சரக்கு போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது. எனினும், இந்தியாவுக்கு பெரிய பாதிப்பு இல்லை என்று கூறப்படுகிறது. காரணம், ஹார்முஸ் வழியாக மட்டும் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய், எரிவாயு ஆகியவை வருவதில்லை. ரஷியா, மேற்கு ஆப்ரிக்கா, அமெரிக்கா மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலிருந்தும் தடையின்றி எரிசக்தி கிடைப்பதை இந்தியா உறுதி செய்துள்ளது.

இந்தியாவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று மத்திய அரசு ஏற்கனவே தெரிவித்துள்ளது. இதற்காக எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகையில், "இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியில் 40 சதவீதம் மட்டுமே ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக வருகிறது.

மீதி 60 சதவீதம், இதர வழித்தடங்கள் வழியாக வருகிறது. அந்த வழித்தடங்களில் எந்த பாதிப்பும் இல்லை. அதனால்தான் சர்வதேச தட்டுப்பாடு காலங்களிலோ அல்லது கொரோனா காலத்திலோ கூட இந்திய வாடிக்கையாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை.

தற்போது, ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுக்கு கூடுதலாக எரிவாயு வினியோகம் செய்ய முன்வந்துள்ளன. நீண்டகால எரிபொருள் வினியோகத்துக்காக அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நட்பு நாடுகளுடன் புதிய எரிபொருள் வினியோக ஒப்பந்தங்களை இந்தியா செய்து கொண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா எரிபொருள் இறக்குமதி செய்யும் நாடுகளின் எண்ணிக்கை 27-ல் இருந்து 40 ஆக அதிகரித்துள்ளது. எரிபொருள் வினியோகத்துக்கு ஒரே வழித்தடத்தை சார்ந்திருக்கும் காலம் முடிந்து விட்டது. 'தேசநலன்' என்ற ஒரே கொள்கை அடிப்படையில்தான் எரிபொருள் இறக்குமதி முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

கச்சா எண்ணெய் எங்கு கிடைக்கிறதோ, எங்கு மலிவு விலையில் கிடைக்கிறதோ அங்கு வாங்குகிறோம். தொடர்ந்து அப்படியே வாங்குவோம். இதுதான் எங்களது உறுதியான நிலைப்பாடு" என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்தியப் பெண்களின் 'ஸ்டார்ட்-அப்' நிறுவனங்கள்: 2025-இல் ரூ.10,000 கோடி நிதி திரட்டி சாதனை!

**புதுடெல்லி, மார்ச் 9:**

இந்தியாவில் பெண்களால் தொடங்கப்பட்ட ஸ்டார்ட்-அப் (புத்தாக்க) தொழில்நிறுவனங்கள், கடந்த 2025-ஆம் ஆண்டில் சுமார் 110 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.10,115 கோடி) முதலீட்டைத் திரட்டி, நிலையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

கடந்த 2024-இல் இந்நிறுவனங்கள் 120 கோடி டாலர் நிதி திரட்டியிருந்த நிலையில், 2025-இல் 110 கோடி டாலராக சரிவானாலும், பெண் தொழில்முனைவோர் மீதான முதலீட்டாளர்களின் ஆர்வம் குறையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை 580-லிருந்து 407-ஆக குறைந்த போதிலும், சராசரி முதலீட்டுத் தொகை அதிகரித்துள்ளது. அதாவது, 2024-இல் ஒரு நிறுவனத்துக்குச் சராசரியாகக் கிடைத்த 24 லட்சம் டாலர் முதலீடு, 2025-இல் 38 லட்சம் டாலராக அதிகரித்துள்ளது. தொடக்க நிலை நிறுவனங்களுக்கான நிதி 52.8 கோடி டாலரிலிருந்து 57.2 கோடி டாலராக அதிகரித்துள்ளது. குறிப்பாக, நிகிதா பிரசாத் இணைந்து தொடங்கிய 'கிவா' ஆபரண நிறுவனம் 6.2 கோடி டாலரையும், நம்ரதா அஸ்தானா இணைந்து தொடங்கிய 'புளூ தோகை காபி' நிறுவனம் 2.5 கோடி டாலரையும் நிதியாகப் பெற்றுள்ளன. பெண் தொழில்முனைவோருக்கு அதிக நிதி ஈட்டித் தரும் நகரமாக கர்நாடகத்தின் பெங்களூரு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. பெங்களூரில் 44.7 கோடி டாலர், குருகிராமில் 11.5 கோடி டாலர், மும்பையில் 11.2 கோடி டாலரை நிறுவனங்கள் திரட்டியுள்ளன. அதன்படி, இந்தியத் தொழில்முனைவோர் துறையில் பெண்களின் ஆதிக்கம் மற்றும் பங்களிப்பு தொடர்ந்து வலுவடைந்து வருவதை இந்தப் புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

## மக்களவையின் சிறந்த தலைவர் ஓம் பிர்லா: பிரதமர் மோடி புகழாரம்

**புதுடெல்லி, மார்ச் 9:**

கோட்டா விமான நிலையத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் சனிக்கிழமை காணொலி வாயிலாக உரையாற்றிய பிரதமர் மோடி, ஓம் பிர்லா மீது பாராட்டு மழை பொழிந்தார். பிரதமரின் உரை வருமாறு: சிறந்த நாடாளுமன்றவாதியான ஓம் பிர்லா, மக்களவையின் சிறந்த தலைவரும் ஆவார். அரசமைப்புச் சட்டத்தின் மீது முழு அர்ப்பணிப்பும், நாடாளுமன்ற நடைமுறைகளில் பற்றுதலும் மிக்கவர். அவர் எந்தத் தரப்பின் உறுப்பினரும் அல்லர்; கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர். அவையில் பிர்லாவை காணும்போது, கல்வி நகரமான கோட்டாவில் இருந்து வந்ததன் செல்வாக்கை உணர்கிறேன். ஒரு குடும்பத்தின் நல்ல தலைவர் போல் அனைவரையும் ஒருசேர முன்னெடுத்துச் செல்லும் பாத்திரத்தை சிறப்பாக வகிக்கிறார். மதிப்புமிக்க எம்.பி.க்கள் அனைவரையும் மிக சிறப்பாக கையாள்கிறார். அவர்களின் உணர்வுகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பெரிதும் மதிப்பளிக்கிறார். எம்.பி.க்களுக்கு உச்சபட்ச மதிப்பளிக்கும் இயல்பு கொண்ட அவைத் தலைவர் ஓம் பிர்லாதான். அவர் யாரையும் அவமதிப்பதில்லை. ஒவ்வொருவரின் கசப்பான வார்த்தைகளையும் பொறுத்துக் கொண்டு, புன்னகை முகத்துடன் எதிர்கொள்கிறார். எப்போதுமே அவரது முகத்தில் இனிய புன்னகை தவழும். இதுவே, அவையில் பரவலாக அவர் நேசிக்கப்பட காரணம் எனக் கருதுகிறேன் என்றார் பிரதமர் மோடி. ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள தீர்மானம் மீது திங்கள்கிழமை விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது. எம்.பி.க்கள் பலத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் தோல்வியை எதிர்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேரள மாநில அரசு வேலை வாய்ப்பில் திருநங்கைகளுக்கு 1% இடஒதுக்கீடு!

**திருவனந்தபுரம், மார்ச் 9:**

கேரளத்தில் தற்போது உள்ள இடஒதுக்கீட்டு முறையில் திருநங்கைகளுக்கு 1% இடஒதுக்கீடு வழங்குமாறு திட்ட அறிக்கை ஒன்றை மாநில அமைச்சரவையின் ஒப்புதலுக்காக அம்மாநில சமூக நீதித்துறை சமர்ப்பித்துள்ளது. கேரள உயர் நீதிமன்றம், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் திருநங்கைகளுக்கான இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்துமாறு அம்மாநில அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. முன்னதாக, கடந்த 2014 ஆம் ஆண்டு இதேபோன்ற உத்தரவை உச்சநீதிமன்றமும் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குப் பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவின்படி, மாநில அரசுப் பணியாளர் தேர்வில் தகுதிபெற்ற மூன்று திருநங்கைகளை அந்தந்தப் பிரிவுகளின் கீழ் நியமிக்கக் கூடுதல் பதவிகளை உருவாக்கியிருந்தது. இதைத்தொடர்ந்து, முறையான இடஒதுக்கீட்டுக் கட்டமைப்பு செயல்படுத்தப்படும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்று அம்மாநில அரசு தெரிவித்திருந்தது. இந்த நிலையில், முறையான இடஒதுக்கீட்டுக்கான திட்ட அறிக்கை மாநில அமைச்சரவையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என கேரள சமூக நீதித்துறை அமைச்சர் ஆர். பிந்து தெரிவித்துள்ளார். சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மூன்றாம் பாலினத்தவரின் முன்னேற்றத்துக்கு இது போன்ற திட்டங்கள் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய நெடுஞ்சாலை சுங்கச் சாவடிகளில் 5,100 பெண் ஊழியர்கள் நியமனம்

**புதுடெல்லி, மார்ச் 9:**

பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருடன் விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டன. அதன் அடிப்படையில், சுங்கச்சாவடிகளில் பகல் நேரப் பணிகளில் பெண் ஊழியர்களை நியமிக்க ஒப்பந்ததாரர்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். தற்போது முதல் கட்டமாக 5,100-க்கும் மேற்பட்ட பெண்கள் பணியில் சேர்ந்துள்ளனர். குறிப்பாக, கிராமப்புறங்களைச் சேர்ந்த பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் சுங்கச்சாவடிகளைத் திறம்பட நிர்வகித்தல் உள்பட முறையான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

## எங்களால் இன்னும் 6 மாதங்களுக்கு போரை தீவிரமாக நடத்த முடியும்: ஈரான்

**வாஷிங்டன், மார்ச் 9:**

அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக 6 மாதங்களுக்கு தங்களால் ஒரு தீவிரமான போரை நடத்த முடியும் என்று ஈரானின் புரட்சிகர காவல்படை அறிவித்துள்ளது.

ஈரான் மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் இடையிலான மோதல் இரண்டாவது வாரத்தை எட்டியுள்ள நிலையில், ரியாத்தை நோக்கிச் சென்ற ட்ரோன்களை இடைமறித்து அழித்ததாக சவூதி அரேபியா தெரிவித்தது. மேலும், குவைத் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள எரிபொருள் சேமிப்பு கிடங்குகளை ஈரான் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் ஏவுகணைகள் முஹாரக் பகுதியில் உள்ள ஒரு பல்கலைக்கழக கட்டிடத்தின் மீது விழுந்ததில் மூன்று பேர் காயமடைந்ததாக குவைத்தின் உள்துறை அமைச்சகம் அறிவித்தது. உலகின் எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்தில் ஐந்தில் ஒரு பங்கு வகிக்கும் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதன் காரணமாக பல நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில், தெஹ்ரானின் உள்ள ஒரு எண்ணெய் கிடங்கை அமெரிக்காவும், இஸ்ரேலும் சனிக்கிழமையன்று தாக்கியதாக ஈரான் குற்றம் சாட்டியது. பங்குச் சந்தைகள் சரிந்து கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததால் ஈரானின் எண்ணெய் உள்கட்டமைப்பின் மீதான முதல் தாக்குதலாக இது கூறப்படுகிறது.

## 15 ஆண்டுகளாக லாட்டரி டிக்கெட் வாங்கி வந்த இந்திய டிரைவருக்கு ஷார்ஜாவில் ரூ.10 கோடி பரிசு

**ஷார்ஜா, மார்ச் 9:**

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா நகரில் கடந்த 15 ஆண்டுகளாக லாட்டரி டிக்கெட் வாங்குவதை வழக்கமாக கொண்ட இந்திய டிரைவருக்கு ரூ.10 கோடி பரிசு கிடைத்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா நகரில் பணியாற்றும் இந்திய டிரைவர் விபீஸ் பள்ளியாளி. இவர் மாதந்தோறும் லாட்டரி சீட்டு வாங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார். கடந்த 15 ஆண்டுகளாக லாட்டரி சீட்டு வாங்கும் இவருக்கு ஒரு முறை கூட பரிசு கிடைத்ததில்லை. இதற்காக மனைவியிடம் திட்டு வாங்குவதையும் வழக்கமாக கொண்டுள்ளார். கடந்த மாதம் கூட 1,000 திர்காமுக்கு லாட்டரி சீட்டு வாங்கினார்.

இந்நிலையில், கூட்டாக சேர்ந்து லாட்டரி சீட்டு வாங்க உறவினரும் அவருடைய இரு நண்பர்களும் விபீஸ்-க்கு அழைப்பு விடுத்தனர். அப்போது அவர்களிடம் நான் ஏற்கெனவே 1,000 திர்காமுக்கு லாட்டரி சீட்டுகள் வாங்கியுள்ளதாக கூறியுள்ளார். அவர்களின் வற்புறுத்தல் காரணமாக, 15 மில்லியன் திர்காம் பரிசுத் தொகையுள்ள லாட்டரி சீட்டை கூட்டாக வாங்கினார்.

இந்நிலையில், லாட்டரி சீட்டு நிறுவனத்திடம் இருந்து போன் வந்துள்ளது. வழக்கம் போல் லாட்டரி சீட்டு வாங்குவதற்காக அழைப்பார்கள் என விபீஸ் நினைத்தார். ஆனால், அவர் கூட்டாக வாங்கிய லாட்டரிக்கு 25 மில்லியன் திர்காம் பரிசு விழுந்துள்ளதாக தெரிவித்தனர். இத்தகவலை முதலில் நம்ப மறுத்த விபீஸ் தனது மனைவியிடம் தகவல் தெரிவித்து ஆன்லைனில் சரிபார்க்கச் சொன்னார். லாட்டரி சீட்டு பரிசு பெற்றவர் பட்டியலில் விபீஸ் பள்ளியாளி பெயர் இருப்பதை அவர் உறுதி செய்தார்.

நான்கு பேர் கூட்டாக சேர்ந்து அந்த லாட்டரியை வாங்கியதால், விபீஸ் பள்ளிக்கு அவரது பங்காக 4 மில்லியன் திர்ஹாம் (ரூ.10 கோடி) கிடைக்கும். இந்த பரிசுத் தொகையுடன் விபீஸ் இந்தியா திரும்பி பெங்களூருவில் படிக்கும் தனது மகள் வந்தனா பெயரில் சொத்துகள் வாங்க முடிவு செய்துள்ளார்.

## சுந்தர் பிச்சையின் சம்பளம் ரூ.6,300 கோடியாக உயர்வு

**வாஷிங்டன், மார்ச் 9:**

அமெரிக்காவின் ஆல்பபெட் குழுமத்தின் துணை நிறுவனமான கூகுள். இந்நிறுவனத்தில் தமிழகத்தைச் சேர்ந்த சுந்தர் பிச்சை கடந்த 2004-ல் பணியில் சேர்ந்தார். குரோம் மற்றும் ஆன்ட்ராய்ட் உருவாக்கத்தில் இவர் முக்கிய பங்காற்றினார். இதையடுத்து கடந்த 2015-ல் கூகுள் தலைமை செயல் அதிகாரி (சிஇஓ) ஆனார்.

இவர் சிஇஓ ஆனதிலிருந்து கூகுள் நிறுவனத்தின் சந்தை மதிப்பு 535 பில்லியன் டாலரில் இருந்து 3.6 டிரில்லியனாக கிடுகிடுவென உயர்ந்தது.

இந் நிலையில், சுந்தர் பிச்சையின் மொத்த சம்பளத்தை அடுத்த 3 ஆண்டுகளுக்கு 692 மில்லியன் டாலராக (ரூ.6,300 கோடி) கூகுள் நிறுவனம் உயர்த்தியுள்ளது.

இதன் மூலம் உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் சிஇஓ என்ற பெருமையை சுந்தர் பிச்சை பெற்றுள்ளார். மைக்ரோசாப்ட் சிஇஓ சத்ய நாதெல்லா 96.5 மில்லியன் டாலர் சம்பளம் பெறுகிறார். ஆப்பிள் நிறுவன சிஇஓ டிம் குக் சம்பளம் 74.3 மில்லியன் டாலர் என்பது குறிப்பிடத்தக்கது.

# “ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்த போகிறோம்” - அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், மார்ச் 9:**



ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே போர் நடை பெற்று வருகிறது. இந்த போர் 8-வது நாளாக நேற்றும் நீடித்தது. ஈரானில் இதுவரை 1,332 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். ஈரானின் வான் பாதுகாப்பு கவசங்களில் 80 சதவீதம் அழிக்கப்பட்டு உள்ளது. ஈரான் கடற்படையின் 30 போர்க்கப்பல்கள் தகர்க்கப்பட்டு உள்ளன.

அந்த நாட்டு விமானப் படையில் 8 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு உள்ளன. அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலில் ஈரான் தலைநகர் டெஹ்ரான் உட்பட 174 நகரங்களின் அரசு கட்டமைப்புகள் தரைமட்டமாக்கப்பட்டு உள்ளன. இந்த சூழலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: அண்டை நாடுகள் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என்று ஈரான் அறிவித்துள்ளது. மேலும் அண்டை நாடுகளிடம் மன்னிப்பும் கோரியுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஈரான் இந்த முடிவை எடுத்துள்ளது. அந்த நாட்டின் அத்துமீறல்களால் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய கிழக்கின் அமைதி பாதிக்கப்பட்டு உள்ளது. தற்போது ஈரானின் அத்துமீறல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது. மிகப் பெரிய இழப்பை அந்த நாடு சந்தித்து உள்ளது. அந்த நாட்டை நரகத்துக்கு தள்ளி உள்ளோம். இதற்காக ஈரானின் அண்டை நாடுகள், எனக்கு நன்றி தெரிவித்துள்ளன. இன்றைய தினம் (சனிக்கிழமை) ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். ஈரான் சரண் அடையும். இல்லையெனில் முழுமையாக வீழ்ச்சி அடையும். ஈரான் ஆட்சியாளர்களின் தவறான நடவடிக்கைகளால் மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## MH 370 விமானத்தை தேடும் பணியை நீட்டிக்க மலேசிய அரசுக்கு பயணிகளின் குடும்பத்தினர் வலியுறுத்தல்




**கோலாலம்பூர், மார்ச் 9:**

கடந்த 2014-ல் 227 பயணிகள் மற்றும் 12 விமானக் குழுவினருடன் மாயமான மலேசிய ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.எச்-370 விமானத்தை தேடும் பணியை நீட்டிக்க வேண்டுமென மலேசிய அரசுக்கு பயணிகளின் குடும்பத்தினர் வலியுறுத்தி உள்ளனர்.

2014-ல் இதே நாளில் (மாதம் 8) மலேசியாவிலிருந்து சீனாவின் பெய்ஜிங்கிற்கு புறப்பட்ட போயிங் 777 ரகத்தை சேர்நத் எம்.எச்-370 விமானம் புறப்பட்ட சில மணி நேரத்தில் காணாமல் போனது. இதனைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளின் கடற்படைகளும், விமானப் படைகளும் அந்த விமானத்தைக் கண்டுபிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தன. இருப்பினும் விமானத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த விமானத்தை தேடும் பணியை அமெரிக்காவை சேர்ந்த ஆழ்கடல் ஆய்வு நிறுவனமான ‘ஓசியன் இன்ஃபினிட்டி’ நிறுவனம், மலேசிய அரசுடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. மாயமான விமானத்தை தேடும் பணியானது வானிலை சூழல், ஒப்பந்த விவகாரம் உள்ளிட்ட காரணங்களால் இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் தொடங்கியது உண்டு.

இந்த சூழலில் விமானம் மாயமாகி 12 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் அந்த விமானத்தில் பயணித்த பயணிகளின் குடும்பத்தினர் இணைந்து நிறுவியுள்ள ‘வாய்ஸ் 370’ குழு, தேடுதல் பணியை மலேசிய அரசு நீட்டிக்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளது. ஓசியன் இன்ஃபினிட்டி நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை மலேசிய அரசு நீட்டிக்க வேண்டும். வரும் ஜூன் மாதத்துடன் இந்த ஒப்பந்தம் நிறைவடைய உள்ளது குறிப்பிடத்தக்கது. அதனால் ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வரும் விதிமுறைகளையின் அடிப்படையில் ஒப்பந்தத்தை நீட்டிக்கலாம் என அந்த குழு அரசுக்கு தெரிவித்துள்ளது.

## சரணடைய வேண்டும் என்ற ட்ரம்ப்பின் கோரிக்கையை நிராகரித்த ஈரான் அதிபர் மசூத்!

**தெஹ்ரான், மார்ச் 9:**

வளைகுடா நாடுகள் மீதான தாக்குதல்களுக்காக ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் நேற்று மன்னிப்பு கோரினார். அதேநேரம் சரணடைய வேண்டும் என்ற ட்ரம்பின் கோரிக்கையை நிராகரித்தார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உட்பட முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, அமெரிக்க படைத்தலங்கள் அமைந்துள்ள வளைகுடா நாடுகள் மற்றும் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு இஸ்ரேலும் தாக்குதல் நடத்தி வருகிறது.

காமேனி கொல்லப்பட்ட பிறகு ஈரானை நிர்வகித்து வரும் மூன்று பேர் கொண்ட இடைக்காலத் தலைமைக் குழுவில் அந்நாட்டு அதிபர் மசூத் பெசஷ்கியான் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், பெசஷ்கியான் அரசு தொலைக்காட்சியில் நேற்று உரையாற்றும் போது,“ஈரானால் தாக்கப்பட்ட அண்டை நாடுகளிடம் என் சார்பாகவும், ஈரான் சார்பாகவும் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் எந்த அண்டை நாடுகளின் மீதும் தாக்குதல் நடத்தப்படாது என்றும், ஈரானைத் தாக்காத நாடுகள் மீது ஏவுகணைகள் ஏவப்படாது என்றும் இடைக்காலத் தலைமைக்குழு ஒப்புக்கொண்டுள்ளது.

ஈரானிய மக்கள் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என்ற எதிரிகளின் (ட்ரம்ப்) ஆசை, அவர்களின் கல்லறை யோடுதான் போகும்” என்றார்.

முன்னதாக இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறும்போது, “ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படை (ஐஆர்ஜிசி) தற்போது சுயாதீனமாக செயல்பட்டு வருகிறது. எந்த இலக்குகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்குமாறு எங்களது ஆயுதப் படைகளுக்கு ஏற்கெனவே அறிவுறுத்தி உள்ளோம்.

உண்மையில், எங்களது ராணுவப் பிரிவுகள் இப்போது முன்கூட்டியே வழங்கப்பட்ட பொதுவான வழிமுறைகளின் அடிப்படையில் ஓரளவு தனித்தே செயல்பட்டு வருகின்றன” என்றார்.

## ஈரானில் பள்ளி மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தவில்லை: டிரம்ப்

**வாஷிங்டன், மார்ச் 9:**

ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதைத் தொடர்ந்து சரண் அடையுமாறு ஈரானை அமெரிக்க அதிபர் டிரம்ப் ஏற்கனவே எச்சரித்து இருந்தார். ஆனால் சரண் அடையும் பேச்சுக்கே இடமில்லை. சரண் அடைய மாட்டோம் என்று ஈரான் அதிபர் மசூத் பதிலடி கொடுத்து இருந்தார். அதோடு தாக்குதலுக்காக அவர் வளைகுடா நாடுகளிடம் மன்னிப்பும் கேட்டிருந்தார். இந்த நிலையில் ஈரானுக்கு டிரம்ப் புதிய எச்சரிக்கை விடுத்தார். மிகவும் கடுமையாக தாக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டிரம்ப் தனது வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:-

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடர் தாக்குதல்களால் ஈரான் சிதைந்துள்ளது.ஈரான் தனது அண்டை நாடுகளிடம் மன்னிப்பு கேட்டுள்ளது. இனி அண்டை நாடுகளை தாக்க மாட்டோம் என்று உறுதி அளித்துள்ளது. அமெரிக்கா-இஸ்ரேல் தாக்குதல்களால் இந்த உறுதி அளிக்கப்பட்டது. ஈரான் முன்பு மத்திய கிழக்கை ஆள விரும்பியது, ஆனால் இப்போது தோல்வியடைந்துள்ளது. ஈரான் நாட்டின் அண்டை நாடுகள் “நன்றி அதிபர் டிரம்ப்” என்று கூறி வருகின்றனர். அதற்கு நான் வரவேற்கிறேன் என்று பதில் அளித்துள்ளேன்.

அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எனக்கு ஆர்வம் இல்லை. ஈரான் நிபந்தனையின்றி சரண் அடைய வேண்டும். ராணுவம் அல்லது அதிகாரத்தில் மீதமுள்ள எந்த தலைமையும் இல்லாதபோதுதான் போர் முடிவடையும். அடுத்த தலைவரை தேர்ந்தெடுப்பதில் நான் ஈடுபட விரும்புகிறேன். அமெரிக்காவை போருக்கு கொண்டு செல்லாத ஒரு அதிபரை தேர்ந்தெடுக்க விரும்புகிறோம். ஈரானுக்கு எதிரான போரில் வெற்றி பெற்று வருகிறோம். அவர்களின் கடற்படை, விமானப்படையை அழித்து விட்டோம். சிறிது காலம் போர் தொடரும். அவர்களின் பெரும்பாலான ஏவுகணைகளை நாங்கள் அழித்துவிட்டோம். ஈரானின் பெண்கள் பள்ளியின் மீதான தாக்குதலில் அமெரிக்காவுக்கு தொடர்பு இல்லை. அந்த தாக்குதல் ஈரானால் நடத்தப்பட்டது. ஏனென்றால் அவர்கள் துல்லியமாக இலக்குகளை குறிவைத்து தாக்குபவர்கள் அல்ல. ஆகவே, ஈரானே அந்த தாக்குதலை நடத்தியது. இவ்வாறு டிரம்ப் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

## ஈரானை உலுக்கும் தாக்குதல்கள்: பலி 1,300-ஐ கடந்தது!

ஈரானில் தாக்குதல்கள் தொடரும் அசாதாரண சூழலில், அங்கு நடைபெறும் போர் மற்றும் உள்நாட்டுப் போராட்டங்களில் பலியானோர் எண்ணிக்கை 1,300-ஐ கடந்தது. மேலும், ஒரு லட்சம் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் கடந்த பிப். 28 அன்று ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். தைத் தொடர்ந்து, ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா, கத்தார், பஹ்ரைன், குவைத் ஆகிய வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க தளங்களைக் குறிவைத்து ஈரானின் படைகள் தாக்கி வருவதால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த நிலையில், ஈரான் மீது மிகக் கடுமையான தாக்குதல் நடத்தப்படும் என்று எச்சரித்திருக்கிறார் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்.

சண்டை தொடங்கியது முதல் இதுவரை, பலியானோர் எண்ணிக்கை 1,300-ஐ கடந்திருப்பதாகவும், சுமார் ஒரு லட்சம் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தெற்கு உலகிற்கு நலன்: சீன அரசு விருப்பம்



இந்தியாவும் சீனாவும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தெற்கு உலகிற்கு நலன் என்று சீன அரசு தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காசிய போர் பதற்றமான சூழலில் இந்தியாவுடன் கைகோக்க சீனா விருப்பம் தெரிவித்துள்ளது சர்வதேச அரசியலில் முக்கியத்துவம் பெறுகிறது.

இதுகுறித்து,தலைநகர் பெய்ஜிங்கில்செய்தியாளர்களுடன் பேசிய சீன வெளியுறவு அமைச்சர் வாங்க் இ, “இந்தியாவும் சீனாவும் ஒருபடி மேலே போய் ஒருவருக்கொருவர் ஆதரவாகச் செயல்பட வேண்டும். அதன்மூலம், பிரிக்ஸ் தலைமைப் பதவியிலும் இரு நாடுகளும் அடுத்த இரண்டாண்டுகளுக்கு ஒருவரையொருவர் ஆதரவளிக்க வேண்டும். ஒருங்கிணைந்தால், நாம் தெற்குலகுக்கு புது நம்பிக்கையை கொண்டு வரலாம்” என்றார்.

## இஸ்ரேல் தாக்குதலில் லெபனானில் 12 பேர் பலி: பதிலடியாக பஹ்ரைனில் ஈரான் தாக்குதல்!

**பெய்ரூட், மார்ச் 9:**



பெய்ரூட்டில் நடந்த தாக்குதல்கள்களில் ஈரானின் புரட்சிகர ராணுவத்தின் குட்ஸ் படையின் லெபனான் பிரிவு தளபதிகளை குறிவைத்ததாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையில், ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் தாக்கியதில் குவைத்தில் இரண்டு எல்லை காவல் வீரர்கள் கொல்லப்பட்டனர்.

சனிக்கிழமை (மார்ச் 7), தெஹ்ரான் நகரத்திலும் அதற்கு அருகிலும் உள்ள எண்ணெய் கிடங்குகளில் அமெரிக்க-இஸ்ரேல் ஏவுகணைகள் தாக்கியது. எண்ணெய் கிடங்கு தாக்குதல்களுக்குப் பிறகு தெஹ்ரானில் எரிபொருள் விநியோகம் ‘தற்காலிகமாக’ நிறுத்தப்பட்டுள்ளது என்று தெஹ்ரானின் ஆளுநர் முகமது சதேக் மோட்டமெடியன் கூறினார். அதேபோல, ஈரானின் மத்திய யாஸ்த் மாகாணத்தில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதல்களில் பாதிப்பு என்ன என்பது உடனடியாகத் தெளிவாகத் தெரியவில்லை.

“நேற்று இரவு, ஈரான் தலைநகர் தெஹ்ரான் மற்றும் அல்போர்ஸில் உள்ள நான்கு எண்ணெய் கிடங்குகள் மற்றும் ஒரு பெட்ரோலியப் பொருட்கள் போக்குவரத்து மையம் எதிரி விமானங்களால் தாக்கப்பட்டன” என்று ஈரான் எண்ணெய்பொருட்கள் விநியோக நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கெராமத் வெய்ஸ்கராமி தெரிவித்தார். ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலில் கடல் நீரை குடிநீராக்கும் ஆலை சேதமடைந்ததாக பஹ்ரைனின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பதிலடி கொடுப்போம்: “நம் எதிரிகள் எந்தவொரு நாட்டையும் பயன்படுத்தி நமது நிலத்தைத் தாக்க அல்லது ஆக்கிரமிக்க முயன்றால், அந்தத் தாக்குதலுக்கு நாம் பதிலளிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். பதிலளிப்பது என்பது அந்த நாட்டோடு நமக்கு தகராறுகள் இருப்பதாகவோ அல்லது அதன் மக்களுக்கு தீங்கு விளைவிக்க விரும்புவதாகவோ அர்த்தமல்ல - தேவையின் காரணமாக நாங்கள் பதிலடி கொடுப்போம்” என்று ஈரான் பிரதமர் மசூத் பெசெஷ்கியன் கூறினார்.



# டி20 உலகக் கோப்பை: 3-வது முறையாக இந்தியா சாம்பியன்!

## சபாநாயகர் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம்: பாராளுமன்றம் கூடுகிறது



## அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் த.வெ.க.வை இணைக்க முயற்சி!?

## தூத்துக்குடியில் 800 கிலோ வெடி பொருட்கள் பறிமுதல்: போலீஸ் விசாரணை

## சுந்தர் பிச்சையின் சம்பளம் ரூ.6,300 கோடியாக உயர்வு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 09.03.2026 திங்கட்கிழமை இலவச இ-பேப்பர்